# மாணவர்களுக்கான
# கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி

# ITI முதல்
# IAS வரை



ப.சரவணன், B.Sc. (Ag.) MBA, M.Phil, FTA,

# மாணவர்களுக்கான
# கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி
***(ஐ.டி.ஐ. முதல் ஐ.ஏ.எஸ். வரை)***

*ஆசிரியர் :*

**ப. சரவணன்** *பி.எஸ்.சி. (விவ)., எம்.பி.ஏ., எம்ஃபில், எப்.டி.ஏ.*

*வெளியீடு :*

**மலைமகள் கல்வி சமூக பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம்**

*கதவு எண் : 31/21, மருதம், புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, தஞ்சாவூர் – 613 005.*

## நூல் விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மாணவர்களுக்கான கல்வி, வேலை வாய்ப்பு வழிகாட்டி |
| ஆசிரியர் | : | ப. சரவணன் |
| நூலின் அளவு | : | டபுள் டெம்மி |
| தாள் | : | வெள்ளை |
| பதிப்பாண்டு | : | 2016 |
| கட்டமைப்பு | : | அட்டைக்கட்டு |
| அச்செழுத்தின் அளவு | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 200 |
| விலை | : | ₹ 100/- |
| கணிப்பொறி அச்சு | : | திருவள்ளுவர் வரைகலையகம்<br>சென்னை – 600 043<br>தொலைபேசி : 044 – 2266 3160<br>கைப்பேசி : 98406 28098 |
| வெளியீடு | : | மலைமகள் கல்வி சமூக பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம்<br>கதவு எண் : 31/21, மருதம்,<br>புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு,<br>தஞ்சாவூர் – 613 005. |

# சமர்ப்பணம்

*அறுபது ஆண்டுகளுக்கு முன்னால்*
*அன்று சித்திரை முதல் நாள் – மதிய வேளை*
*அன்னை தன் பதினான்கு வயது பாலகனை*
*அருகில் அழைக்கிறாள்*
*அன்போடு கையோடுகை அணைக்கிறாள்.*
*அமுதமொழி பகர்கிறாள்!*
**"நல்லாப் படிக்கணும்**
**நல்ல பெயரெடுக்கணும்"**
*அவ்வளவே!*
*அவள் முகத்தில் ஆழ்ந்த அமைதி!!*
*அன்னை தன் மகற்காற்றும்*
*அறுதிக்கடமையென நினைத்தாளோ?*
*அறியான் அந்தப் பாலகன்!*
*அன்றுமாலை ஆறுமணிக்கு*
*அன்னையின் உயிர் அடங்கிற்று*
*அழுதான் அரற்றினான்*
*அன்னையின் அன்புக்கு ஏங்கினான்*
*அதையடுத்து...*
*அவனுக்குத் தெளிவும் பிறந்தது*
*அன்னையின் அறிவுரை*
*அவன் மனதில் ஆழமாய்ப் பதிந்தது*
*அறிவொளி பெற வேண்டும்!*
*அதுவே அன்னையின் ஆசை*
*அப்பாவின் ஆசையும் அதுவே.*
*அவனோ வழி அறிந்தானில்லை*
*அதற்கான பொருள் வளமுமில்லை*
*அறிவுறுத்த யாருமில்லை*
*அலைந்தான்! என்ன படிக்க? எங்கு படிக்க?*
*அடியொன்றிலும் விழுந்தான்... எழுந்தான்*
*அளவில்லாத் துயரம்...*
*அவனும் விடவில்லை*
*அறிவியலில் வேளாண்மை*
*அதற்குமேல்... எம்.பி.ஏ., எம்.ஃபில்*
*அத்தனையும் அவன் படிக்க*
*அடைந்த துயர் கொஞ்சமல்ல*
*அன்று அவன் பட்டதுயர்*
*அடுத்தவர் படக்கூடாதென்று*

அவன் மனதில் விழுந்த விதை
அதன் விளையே இந்நூல்!
அடுத்தடுத்து ஐந்து பதிப்புகள் கண்ட
அறிவுக்களஞ்சியம்!
அத்தனையும் விலையில்லா நூலாக மாணவர்கையில்!
அமுதமொழி சொல்லி ஆற்றுப்படுத்திய
அந்த மலைமகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

***



*தஞ்சாவூர்*
*06.12.2016*

**R. திருவளர்செல்வி M.A., M. Phil., B.Ed.**
*முதன்மைக் கல்வி அலுவலர்*
*தஞ்சாவூர்*

# அணிந்துரை

*மலைமகள் கல்வி சமூக பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம், தஞ்சாவூர், தனது கல்விப்பணியின் ஓர் அங்கமாக **“ஐடிஐ முதல் ஐஏஎஸ் வரை”** என்ற தலைப்பில் மாணவர் வழிகாட்டி நூலை வெளியிட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்கு விலையில்லா நூலாக வழங்கி வருகின்றது. அதுபோன்றே, இவ்வாண்டு வெளியிடப்படும் ஐந்தாவது பதிப்பான இந்நூலை தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளுக்கு விலையில்லா நூலாக வழங்க முன்வந்துள்ளது பள்ளிக் கல்வி முடித்து மேற்கல்வி. வேலைவாய்ப்பு, சுயதொழில் என பல்வேறு துறைகளில் ஈடுபட விரும்புவோர்க்கு பயனுள்ள வகையில் மருத்துவம், இன்சினியரிங், சட்டம், கல்விக்கடன், கல்வி உதவித்தொகை, நுழைவுத்தேர்வுகள், சுயதொழிற் பயிற்சிகள் என 90 தலைப்புகளில் விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மட்டுமல்ல, பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளுக்கு வழிகாட்டுவதற்கு தெரிந்து கொள்ள வேண்டிய விபரங்கள் இந்நூலில் உள்ளன. மாணவர்கள் இந்நூலில் உள்ள விபரங்களைப் படித்து, சிந்தித்து, தங்களுக்கு விருப்பமுள்ள துறையைத் தேர்ந்தெடுத்து அத்துறையில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றேன். இந்த நற்பணியில் தொடர்ந்து ஈடுபட்டுவரும் மலைமகள் கல்வி சமூக பண்பாட்டு வளர்ச்சி நிறுவனத்திற்கு எனது பாராட்டுதலையும் வாழ்த்தையும் உரித்தாக்குகின்றேன்.*

**R. Thiruvalarselvi M.A., M.Phil., B.Ed.**
**CEO / Thanjavur**

***

சென்னை–44
26.12.2016



தமிழ்ப்பணிச் செம்மல்
திருக்குறள் அரசு
வேளாண் பெருந்தகை
**M.J.F.Ln. Agri. Dr. கி. *முத்தையன்,* B.Sc. (Ag), D.A.H., M.B.A., D.Lit.**
ஆசிரியர். கோமுகி கல்வி

# வாழ்த்துரை

*கற்க கசடற கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

*– குறள்*

*பள்ளியில் படித்ததை மறந்தது போக மிச்சம் இருப்பதுதான் கல்வி. மதிப்பெண் அடிப்படையிலேயே இன்றைய கல்வி முறை அமைந்துவிட்டது. இதன் காரணமாக வளரும் இளம் சமுதாயத்துக்கு திறமையோ, திறன் மேம்பாடோ இயற்கையாக அமையாமல் போய் விடுகிறது.*

*படிக்கின்ற காலத்திலேயே தன்னுடைய எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பதை மாணவப் பருவத்திலேயே அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூற வேண்டும். அப்போது தான் 10ஆம் வகுப்பு, +2 முடித்து விட்டு வெளியே வரும் மாணவர்களுக்கு வெளி உலகத்தின் வெளிச்சம் புரியும்.*

*இதனைஅடிப்படையாகக் கொண்டு **மலைமகள் கல்வி சமூக மேம்பாட்டு வளர்ச்சி நிறுவனத் தலைவர் ப. சரவணன்** அவர்கள் **ஐ.டி.ஐ. முதல் ஐ.ஏ.எஸ். வரை** என்ற மாணவர்களுக்கான கல்வி தொழில் வழிகாட்டி நூலைத் தயாரித்துள்ளார். இது ஒரு கூறுதற்கறிய அரும் செயல் என்று சொன்னால் அதையும்தாண்டி கிராமப்புற ஏழை பள்ளி மாணவர்களுக்கு இதை விலை இல்லா நுலாக வழங்கிடவும் முனைந்து வெளிவந்துள்ள செயல் பாராட்டுதலுக்கும் மேம்பட்டு உயர்ந்துள்ளது.*

*சமுதாயத்தின் மீதும் இளம் மாணவர்கள் மீதும், நாட்டின் வளர்ச்சி மீதும் அக்கறை கொண்டுள்ள ப. சரவணனின் செயல் பாராட்டத்தக்கதாகும்.*

*மலைமகள் கல்வி அறக்கட்டளையின் சீரிய பணி மென்மேலும் வளர உளங் கனிந்த வாழ்த்துகள்,*

*அன்போடு,*

***(கி. முத்தையன்)***

***



*தஞ்சாவூர்*
*04.12.2016*

# என்னுரை

*அன்புநிறை மாணவனே... மாணவியே...*

**"Great works are performed, not by strength, but by Perseverance" - Samuel Johnson**

*பலருக்கும் பிடித்த வார்த்தைகள் இவை. எனக்கும் பிடிக்கும். உனக்கும் பிடிக்கும் என நினைக்கின்றேன்.*

*இதன் தமிழாக்கம் : **"மாபெரும் செயல்களைச் செய்தல், வலிமையினால் அல்ல, விடாமுயற்சியாலே".** இந்த அறிவார்ந்த வார்த்தைகளின் அர்த்தத்தை சற்றே சிந்தித்துப் பார்!*

*தென் ஆப்பிரிக்காவில் சாதாரண வழக்கறிஞராக பணியாற்றிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, பாரத தேசத்தின் விடிவெள்ளியாய் வந்து, தேச விடுதலை வாங்கித் தந்து, அதே விடுதலை வேள்வியில் தன்னயே ஆகுருதியாக்கி மகாத்மா காந்தியானார். அவருடைய பின்புலம் என்ன பெரிதா?*

*கல்வி பெற மனம் நிறைய ஆவல் இருந்தும் அதற்கான பொருளாதார வசதி இல்லாமல் திண்டாடிய பீம் ராவ் அம்பேத்கர், இந்தியாவில் பி.ஏ., பின்னர் அமெரிக்கா, இங்கிலாந்து சென்று எம்.ஏ., எம்.எஸ்ஸி., பி.எச்டி, டிஎஸ்ஸி, எல்எல்டி, பாரிஸ்டர் அட் லா படித்து பாரதம் திரும்பி இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை இயற்ற முடிந்தது எதனால்?*

*பள்ளி செல்ல சில்லறைக்காசுகள் கூட இல்லாத நிலையில், தினமும் புத்தகச்சுமையை தலையிலே ஏந்தி ஆற்றில் இறங்கி தன் உடையெல்லாம் நனைய தண்ணீரில் நடந்து படித்த, எளிமையின் மறுஉருவமான லால்பகதூர் சாஸ்திரி பாரதப் பிரதமர் ஆனது எப்படி?*

*புகைவண்டியில் ஆய்வுப் பணியை மேற்கொண்ட காரணத்திற்காக கன்னத்தில் அறைவாங்கி செவித்திறன் இழந்த தாமஸ் ஆல்வா எடிசன் ஆயிரம் கண்டுபிடிப்புகளுக்கு சொந்தக்காரனாக மாறியது எவ்வாறு?*

*தன் தேசத்தில் நிலவும் இனவேற்றுமையைக் கலைவேன் என்ற கனவுடன் இருப்பத்தேழு ஆண்டுகள் காராக்கிரகத்தில் காத்திருந்த நெல்சன் மண்டேலாவின் பின்னணி என்ன?*

*ஏன் அவ்வளவு தூரம்! நம் தமிழ்நாட்டில் எளிய குடும்பத்தில் பிறந்து கஷ்டப்பட்டு கல்வி கற்று, கடும்பணி ஆற்றி இந்த மாபெரும் தேசத்தின் முதல் குடிமகனாக ஆனாரே நமது மதிப்பிற்குரிய பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம்... அவருடைய பின்புலம் என்ன பெரிதா?*

*இதற்குமேல் தேவையில்லை என நினைக்கிறேன். மேலே கண்ட பொன்மொழியைப் புரிந்து கொள்ள.*

மாணவனே... மாணவியே... நீ ஏழைக்குடும்பத்தில் பிறந்திருக்கலாம். உன் தாய் தந்தை உழுதொழில் செய்யலாம். ஏன் தினக்கூலியாகக் கூட இருக்கலாம்.

நீ உடுத்துவதற்கு நல்ல துணிமணிகள் இல்லாமல் இருக்கலாம்.

நீ உண்பதற்கு நல்ல உணவு கிடைக்காமல் இருக்கலாம்.

இவை யாவும் நீ தடம்பதிக்கும் பாதையில் தடைகளாக வராமல் பார்த்துக் கொள்.

உன்னுள் ஓர் ஆசையை வளர்த்துக்கொள். அதை நீ அடைய விரும்பும் இலக்காக மாற்று. இந்த இலக்கு உன் இதயத்தில் அணையா நெருப்பாக கனன்று கொண்டிருக்கட்டும்.

உன் ஆசை என்னவாகவோ இருக்கட்டும். அரசியலோ, அரசுப்பணியோ, ஆய்வுப்பணியோ ஆசு நீக்கும் ஆசிரியப்பணியோ, பொறியியலோ....மருத்துவமோ.... வேளாண்மையோ..... சமூகப்பணியோ....சுயதொழிலோ..... எதுவானாலும் சரி.....

ஆனால் நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் உன் இலக்கை நோக்கியதாக இருக்கட்டும்.

ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களைக் குவித்த கார்ல் லிவிஸ் **(Carl Lewis)** தனக்குப் பிடித்தமான வார்த்தைகள் என்று சொன்னது.

**"Never look to the ground for your next step. Greatness belongs to those who look to the horizon."**

***"உன்னுடைய அடுத்த அடிக்கு தரையைப் பார்க்காதே. பேரும் புகழும் எட்டத்தெரியும் வானத்தின் எல்லையைப் பார்ப்பவர்களுக்கே உரியது!"***

இன்றைக்கு நீ செய்யவேண்டியது ஒன்றுதான்! படி... படி... காலையில்படி... மதியத்தில் படி... மாலையில்படி... பள்ளியில் படி... வீதியில் படி... படிப்பு ஒன்றே உன் மூச்சாக இருக்கட்டும். நீ அடியெடுத்து வைக்கவுள்ள உயர்கல்வி நிலையம்... நீ படிக்கப்போகும் படிப்பு... நீ செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம்... படிப்பு முடிந்த நிலையில் நீ பணியாற்றப்போகும் நிறுவனம்... உனக்குக் கிடைக்கவுள்ள பதவி, பணம் இவை அனைத்தையும் தீர்மானிக்க பிரதானமாக எடுத்துக் கொள்ளப்படுவது எது தெரியுமா? மார்க்! மார்க்! மார்க்!! ஆம். உயர்ந்த மதிப்பெண்ணே நீ பெறப்போகும் வெற்றிக்கனியாக இருக்கட்டும். நீ சேரப்போகும் உயர்கல்வி நிலையமே உன்னை வழிநடத்தும் ஒளி விளக்காகட்டும். வாழ்க்கையில் நீ அடையப்போகும் வெற்றிகள் உனக்கும், உன் பெற்றோருக்கும் உன்னை வழி நடத்தியோருக்கும் பெருமை சேர்க்கட்டும்.

நல் வாழ்த்துகள்.

அன்பன்,

**ப. சரவணன்**

***

# பதிப்புரை

மேற்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் பற்றி மாணவர்களும், பெற்றோர்களும் தெரிந்திருக்க வேண்டிய விபரங்களைத் தொகுத்து **“ஐ.டி.ஐ. முதல் ஐ.ஏ.எஸ். வரை”** என்ற மாணவர் வழிகாட்டி நூலை தங்களது கல்விப்பணியின் ஓர் அங்கமாக, தஞ்சாவூர், மலைமகள் கல்வி சமூக பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. 2005ஆம் ஆண்டு தொடங்கி, 2008, 2010, 2013–ம் ஆண்டுகளில் நான்கு பதிப்புகளை இதுவரை வெளியிட்டுள்ளோம். இவற்றின் பிரதிகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் நூலகங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு வெளியிடப்படும் ஐந்தாவது பதிப்பான இந்நூலில் கல்வி வேலைவாய்ப்புத் துறைகளில் ஏற்பட்டுள்ள சமீபத்திய மாற்றங்களும் புதிய சில தலைப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூலின் பிரதிகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளின் நூலகங்களுக்கு இலவசமாக வழங்கப்படும். மேலும் மிகவும் பின்தங்கியுள்ள பகுதிகளில் உள்ள பள்ளிகளில் படிக்கும் பத்தாவது மற்றும் பன்னிரெண்டாவது மாணவ மாணவியர்க்கு வழிகாட்டும் நிகழ்ச்சிகள் நடத்தி இந்நூல் வழங்கப்படும். மாணவச் செல்வங்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ள விபரங்களை நன்கு படித்துத் தெரிந்து கொண்டு மேற்கல்வி கற்று தங்களது எதிர்காலத்தை வளமானதாக்கிக் கொள்ளலாம். பல்வேறு துறைகளிலும் உள்ள படிப்புகள் மற்றும் வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட விபரங்களைத் தொகுத்து ஒரே வெளியீடாக கொண்டு வந்திருப்பதுதான் இந்நூலின் சிறப்பு.

மொத்தம் உள்ள 90 தலைப்புகள் ஆறு பிரிவுகளாக தரப்பட்டுள்ளன.

1. தொழிற்பயிற்சிகள்
2. சயின்ஸ் & டெக்னாலஜி
3. ஜெனரல் ஸ்டடீஸ்
4. பல்கலைக்கழகங்கள்
5. சர்வீஸ் கமிஷன்ஸ்
6. பொதுத் தலைப்புகள்

இந்நூல் மாணவர்களுக்கு மட்டுமல்ல பெற்றோர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும், கல்வியாளர்களுக்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

இந்நூலில் இடம்பெற்ற விபரங்களை தாங்கள் சார்ந்த நிறுவனங்கள் மூலமாகவோ தனிப்பட்ட முறையிலோ தந்து உதவிய நல்ல உள்ளங்களுக்கு மலைமகள் நிறுவனத்தின் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம். கோயமுத்தூர் தேசிய பஞ்சாலைக்கழகத்தின் முன்னாள் பிராந்திய இயக்குனரும் தற்போது மும்பையில் இந்திய பருத்திக் கழகத்தின் சேர்மன் மற்றும் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றும் திரு. **எம்.எம். சொக்கலிங்கம்,** எம்.டெக். அவர்கள் இந்நூலை வெளியிட உதவியமைக்கு எங்களது நன்றியை உரித்தாக்குகின்றோம். ஒளியச்சுப் பணிகளை குறுகிய காலத்திற்குள் சிறப்பாக செய்து

கொடுத்த சென்னை, திருவள்ளுவர் வரைகலையகத்திற்கு எங்களது நன்றியை உரித்தாக்குகின்றோம். இந்நூலை உருவாக்குவதில் பல்வகையிலும் உதவிய சென்னை, பொன் புத்தகாலயா நிறுவனத்தின் திரு. கி. முத்தையன் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்வி எனும் பெருங்கடலில் நீந்தத் துடிக்கும் இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டும் ஒளி விளக்காக இந்நூல் பயன்பட்டு, எங்கள் நோக்கம் நிறைவேறும் மகிழ்வில், இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர விழைகின்றோம்.

**மலைமகள் கல்வி சமூக பண்பாட்டு வளர்ச்சி நிறுவனம்**
கதவு எண் : 31/21, மருதம்,
புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு,
தஞ்சாவூர் – 613 005.

***

# பொருளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| **I.** | ***தொழிற்பயிற்சிகள்*** | ***14*** |
| *1.* | ஐ.டி.ஐ. படிப்புகள் | *14* |
| *2.* | பாலிடெக்னிக் படிப்புகள் | *19* |
| *3.* | தட்டெழுத்து/சுருக்கெழுத்துப் பயிற்சி | *22* |
| *4.* | கால்சென்டர் பயிற்சி | *28* |
| *5.* | கூட்டுறவு மேலாண்மை பட்டயப்பயிற்சி | *29* |
| *6.* | ஆசிரியர் பயிற்சி | *30* |
| *7.* | மத்திய அரசு **SISI** பயிற்சிகள் | *32* |
| *8.* | சாலைப் போக்குவரத்து நிறுவன பயிற்சிகள் | *33* |
| *9.* | விமான பைலட்/ ஏர் ஹோஸ்டஸ் பயிற்சி | *34* |
| *10.* | மத்திய அரசு தொழில் பழகுனர் திட்டம் | *36* |
| *11.* | அட்வான்ஸ்ட் டிரையினிங் சென்டர் | *36* |
| *12.* | வேளாண்மை தொடர்பான தொழில் பயிற்சிகள் | *37* |
| *13.* | கால்நடை தொடர்பான பயிற்சிகள் | *37* |
| *14.* | ஃபயர் மற்றும் சேஃப்டி பயிற்சிகள் | *37* |
| **II.** | ***சயின்ஸ் & டெக்னாலஜி*** | ***39*** |
| *15.* | தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகள் | *39* |
| *16.* | ஆர்க்கிடெக்சர் | *50* |
| *17.* | ஏரோநாட்டிகல் இஞ்சினியரிங் | *53* |
| *18.* | மெக்ட்ரானிக்ஸ் இஞ்சினியரிங் | *53* |
| *19.* | இந்திய தொழில்நுட்பக் கழகம் **(IIT)** | *53* |
| *20.* | தேசிய தொழில்நுட்பக் கழகம் – திருச்சி **(NIIT)** | *57* |
| *21.* | கம்ப்யூட்டர்/ஐ.டி. படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு | *58* |
| *22.* | பொறியியலாளர் நிறுவனம் **(AMIE)** | *61* |
| *23.* | மருத்துவக்கல்வி | *62* |
| *24.* | கால்நடை மருத்துவம் | *75* |
| *25.* | மீன்வள அறிவியல் | *77* |
| *26.* | விவசாயம் | *79* |
| *27.* | இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் கிராப் பிராஸஸிங் டெக்னாலஜி, தஞ்சாவூர் | *81* |
| *28.* | லெதர் டெக்னாலஜி | *81* |
| *29.* | பிளாஸ்டிக் இன்ஜினியரிங் மற்றும் டெக்னாலஜி | *84* |
| *30.* | பேஷன் டெக்னாலஜி | *85* |

31. டெக்ஸ்டைல் டெக்னாலஜி 87
32. பால்வள அறிவியல் 90
33. பிரிண்டிங் டெக்னாலஜி 90
34. வனவியல் 91
35. கெமிக்கல் இன்ஜினியரிங் 91
36. மெர்ச்செண்ட் நேவி கல்வி நிறுவனங்கள் 93
37. உணவியல் மற்றும் உணவு பதனீட்டுத் தொழில் நுட்பம் 95
38. சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானம் 95
39. உயிர்த் தகவலியல் 97
40. நேனோ டெக்னாலஜி 98
41. பயோ டெக்னாலஜி / பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் 99
42. நூலகம் மற்றும் இன்ஃப்பர்மேஷன் அறிவியல் 101
43. பூகோள அறிவியல் 101
44. உலோகவியல் 103
45. விண்ணியல் 104
(இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்பேஸ் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி – திருவனந்துபுரம்)

**III. ஜெனரல் ஸ்டடீஸ் 105**

46. சட்டப்படிப்பு 105
47. திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கல்வி 108
48. ஓட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் கலை 109
49. கலை அறிவியல் கல்வி 112
50. உடற்கல்வி நிறுவனங்கள் 114
51. நுண்கலை படிப்புகள் 116
52. வங்கி மேலாண்மைப் படிப்புகள் 117
53. இன்சூரன்ஸ் துறையில் படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு 119
54. பேக்கேஜிங் துறை படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு 121
55. விஷுவல் கம்யூனிகேஷன் 122
56. ஊடகங்கள் படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு 123
57. இதழியல் (ஜர்னலிசம்) 124
58. அனிமேஷன் 125
59. டிசைனிங் 126
60. எம்.பி.ஏ. / எம்.சி.ஏ. 127
61. சுற்றுலாத்துறை படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு 129
62. கம்பெனி செக்ரட்டரி 131
63. சார்ட்டர்டு அக்கௌண்டன்ஸ் 133
64. காஸ்ட் அக்கௌண்டன்ஸ் 138
65. ஆக்சுயரி 139

**IV. பல்கலைக்கழகங்கள் 141**

66. தமிழநாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் 141
67. இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 143
68. தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் 145
69. அஞ்சல்வழிக் கல்வி (கம்ப்யூட்டர் படிப்புகள் உட்பட) 148
70. ராஜீவ் காந்தி நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் யூத் டெவலப்மெண்ட் 150

71. சென்ட்ரல் யுனிவர்சிட்டி ஆஃப் தமிழ்நாடு 151
72. திறந்தவெளிப் பள்ளியில் தொழிற்படிப்பு 151

**V. சர்வீஸ் கமிஷன்ஸ் 153**

73. ஸ்டாப் செலக்ஷன் கமிஷன் 153
74. இன்ஸ்டிடியூட் ஆஃப் பேங்கிங் பெர்சனல் செலக்ஷன் 154
75. இரெயில்வே ரெக்ரூட்மெண்ட் போர்டு 154
76. சீருடைப் பணியாளர்கள் தேர்வாணைக் குழுமம் 155
77. தமிழநாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (டி.என்.பி.எஸ்.ஸி) 156
78. யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (யு.பி.எஸ்.ஸி.) 159
79. சிவில் சர்வீஸ் தேர்வுகள் 161
80. கடற்படை – கமிஷன்ஸ் – கடற்பரை வீரர்கள் பணி 167
81. விமானப்படை – கமிஷன்ஸ் – விமானப்படை வீரர்கள் பணி 169
82. இராணுவம் – கமிஷன்ஸ் – ராணுவத்தில் சிப்பாய்ப் பணி 171
83. துணை ராணுவப் பிரிவுகள் 175

**VI. பொது தலைப்புகள் 176**

84. மேலைநாட்டில் மேற்படிப்பு 176
85. வங்கிகள் வழங்கும் கல்விக்கடன் 180
86. சுயதொழில் தொடங்குவது எப்படி? 184
87. வேலைவாய்ப்பு அலுவலகங்கள் 186
88. கல்வி உதவித்தொகை பற்றிய விபரங்கள் 188
89. பள்ளிக்கல்வி – தனித்தேர்வுகள் 196
90. அகில இந்திய அளவிலான முதன்மை நுழைவுத் தேர்வுகள் 198


***

# I. தொழிற்பயிற்சிகள்

## 1. ஐ.டி.ஐ. படிப்புகள்

10–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் அனைவருமே தொழிற்பயிற்சி நிறுவனங்களில் (ஐ.டி.ஐ.) சேர்ந்து பயிற்சி பெற்று சான்றிதழ் பெறலாம். இந்தப் படிப்பு முடித்தவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளும், தனியார் துறைகளில் வேலை வாய்ப்புகளும் நிறைய உண்டு. சுயமாகவும் தொழில் செய்ய முடியும். வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு பெறலாம்.

இந்தப் பயிற்சிகளுக்கான கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. என்று இருந்தபோதிலும் சில பயிற்சிகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி அவசியம் இல்லை. விண்ணப்பப் படிவம் தொழில் பயிற்சி நிலைய முதல்வரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தமிழ்நாடு முழுவதும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், தனியார் பயிற்சி நிலையங்களும் ஏராளமாக உள்ளன.

தமிழ்நாடு அரசு நடத்தும் ITI–களில் வழங்கப்படும் படிப்புகள் :

**பொறியியல் தொழிற்பிரிவுகள் (Engineering Trades) :**

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 1. | கம்மியர் (தொழிற்சாலை மின்னனுவியல்)<br>**Mechanic (Industrial Electronics)** | 2 |
| 2. | கம்மியர் (இயந்திரம் மற்றும் மின்னனுவியல்)<br>**Mechanic (Mechatronics)**<br>(மேற்கண்ட தொழில் பயிற்சிகளைப் பெற 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) | 2 |
| 3. | கம்மியர் (கணினி வண்பொருள்)<br>**(Computer Hardware)**<br>(10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்) | 1 |

கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் :

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 4. | பொறிப்பகுதி பொருத்துநர் **(Fitter)** | 2 |
| 5. | கடைசல் பிடிப்பவர் **(Turner)** | 2 |
| 6. | இயந்திர வேலையாள் **(Mechanist)** | 2 |
| 7. | இயந்திர வேலையாள் (அரவ இயந்திரம்) **Mechanist (Grinder)** | 2 |
| 8. | கம்மியர் (குளிர்பதனம் மற்றும் தட்பவெப்பநிலை கட்டுப்படுத்துதல்) **Mechanic (Refrigeration and Air-Conditoner)** | 2 |
| 9. | கம்மியர் பராமரிப்பு (இரசாயன சாதனம்) **Maintenance Mechanic (Chemical Plant)** | 2 |
| 10. | கம்மியர் கருவிகள் (இரசாயன சாதனம்) **Instrument Mechanice (Chemical Plant)** | 2 |
| 11. | கம்மியர் கருவிகள் **(Instrument Mechanic)** | 2 |
| 12. | கம்மியர் (மோட்டார் வண்டி) **Mechanic (Motor Vehicle)** | 2 |
| 13. | இயந்திரப்பட வரைவாளர் **Draughtsmen (Mechanical)** | 2 |
| 14. | கட்டடப்பட வரைவாளர் **Draughtsmen (Civil)** | 2 |
| 15. | நில அளவையாளர் **(Surveyor)** | 1 |
| 16. | மின்சாரப் பணியாளர் **(Electrician)** | 2 |
| 17. | மின்முலாம் பூசுபவர் **(Electro Plater)** | 2 |
| 18. | கம்மியர் (வானொலி மற்றும் தொலைக்காட்சி) **Mechanic (Radio and Television)** | 2 |
| 19. | கம்மியர் மின்னணுவியல் **(Electronic Mechanic)** | 2 |
| 20. | தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னனுவியல் சாதனங்கள் பராமரிப்பு **(Information Technology and Electronics System Maintenance)** | 2 |
| 21. | லிப்ட் மெக்கானிக் **(Lift Mechanic)** | 2 |
| 22. | கம்மியர் மற்றும் செயலாள் மின் அணு மற்றும் தகவல் தொடர்பு அமைப்பு முறை **(Mechanic cum Operator Electronics Communication System)** | 2 |
| 23. | கருவி மற்றும் அச்சு செய்பவர் **(Tool and Die Maker Press Tools, Jigs & Fixtures)** | 2 |

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 24. | கம்மியர் இயந்திரப் பராமரிப்பு **(Mechanic Machine Tool Maintenance)** | 2 |
| 25. | கம்மியர் (டீசல்) **Mechanic (Diesel)** | 1 |
| 26. | பம்பு மெக்கானிக் **(Pump Opertor Cum Mechanic)** | 1 |
| 27. | பிளாஸ்டிக் வழிமுறை பணியாள் குழைம வழிமுறை செயலாள் **(Plastic Processing Operator)** | 1 |
| 28. | கம்மியர் ஆட்டோ எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் **(Mechanic Auto Electrical and Electronics)** | 6 மாதங்கள் |
| 29. | கம்மியர் இரு சக்கர வாகனம் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு **(Mechanic Repair and Maintenance of two wheeler)** | 6 மாதங்கள் |

கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு 8ஆம் வகுப்பு முறையாகப் பயின்று தேர்ச்சிப் பெற்றிருக்க வேண்டும் :

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 30. | கம்பியாள் **(Wireman)** | 2 |
| 31. | வர்ணம் அடிப்பவர் (பொது) **Painter (General)** | 2 |
| 32. | பற்றவைப்பவர் **Welder (Gas & Electric)** | 1 |
| 33. | உலோகத்தகடு வேலையாள் **(Sheet Metal Worker)** | 1 |
| 34. | தச்சர் **(Carpenter)** | 1 |
| 35. | குழாய் பொருத்துபவர் **(Plumber)** (10ஆவது தேர்ச்சி) | 1 |
| 36. | கட்டுமான வேலை செய்பவர் **(Mason Building Constructor)** | 1 |
| 37. | அச்சு வார்ப்பவர் **(Foundryman)** (10ஆவது தேர்ச்சி) | 1 |
| 38. | கம்மியர் (இயந்திரக்கலப்பை) **Mechanic (Tractor)** (பத்தாவது தேர்ச்சி) | 1 |
| 39. | கம்மியர் விவசாய இயந்திரம் **(Mechanic Agricultural Machinery)** | 2 |
| 40. | மாதிரி அமைப்பு செய்பவர் (மாநில முறைப்படி) **(Pattern Maker SCVT)** (பத்தாவது தேர்ச்சி) | 2 |

கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு 10ஆம் வகுப்பு தேர்ச்சி/தோல்வி அடைந்தவர்கள் சேரலாம்: வயது 14 முதல் 25 வரை :

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 41. | கட்டமைப்பு பொருத்துநர் உடன்கூடிய பற்ற வைப்பவர் (மாநில முறைப்படி) **(Fabrication cum Fitter - SCVT)** | 2 |
| 42. | குழாய் பொருத்துநர் உடன்கூடிய மின்சாரப் பணியாளர் (மாநில முறைப்படி) **(Plumber cum Electrician - SCVT)** | 2 |

**பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகள் (Non Engineering Trades) :**

கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் :

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 1. | எண்ணியல் புகைப்படக் கலைஞர் **(Digital Photographer)** | 1 |
| 2. | கணினி இயக்குபவர் மற்றும் திட்டமிடுதல் உதவியாளர் **(Computer Operator and Programming Assistant)** | 1 |
| 3. | டெஸ்க் டாப் பப்ளிசிங் ஆபரேட்டர் **(Desk Top Publishing Operator)** | 1 |
| 4. | செயலகப் பயிற்சி **(Secretarial Practice)** | 1 |
| 5. | சுருக்கெழுத்து தட்டச்சு (ஆங்கிலம்) **Stenography (English)** | 1 |
| 6. | சுருக்கெழுத்து தட்டச்சு (தமிழ்) **(Stenography (Tamil)** | 1 |
| 7. | நெட்ஓர்க் டெக்னீஷியன் **(Network Technician)** | 6 மாதங்கள் |

கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்:

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 8. | ஆடை தயாரித்தல் **(Dress Making)** | 1 |
| 9. | லித்தோ ஆப்செட் மெஷின் மைண்டர் **(Litho Offset Machine Minder)** | 1 |
| 10. | கைவினைஞர் உணவு தயாரிப்பவர் (பொது) **(Craftsman Food Production (General)** | 1 |

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 11. | நிறம் அகற்றுதல் மற்றும் சாயம் தோய்த்தல் மற்றும் காலிகோ அச்சடித்தல் **(Bleeching Dyeing & Calico Printing)** | 1 |
| 12. | ஓட்டுநருடன் கூடிய கம்மியர் **Driver-cum-Mechanic (Light Motor Vehicle)** (18 வயது முதல் 40 வயது வரை) | 6 மாதங்கள் |
| 13. | டேட்டா எண்ட்ரி ஆபரேட்டர் **(Data Entry Operator)** | 6 மாதங்கள் |
| 14. | கம்ப்யூட்டர் எய்டட் எம்ப்ராய்டரி மற்றும் நீடில் ஓர்க் **(Computer Aided Embroidery and Needle work)** | 6 மாதங்கள் |

கீழ்க்கண்ட பிரிவுகளுக்கு 8ஆம் வகுப்பு முறையாகப் பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்:

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 15. | தோல்பொருள் உற்பத்தியாள் **(Leather Goods Maker)** | 1 |
| 16. | காலணி உற்பத்தியாள் **(Manufacturer of Foot Wear)** | 1 |
| 17. | துணி வெட்டுதல் மற்றும் தையல் வேலை **(Cutting and Sewing)** | 1 |
| 18. | பூத்தையலும் மற்றும் வேலைப்பாடும் **(Embroidery & Needle Work)** | 1 |

**திறன்மிகு மையங்களின் தொழில்பிரிவுகள் (Centre of Excellence - Sectors) :**

கீழ்க்கண்ட பிரிவுகளக்கு 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் :

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 1. | தானியங்கி ஊர்தி **(Automobile Sector)** | 2 |
| 2. | உற்பத்தி மற்றும் தயாரிப்பு **(Production and Manufacturing)** | 2 |
| 3. | மின்சாரப் பணி **(Electrical)** | 2 |
| 4. | கட்டுமானப் பொருத்துநர் மற்றும் பற்றவைப்பவர் **(Fabrication (Fitting & Welding)** | 2 |

| வ.எண். | தொழில்பிரிவின் பெயர் | பயிற்சிக் காலம் (வருடம்) |
|---|---|---|
| 5. | ஆடை வடிவமைத்தல் மற்றும் தையல் **(Apparel)** | 2 |
| 6. | தோல்பொருள் மற்றும் காலணி **(Leather Goods and Footwear)** | 2 |
| 7. | உபசரிப்பு மேலாண்மை **(Hospitality Management)** | 2 |
| 8. | கட்டுமானம் மற்றும் மரவேலைப்பாடுகள் **(Construction and Wood working** | 2 |

ஆண்டுதோறும் ஆகஸ்டு மாதங்களில் ஐ.டி.ஐ. படிப்புகளுக்கு மாணவ–மாணவிகளின் சேர்க்கை நடைபெறுகிறது. அரசு ஐ.டி.ஐ.க்களில் இடஒதுக்கீடு மற்றும் 10–ஆம் வகுப்பு தேர்வில் கணிதம், அறிவியல் பாடங்களில் எடுத்த மதிப்பெண் அடிப்படையில் தரவரிசைப்படி கலந்தாய்வு சேர்க்கை நடைபெறுகிறது.

தனியார் ஐ.டி.ஐ.–க்களில் சேரும் முன்பு அது அரசு அங்கீகாரம் பெற்றதா என்பதையும், அங்கு உள்ள பாடப்பிரிவுகள் அரசு அனுமதி பெறப்பட்டவையா என்பதையும் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். அங்கீகாரம் பெறாத பிரிவுகளில் சேர்ந்து படித்தால் எஸ்.சி.வி.டி. முறையில் தேர்வு எழுத மத்திய அரசு அனுமதி வழங்காது.

இது தொடர்பாக விளக்கம் பெறுவதற்கு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு மண்டல பயிற்சி இணை இயக்குனர், அரசினர் தொழிற் பயிற்சி (மகளிர் வளாகம்), கிண்டி, சென்னை–32 என்ற முகவரியை அணுகலாம்.

திருச்சி, கரூர், நாகை, பெரம்பலூர், அரியலூர், கடலூர், தஞ்சை, திருவாரூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களுக்கு மண்டல பயிற்சி இணை இயக்குனர், 17 புதுக்காலனி, 2–வது தெரு, மன்னார்புரம், திருச்சி–20 என்ற முகவரியை அணுகலாம்.

கோவை, தர்மபுரி, நீலகிரி, ஈரோடு, நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களுக்கு மண்டல பயிற்சி இணை இயக்குனர், ஜி.என்.மில்ஸ் (அஞ்சல்), கோயம்புத்தூர்–29 என்ற முகவரியை அணுக வேண்டும்.

நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு மண்டல பயிற்சி இணை இயக்குனர், 20 பெருமாள் ரத வீதி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–2 என்ற முகவரியை அணுகவேண்டும்.

மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, திண்டுக்கல், ராமநாதபுரம், தேனி ஆகிய மாவட்டங்களுக்கு மண்டல பயிற்சி இணை இயக்குனர், மூன்று–மாவடி, கே.புதூர், மதுரை–7 என்ற முகவரியை அணுகவேண்டும்.

***

## 2. பாலிடெக்னிக் படிப்புகள்

பத்தாம் வகுப்பு படித்துத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் இத்துறையில் பட்டயப் படிப்பு (டிப்ளமோ) படிக்கலாம். இப்பட்டயப் படிப்பு மூன்று ஆண்டு காலம் ஆகும். +2 முடித்த மாணவர்கள் பட்டயப் படிப்பில் நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேரலாம்.

மேற்படி பட்டயப் படிப்பு பிரிவுகள் மூன்றாண்டுகளில் கீழ்க்கண்டவாறு கற்பிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதல் வருடம் | : | ஜூலை முதல் ஏப்ரல் வரை **(Semester Pattern)** |
| இரண்டாம் வருடம் | : | பருவம் 3 – ஜுன் முதல் நவம்பர் வரை **(Semester Pattern)** |
| | | பருவம் 4 – டிசம்பர் முதல் மே வரை **(Semester Pattern)** |
| மூன்றாம் வருடம் | : | பருவம் 5 – ஜுன் முதல் நவம்பர் வரை **(Semester Pattern)** |
| | | பருவம் 6 – டிசம்பர் முதல் மே வரை **(Semester Pattern)** |

முதலாம் ஆண்டில் மாணவர்கள் அடிப்படை பொறியியல் துறையில் படிப்பார்கள். முதலாண்டு சேர்க்கையின்போதே இரண்டு ஆண்டில் படிக்க விருப்பமுள்ள துறையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். பல பாலிடெக்னிக்குகளில் பகுதி நேர, மாலை நேர வகுப்புகளும் உள்ளன. இப்பாடப் பிரிவு நான்காண்டுகளில் எட்டுப் பருவங்களில் படிக்கக் கூடியது. பகுதி நேர பட்டயப் படிப்பு படிப்பதற்கு மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பணிபுரிபவர்களாக இருத்தல் வேண்டும்.

**பட்டயப் படிப்பினை முடிப்பதற்கான உயர்ந்தபட்ச கால வரம்பு :**

| | |
|---|---|
| முழுநேர மாணவர்கள் | – 6 வருடங்கள் |
| மேல்நிலைக் கல்வி (தொழிற்கல்வி) மாணவர்கள் | – 5 வருடங்கள் |
| பகுதி நேர மாணவர்கள் | – 7 வருடங்கள் |
| மேல்நிலைக் கல்வி (தொழிற்கல்வி) | – 6 வருடங்கள் |
| பகுதி நேர மாணவர்கள் | – 6 வருடங்கள் |

### பாடப் பிரிவுகள்

**டிப்ளமா படிப்புகள் ஏஐசிடிஇ (.A.I.C.T.E) அனுமதி பெற்றது**

1. **Agricultural Technology**
2. **Air Craft Maintenance**
3. **Architectural Assistanship**
4. **Automobile Assistantship**
5. **Ceramic Technology**
6. **Chemical Engineering**
7. **Civil Engineering**
8. **Civil Engineering (Rural Technology)**
9. **Computer Engineering**
10. **Computer Networking**
11. **Cosmetology**
12. **Direction & Screenplay Writing**
13. **Electrical & Electronics Engineering**
14. **Electronics & Communication Engineering**
15. **Electronics (Robotics)/Mechatronics**
16. **Environmental & Pollution control**

17. Fashion Technology
18. Film Editing & Television Engineering
19. Film Processing
20. Fisheries Technology
21. Fishers Technology
22. Garment Technology
23. Hotel Managment & Catering Technology
24. Information Technology
25. Instrumentation & Control Engineering
26. Interior Design
27. Leather Technology
28. Leather Technology (Footwear)
29. Marine Engineering
30. Mechanical Engineering
31. Mechanical Engineering (Refrigeraton & Air Conditioning)
32. Mechanical Engineering (Foundry)
33. Mechanical Engineering (Tool & Die)
34. Metallurgy
35. Modern Office Packaging Technology
36. Paper Technology
37. Petrochemical Engineering
38. Plastic Technology
39. Ploymer Technology
40. Printing Technology
41. Production Engineering
42. Prosthetics & Orthotocs Engineering
43. Sound Recordng & Sound Engineering
44. Sugar Technology
45. Textile Design & Weaving
46. Textile Man Made Fibre Technology
47. Textile Marketing & Management
48. Textile Processing
49. Textile Technology
50. Textile Technology (knitting)
51. Visual Design Communication

### அங்கீகரிக்கப்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகள்

I. Govt. Ploytehcnics

1. General Ploytechnic College, Tharamani, Chennai - 600 113.
2. Thanthai Periyar E.V.R. Govt. Polytechnic College, Vellore - 632 002.
3. Government  Polytechnic College, Krishnagiri - 635 001.
4. Government  Polytechnic College, Coimbatore - 641 014.
5. Government Polytechnic College, Udhagamandalam - 643 006.
6. Government Polytechnic College,  Aranthangi - 614 616.
7. Government Polytechnic College,  Trichy - 620 022.

8. Tamilnadu Polytechnic College, Madurai - 625 011.
9. Alagappa Polytechnic College, Karaikudi - 630 004.
10. Government Polytechnic College, Tuticorin - 628 008.
11. Government Polytechnic College, Nagercoil - 629 004.
12. Government Polytechnic College, Purasawalkam, Chennai - 600 012.
13. Dr. Dharmambal Government Polytechnic College for Women, Tharamani, Chennai - 600 113.
14. Government Polytechnic College For Woment, Coimbatore - 641 044,.
15. Government Polytechnic College For Women, Madurai - 625 011.
16. Bharathiyar Cenenery Memorial Women's Polytechnic College, Ettayapuram - 627 902.
17. Srinivasa Subbaraya Polytechnic College, Sirkazhi - 609 108.
18. Government Polytechnic College, Melur Madurai - 625 109.
19. Government Polytechnic College, Dharmapuri - 635 205.
20. Government Polytechnic College, Karur - 621 301.
21. Government Polytechnic College, Perambalur - 621 104.
22. Government Polytechnic College, Thiruvarur - 614 713.
23. Government Polytechnic College, Theni - 625 534.
24. Government Polytechnic College, Thiruvannamalai - 606 705.
25. Government Polytechnic College, Villupruam - 605 752.
26. Institute of Chemical Technology. Chennai - 600 113.
27. Institute of Leather Technology. Chennai - 600 113.
28. Institute of Printing Technology, Chennai - 600 113.
29. Institute of Textile Technology. Chennai - 600 113.
30. State Institute of Commerce Education, Chennai - 600 113.
31. Government Polytechnic College, Kilapalur, Ariyalur Dt. - 621 707.
32. Government Polytechnic College, Perundurai, Erode - 638 053.
33. Government Polytechnic College, Uthangarai. Krishnagiri Dt. - 635 207.
34. Government Polytechnic College, Chakkanurani, Madurai Dt. - 625 514.
35. Government Polytechnic College, Usilampatti, Madurai Dt. - 625 537.
36. Government Polytechnic College, Andipatti., Theni Dt. - 625 517.
37. Government Polytechnic College, Chayyar. Thiruvannamalai dt. - 604 407.
38. Government Polytechnic College, Srirangam, Trichy Dt. - 620 012.
39. Government Polytechnic College, Jolarpet, Vellore Dt. - 635 651.
40. Government Polytechnic College, Sankarapuram, Villupruam Dt. - 606 401.
41. Government Polytechnic College, Gandharavakottai, Pudukkottai Dt. - 613 301.

**2. Puducherry Government Polytechnics**

1. Motilal Nehru Government Polytechnic College, Pondicherry - 605 008.
2. Karaikal Polytechnic College, Varichikudy, Karaikal - 609 609.
3. Women's Polytechnic College, Lawspet, Pondicherry - 605 008.
4. Indira Gandhi Polytechnic College, Mahe, Chokli P.O. - 670 672.
5. Dr. B. R. Ambedkar Polytechnic College, Yanam - 533 464.

### 3. Government-Aided Polytechnics

1. C.N. Polytechnic College, Vepery, Chennai - 600 007.
2. Ramakrishna Mission Technical Institute College, Mylapore, Chennai - 600 004.
3. Murugappa Polytechnic College, Sathyamurthy Nagar, Avadi, Chennai - 600 062.
4. Bhaktavatsalam Polytechnic College, Kanchipuram - 631 552.
5. A.M.K. Technological Polytechnic College, Sembarambakkam - 602 103.
6. Rajagopal Polytechnic College, Gandhi Nagar, Gudiyatham - 632 604.
7. Muthaiah Polytechnic College, Annamalai Nagar, Chidambaram R.S. - 608 002.
8. P.S.G. Polytechnic College, Peelamedu, Coimbatore - 641 004
9. C.I.T. Sandwich Polytechnic College, Coimbatore - 641 014.
10. Sri Ramakrshna Mission Vdyalaya Polytechnic, Coimbatore - 641 020.
11. Nachimuthu Polytechnic College, Pollachi - 642 003.
12. V.L.B. Janakiammal Polytechnic College, Kovaipudur. Coimbatore - 641 042.
13. Erode Institute of Technology, Kavindapadi, Erode Distrct 0 638 455.
14, Sakthi Institute of Technology, Sakthi Nagar, Erode - 638 315.
15, Thagarajar Polytechnic College, Salem - 636 005.
16. S.S.M. Inst. of Textile tech Polytechnic College, Komarapalayam - 638 183.
17. Vailvalam Desikar Polytechnic College, Parukkottai - 614 601.
18. Pattukkottai Polytechnic College, Pattukkottai - 614 601.
19. Seshasayee Institute of Technology, Trichy - 620 010.
20. Arulmigu Palaniandavur Polytechnic College, Palani - 624 601.
21. Rukmin Shanmugam Polytechnic College, Varichiyur, Madurai Dist. - 625 020.
22. Annamalai Polytechnic College, Chettinad, Sivagangai District - 630 102.
23. V.S.V. Nadar Polytechnic College, Virudhunagar - 626 001.
24. P.A.C. Ramasamy Raja Polytechnic College, Rajapalayam - 626 108.
25. Mohammed Sathak Polytechnic College, Kilakarai, Ramnad District - 623 806.
26. Arasan Genesan Polytechnic College, Sivakasi - 626 123.
27. Sankar Institute of Polytechnic College, Sankarnagar - 627 357.
28. Kamaraj Polytechnic, Pazhavilai, Kanyakumari District - 629 501.
29. NPA Centenary Polytechnic College, Kotagiri, Nilgiris Dist. - 643 217.
30. GRG Polytechnic College For Women, Kuppepalayam, Coimbatore District - 641 107.
31. Periyar Centenary Girl’s Polytechnic College, Vallam, Thanjavur District - 613 403.
32. Padmabhushan Sri N. Ramaswami Ayyar Memorial Polytechnic College For Girls, Trichy - 620 002.
33. Ayya Nadar Janaki Ammal Polytechnic Coillege, Chinnakkamamnpari, Sivakasi District - 626 189.
34. A.D.J. Dharmaambal Women’s Polytechnic College, Nagapattinam - 611 001.

இவை தவிர 150–க்கும் மேற்பட்ட தனியார் சுயநிதி பாலிடெக்னிக்குகள் தமிழ்நாட்டில் உள்ளன. மாணவர்கள் இந்நிறுவனங்களில் சேர்வதற்கு முன் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமா என்பதை ஆய்ந்தறிந்து சேரவும்.

### உடனடி வேலைவாய்ப்புக்கு வணிகக்கல்வி

சென்னை தரமணி சி.பி.டி. வளாகத்தில் அமைந்துள்ள மாநில வணிகக்கல்வி பயிலகத்தில் **'டிப்ளமோ இன் மாடர்ன் ஆபீஸ் பிராக்டிஸ்'** என்ற 3 ஆண்டு கால பட்டய படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது.

**பல்வேறு பயிற்சிகள் :** பி.காம். பட்டப் படிப்பிலுள்ள பாடங்கள் இப்பட்டயப் படிப்பில் கற்பிக்கப்படுகின்றன. தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் போன்றவற்றில் தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக பட்டயப்படிப்புப் படிப்பவர்களுக்கு கட்டாய கம்ப்யூட்டர் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இ–மெயில், இண்டர்நெட் ஆகியவற்றைப் பயன்படுத்துவது தொடர்பாகவும் பயிற்சி தரப்படுகிறது. இங்கு விடுதி வசதியும் உண்டு.

குறுகிய காலப் படிப்பைப் படிக்க விரும்புபவர்களுக்காக விற்பனையாளர் பயிற்சி சான்றிதழ் (சேல்ஸ்மென்ஷிப்) படிப்பு உள்ளது. இதில் சேரும் மாணவ–மாணவிகள் ஓராண்டு படித்தாலே போதும்.

தொடர் கல்வித் திட்டத்தின் கீழ் கம்ப்யூட்டர் ஹார்டுவேர்–சாஃப்ட்வேர் பாடப் பிரிவுகளுக்கான பகுதி நேரப் பயிற்சி வகுப்புகள் இப்பயிலகத்தில் நடத்தப்படுகின்றன.

கம்ப்யூட்டர் படிப்புகள் 3 மாதம், 2 மாதம், 1 மாதம் கால அளவில் பயிற்றுவிக்கப்படுகின்றன. இதற்கு குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இப்பயிலகத்தில் படித்து தேர்ச்சி பெறும் மாணவர்களுக்குப் பொதுத் துறை நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் நல்ல வரவேற்பு உள்ளது. இங்கு படித்தவர்கள் அரசுத் துறைகளிலும், வங்கிகளிலும் உயர்ந்த நிலையில் பணியாற்றுகிறார்கள். இந்த டிப்ளமோ தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள், பி.காம். பட்டப் படிப்பில் நேரடியாக இரண்டாம் ஆண்டில் சேர்ந்து பயிலவும் வாய்ப்பு உள்ளது.

**கூடுதல் விவரங்களுக்கு :**

**Principal, STATE INSTITUTE OF COMMERCE Education College, Tharamani, Chennai-113. Ph. 22541828.**

### பாலிடெக்னிக் 2–ஆம் ஆண்டு நேரடிச் சேர்க்கை (Lateral Entry)

கணிதம் சார்ந்த பாடங்களுடன் பிளஸ்–2 தேர்ச்சி பெற்றவர்கள் பாலிடெக்னிக் கல்லூரிகளில் இரண்டாம் ஆண்டு வகுப்பில் (3–வது செமஸ்டர்) நேரடியாகச் சேர முடியும். இதற்கான விண்ணப்பப் படிவங்களை நாளேடுகளில் வெளியிடப்படும் அறிவிப்புகளைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட பயிலகங்களில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

### பாலிடெக்னிக் வழங்கும் ஜுவல்லரி டெக்னாலஜி

உலக தங்கக் கவுன்சிலின் உதவியுடன் பத்து ஆண்டுகளுக்கு முன்பே சென்னை தரமணியில் உள்ள டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரியில் நவீன கருவிகள் மற்றும் தளவாடங்களுடன் கூடிய தங்கநகை உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி துறையில் வகுப்புகள் தொடங்கப்பட்டு நன்கு நடைபெற்று வருகிறது.

*பயிற்சி விபரங்கள் பின்வருமாறு :*

| | |
|---|---|
| 1. தங்க நகைத் தயாரிப்பு நவீன தொழில்நுட்பம் | – 1 ஆண்டு |
| 2. தங்க நகை. வெள்ளிப்பாத்திரம் மதிப்பீட்டாளர் பயிற்சி | – 2 வாரம் |
| 3. கணினி மூலமாக நகை வடிவமைத்தல் | – 3 மாதம் |
| 4. பாரம்பரிய முறையில் குந்தன வேலபாடுகள் | – 3 மாதம் |
| 5. உப்பலும், நகாசும் குறுகிய காலப் பயிற்சி | – 3 மாதம் |
| 6. உலோகத்தின் மீது வரைதலும் வடிவமைத்தலும் | – 3 மாதம் |
| 7. நகை வடிவமைத்தலும் தயாரித்தலும் | – 3 மாதம் |
| 8. கல் பதித்தல் குறுகிய காலப் பயிற்சி | – 3 மாதம் |
| 9. ஆழத் தோண்டுதலும் எனாமலும் | – 3 மாதம் |

மேலும் விவரங்களுக்கு முதல்வர் மற்றும் பாலி ஒருங்கிணைப்பாளர், டாக்டர் தர்மாம்பாள் அரசினர் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி, தரமணி, சென்னை – 113. போன் : (044) 2254 2219, 2254 2013, 2254 2014.

வேலையில் இருந்து கொண்டே சிறப்பு பயிற்சிகள் பெற பகுதி நேர வகுப்புகளிலும், சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிலும் பயிற்சிகள் அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதன் முறையாக இந்த நகை உற்பத்தித் தொழிலில் ஈடுபட விரும்புவோரும், சிறப்புத் தொழில்நுட்பங்களை பயில விரும்புவோருக்கும் இது ஒரு அரிய வாய்ப்பு. 10–ஆம் வகுப்பு தேறிய ஆண், பெண் இருபாலரும், வயது வரம்பின்றி இந்தப் பயிற்சிகள் பெறலாம்.

### பாலிடெக்னிக் கல்வி கட்டணம்

*அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் ஆண்டு கல்வி கட்டணம் வருமாறு :*

| | |
|---|---|
| அரசு கல்லூரிகள் | – ரூ. 3500/– முதல் 4000/– வரை |
| அரசு உதவி பெறும் கல்லூரிகள் | – ரூ. 11000/– |
| சுயநிதி கல்லூரிகள் | – ரூ. 22000/– முதல் 25000/– வரை |

### பட்டயப் பொறியியல் துறையில் வேலைவாய்ப்புகள்

1. டிப்ளமோ முடித்த பிறகு மாணவர்கள் பெருகி வருகின்ற தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைப் பெறலாம்.

2. டிப்ளமோ முடித்த பிறகு மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் நேரடியாக இரண்டாம் வரும் சேர்ந்து **B.E.** படிக்கலாம். மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்து +1 படித்து பின்னர் பொறியியல் கல்லூரிகளில் சேர்த்து இரண்டாம் வருடம் வரும்போது எஸ்.எஸ்.எல்.சி. படித்து முடித்து பின்னர் டிப்ளமோ 3 வருடம் படித்த மாணவர்கள் நேடியாக இரண்டாம் ஆண்டில் சேருவார்கள். அதனால் வருடங்கள் **(No of years)** வீணாவதில்லை.

3. டிப்ளமோ முடித்த பிறகு நல்ல பயிற்சி பெற்று மாணவர்கள் சுயமாக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

### தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி டிப்ளமோ படித்தவர்களுக்கு உள்ள வேலைவாய்ப்புகள்

மாறி வரும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பெரும்பாலான தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினித் தொழிற்சாலைகள் இன்றைய நிலையில் மிக அதிக முதலீட்டுடன்

ஆரம்பிக்கப்படுகின்றன. அதனால் தகவல் தொழில் நுட்பம் மற்றும் கணினித் துறையில் டிப்ளமோ முடித்தவர்கள் பல்வேறு பதவிகளுக்கு வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள்.

அதுமட்டுமின்றி அவர்களுக்கு வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பு மிக அதிக சம்பளத்தில் கிடைக்கிறது. ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி முடித்த டிப்ளமோ என்ஜினியர்களுக்கு மிகப் பெரிய அளவில் வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது.

**W.A.P. (Wireless Application Protocal)**
**GPRS (General Radio Service)**
**EDGE (Enhanced Datarates for Global Evolution)**
**3G (Third Generation Telephones)**
**BLUE TOOTH**

போன்ற தொழில்நுட்பப் பாடங்கள் மேலை நாடுகளில் வேலை கிடைக்க மிகவும் பயன்படுகிறது. மேலும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி டிப்ளமோ முடித்தவர்கள்.

**Solution Architect**
**Database Administrator**
**System Analyst**
**Application developer**
**QA Specialist**
**Documentation Specialist**
**Web Designer**

போன்ற பதவிகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

**அமைப்பியல் (Civil) துறையில் டிப்ளமோ படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு**

கடந்த காலங்களைப் போலல்லாமல் இன்றைய நாட்களில் பெரிய அளவில் கட்டடங்களும், பாலங்களும், கோபுரங்களும் கட்டப்பட்டு வருகின்றன. இத்தகைய கட்டமைப்புகளில் பல நவீன தொழில்நுட்ப யுக்திகள் பயன்படுத்தப்படுகின்றன. பல நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே பணித்தளங்களில் முழு நேரமும் இருந்து பணிகளை மேற்பார்வையிட தொழில்நுட்ப அறிவு படைத்த பலர் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். தொழில் நுட்பக் கல்வி பயிலாத ஒப்பந்தக்காரர்கள் குறைந்தபட்சம் டிப்ளமோ பயின்றோரை பணியிடங்களில் கண்டிப்பாக பணியமர்த்தும்படி அரசுத்துறை மட்டுமின்றி தனியார் துறைகளும் நிர்ப்பந்திக்கின்றன. தற்காலத்தில் சிறிய வீடுகளைக் கட்டுவோரும்கூட தொழில்நுட்பக் கல்வி பயின்றோர் மூலம் தங்கள் வீடுகளைக் கட்ட விரும்புகின்றனர். அமைப்பியல் டிப்ளமோ பயின்ற மாணவர்கள் மிகப் பெரிய அளவில் பண முதலீடு செய்யாமல், சுயமாக தொழில் துவங்க இத்துறையில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. தமிழக அரசின் பொதுப்பணித்துறை சிறிய பணிகளை அளிக்கையில் சுயதொழில் துவங்கும் டிப்ளமோதாரர்களுக்கு முன்னுரிமையும் முன் பணம் கட்டுவதிலிருந்து விலக்கும் அளித்து உதவுகின்றன. சிவில் இன்ஜினியரிங், ஆர்க்கிடெக்சரல் அஸிஸ்டன்ஷிப் டிப்ளமோ முடித்து ஆட்டோகேட் போன்ற குறுகிய கால கணினிப் பயிற்சி பெற்றவர்களுக்கு சேவை நிறுவனங்களில் அலுவலகப் பணிகளும் கிடைக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக முன்னேறி வரும் அரபு நாடுகள் பலவற்றில் அமைப்பியல் டிப்ளமோதாரர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிக அளவில் உள்ளன. இந்திய நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டும் கல்லூரிகளிலேயே நேர்காணல் மூலம் அதிக அளவில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கின்றன.

**மின்னணுவியல் துறையில் டிப்ளமோ படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள்**

நாடு முழுவதும் பெரும்பாலான சிறு தொழிற்சாலைகள் மற்றும் பெரிய தொழிற்சாலைகள் எலக்ரானிக்ஸ் பொருட்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முன்னிலை வகிக்கின்றன.

எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் தயாரிக்கும் தொழற்சாலைகளில் பெரும்பாலும் டி.வி. பிக்சர் டியூப், சுவிட்சுகள் போன்ற பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலைகளில் பெரும்பாலும் மின்னணுவியல் துறையில் டிப்ளமோ முடித்தவர்கள் அதிக அளவில் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

பல துறைகளிலும், வீடுகளிலும் மின் அணு சாதனங்களின் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், அவற்றைப் பராமரித்து, பழுது பார்ப்பது போன்ற பணிகளிலும் ஈடுபட்டு சுயமாகப் பணம் ஈட்டும் வாய்ப்புகள் இத்துறையில் அதிகம் உள்ளன.

**மின்னியல் துறையில் டிப்ளமோ படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள்**

இந்த நூற்றாண்டில் மின்சாரம் தயாரிப்பதில் நம் அரசாங்கம் மிகப் பெரிய திட்டமாக பல மின்சாரம் தயாரிக்கும் மின்நிலையங்களை நிறுவுகிறது. அதன் காரணமாக மின்னியல் துறை என்ஜினியர்கள் பல மின் நிலையங்களின் என்ஜினியர்களாக பணிபுரிகின்றனர்.

அதுமட்டுமின்றி அவர்கள் TNEB, பாரத் கனரக மின் நிலையம், எம்.ஆர்.எல்., இராணுவம், நீர்மூழ்கிக் கப்பல், கடற்படை போன்றவற்றிலும் என்ஜினியர்களாக அமர்த்தப்படுகிறார்கள்.

**இயந்திரத் துறையில் டிப்ளமோ படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள்**

எல்லாத் துறைகளுக்கும் மிக முக்கியமான துறையாக இயந்திரவியல் துறை கருதப்படுகின்றது. பெரிய நிறுவனங்கள் முதல் சிறு தொழற்சாலை வரை பல்வேறு தொழிற்சாலைகள் இந்தியாவில் பலகோடி ரூபாய் முதலீட்டில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமின்றி பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களும் பலகோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னையில் தொழிற்சாலைகள ஆரம்பித்துள்ளன. உதாரணத்திற்கு போர்ட், ஹுண்டாய், ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் போன்றவைகள். அதுமட்டுமின்றி தமிழ்நாட்டில் பல்வேறு ஆட்டோ மொபைல் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

CAD/CAM என்ற தொழில்நுட்பம் மிகப் பெரிய அளவில் பயன்படுத்தப்படுகிறது. எல்லாத் துறைகளிலும் Robotics என்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு ஆராய்ச்சியும் நடந்து வருகின்றது. எனவே இயந்திரவியல் துறையில் டிப்ளமோ படித்தவர்கள் சிங்கப்பூர், மலேசியா மற்றும் கிழக்கு ஆசியாக் கண்டத்தில் அதிக அளவில் தேவைப்படுகிறார்கள்.

எனவே இயந்திரவியல் துறையில் படித்தவர்களுக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உண்டு.

**வேதியியல் துறையில் டிப்ளமோ படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புகள்**

நாட்டின் வருங்கால வளர்ச்சியில் வேதியியல் துறை மிக முக்கியமானது. அது உரத் தொழிற்சாலை, மருந்து தொழிற்சாலை, உணவுப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, ரப்பர் தொழிற்சாலை என பல்வேறு வேதியியல் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது.

இத்தகைய தொழிற்சாலைகள் தமிழகத்தில் அதிக அளவில் பெருகி வருவதால் இத்துறையில் பயிலும் மாணவர்களுக்கு உடன் வேலை கிடைத்து விடுகிறது. அயல்

நாடுகளிலும் வேதியியல் டிப்ளோமாதாரர்களுக்கு அதிக அளவில் வேலைகள் கிடைக்கின்றன.

**கெமிக்கல் டெக்னாலஜி**

| Course | Duration | Special Remarks |
|---|---|---|
| Diploma in Chemical Engineering | 3½ Years | One Semester Inplant Training |
| Diploma in Polymer Technology | 3½ Years | One Semester Inplant Training |

கூடுதல் விவரங்களுக்கு :

**Institute of Chemical Technology, Tharamani, Chennai - 113. Ph : 2254 1530.**

### 3. தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி

தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து ஆகியவற்றில் தொழில்நுட்பக் கல்வித் துறையினரால் நடத்தப்படும் இளநிலை மற்றும் முதுநிலை **(Lower & Higher Grade)** தேர்வெழுதி, அலுவலகங்களில் தட்டெழுத்தர், சுருக்கெழுத்தர் மற்றும் நேர்முக உதவியாளர் ஆகிய பணிகளுக்குச் செல்லலாம். தட்டெழுத்து பயில எட்டாம் வகுப்பு தேர்ச்சி இருந்தால் போதும். சுருக்கெழுத்துக்கு **S.S.L.C.** தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கணினிப் பயிற்சிக்கும் தட்டெழுத்துப் பயிற்சி பெரிதும் உதவியாக அமையும். பல தனியார் நிறுவனங்கள் இத்துறையில் பயிற்சி அளித்து வருகின்றன. உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயின்றுவரும் மாணவர்கள் காலை, மாலை வேளைகளில் இப்பயிலகங்களில் பயிற்சி பெற்ற மேற்குறிப்பிட்ட தேர்வுகளை எழுதி சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முகவரி : இயக்குனர், தொழில்நுட்பக் கல்வித்துறை, சர்தார் படேல் சாலை, கிண்டி, சென்னை – 600 025. போன் : 044 – 2235 0525 / 2235 1018.

❋❋❋

### 4. கால் சென்டர் பயிற்சி

வாடிக்கையாளர்களின் குறைகளை தொலைபேசி மூலம் நிறுவனங்களுக்கு தெரிவிக்க ஏற்படுத்தப்பட்டவை ‘கால் சென்டர்கள்’. தகவல் தொழில் நுட்பப் புரட்சிகளில் ஒன்று கால் சென்டர் வசதி.

மிக வேகமாக வளர்ந்து வருகிறது இத்துறை. கால்சென்டர்களில் பணியாற்றுவதற்குச் சிறப்புப் பயிற்சி பெற வேண்டும். பிளஸ்–2 தேர்ச்சி பெற்றோர் இப்பயிற்சியில் சேரலாம். ஆங்கிலத்தில் சரளமாக உரையாடும் திறன் **(Good Communication Skill)** அவசியம். கொஞ்சம் கம்ப்யூட்டர் அறிவும், டைப்–ரைட்டிங் அறிவும் இருந்தால் போதும்.

சரியான ஆங்கில உச்சரிப்பு முறை, தொலைபேசியில் வாடிக்கையளர்களிடம் பேசும் விதம், அடிப்படை பொது அறிவு உள்ளிட்டவை குறித்துப் பயிற்சி அளிக்கப்படும். இதில் இரு வகையான பயிற்சிகள் உள்ளன.

1. **International Call Centre Agent Training**
2. **Domestic Call Centre Agent Training**

இப்பயிற்சிகளை அளிக்க சென்னை போன்ற நகரங்களில் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.

சர்வதேச கால் சென்டர் பயிற்சி மூலம் பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறலாம். உள்நாட்டு கால்சென்டர் பயிற்சி மூலம் உள்நாட்டு நிறுவனங்களில் வேலை

பெற முடியும். சர்வதேச கால்சென்டர்களில் மாதம் ரூ. 6000 முதல் ரூ. 60,000 வரை சம்பளம் பெறலாம். உள்நாட்டு கால் சென்டர்களில் தொடக்க நிலையில் ரூ. 3,000 முதல் ரூ. 20,000 வரை பெற வாய்ப்பு உண்டு. பணி உயர்வுக்கான வாய்ப்புகளும் உள்ளன. Call Centre Agent, Team Leader, Supervisor, Manager என்று படிப்படியாக பதவி உயர்வு பெறலாம். அப்போது ஊதியமும் கணிசமாகக் கூடும்.

இந்தியாவின் லட்சக்கணக்கான கால்சென்டர் ஏஜெண்டுகள் தேவை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சென்னையில் மட்டுமே 100–க்கும் மேற்பட்ட கால் சென்டர்கள் உள்ளன. பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் கால் சென்டர் மையங்கள் ஏற்படத்த அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. காரணம் நமது தொழிலாளர்களின் ஊதியம் மிகக் குறைவு.

அமெரிக்காவில் கால் சென்டர் ஊழியரின் குறைந்தபட்ச மாத சம்பளம் ரூ. 2 லட்சம். தங்கள் அலுவலகங்களை இந்தியாவில் ஏற்படுத்தி சாட்டிலைட் வசதி மூலம் அதே சேவையை அமெரிக்க கால்சென்டர் நிறுவனங்கள் அளிக்க முடியும். இந்தியாவில் கால் சென்டர் ஊழியருக்கு 5 ஆயிரம் ரூபாய் அளித்தால் போதும். அமெரிக்காவில் செய்யப்படும் அதே வேலையை இங்கே செய்ய முடியும். கால்சென்டர் பயிற்சி முடித்தவர்களுக்கு பிரகாசமான வாய்ப்புகள் உள்ளன.

❋❋❋

## 5. கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி

கல்வித்தகுதி : 12ஆம் வகுப்பு தேர்ச்சி/பட்டயப்படிப்பு சிறப்பு அம்சங்கள் :

அ. ஒரே பயிற்சியில் மூன்று சான்றிதழ்கள் வழங்கப்படும். அவையாவன:

1. கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி (டி.சி.எம்.)

2. கணினி மேலாண்மை பட்டயப் பயிற்சி (எம்.எஸ்.–ஆபீஸ்)

3. நகை மதிப்பீடு அதன் நுட்பங்களும் பட்டயப்பயிற்சி (நகை அப்ரைசல் & டெக்னிக்ஸ்)

ஆ. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு உண்டு.

இ. பயிற்சிக் கட்டணம் : ரூ. 6000/–

ஈ. வேலைவாய்ப்பு : கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியலாம்.

**பயிற்சி நிலையங்கள்**

(பயிற்சியில் சேர அந்தந்த கூட்டுறவு மேலாண்மை நிலைய முதல்வரை தொடர்பு கொள்ளவும்)

1. பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையம், காஞ்சிபுரம்.
2. வேலூர் கூட்டுறவு மேலாண்மை நிலையம், வேலூர்.
3. திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மை நிலையம், திருவண்ணாமலை.
4. விழுப்புரம் கூட்டுறவு மேலாண்மை நிலையம், விழுப்புரம்.
5. டாக்டர் எம்.ஜி.ஆர். கூட்டுறவு மேலாண்மை நிலையம், கடலூர்.
6. சாமியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம், தஞ்சாவூர்.
7. திருவாரூர் கூட்டுறவு மேலாண்மை நிலையம், திருவாரூர்.
8. பாண்டியநாடு கூட்டுறவு மேலாண்மை நிலையம், மதுரை.,
9. திருச்சிராப்பள்ளி கூட்டுறவு மேலாண்மை நிலையம், திருச்சிராப்பள்ளி
10. திண்டுக்கல் கூட்டுறவு மேலாண்மை நிலையம், திண்டுக்கல்.

11. தேனி கூட்டுறவு மேலாண்மை நிலையம், ஆண்டிப்பட்டி.
12. சிவகங்கை கூட்டுறவு மேலாண்மை நிலையம், சிவகங்கை.
13. தியாகி சங்கரலிங்கனார் கூட்டுறவு மேலாண்மை நிலையம், சாத்தூர்.
14. மேடை தளவாய் குமாரசாமி கூட்டுறவு மேலாண்மை நிலையம், திருநெல்வேலி.
15. நாகர்கோவில் கூட்டுறவு மேலாண்மை நிலையம், நாகர்கோவில்
16. இராமலிங்கம் கூட்டுறவு மேலாண்மை நிலையம், கோயமுத்தூர்
17. ஈரோடு கூட்டுறவு மேலாண்மை நிலையம், ஈரோடு
18. நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம், சேலம்
19. நாமக்கல் கூட்டுறவு மேலாண்மை நிலையம், நாமக்கல்
20. தருமபுரி கூட்டுறவு மேலாண்மை நிலையம், மொரப்பூர்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை அறிவிப்பின்படி கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்கள் அஞ்சல்வழியில் நடத்தப்படும் கூட்டுறவு மேலாண்மை பட்டயப்படிப்பில் சேரலாம். கல்வித்தகுதி : 10ஆம் வகுப்பு தேர்ச்சி.

**விபரங்களுக்கு :** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், 170, பெரியார் ஈ.வெ.ரா. சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை–600010. போன் : 044 – 2836 4865 / 2836 4866.

***

## 6. ஆசிரியர் பயிற்சி

தமிழ்நாடு முழுவதும் ஏராளமான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இதில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கு +2 மார்க் அடிப்படையில் கவுன்சிலிங் மூலம் மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். கூடுதல் மதிப்பெண்கள் எடுத்து இருந்தால் இடம் நிச்சயம் கிடைக்கும். குறைந்த மதிப்பெண்கள் எடுத்து இருந்தாலும் தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் நிர்வாக பிரிவு கோட்டா மூலம் சேர்ந்து படிக்கலாம். அதற்கு கட்டணம் கொஞ்சம் அதிகமாக இருக்கும்.

**கல்வித்தகுதி :**

அனைத்து வகை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களிலும் சேர்க்கை பெற விரும்புவோர் மேல்நிலைத் (+2) தேர்ச்சி பெற்று மொத்த மதிப்பெண்களில் **(First Improvement Marks** உட்பட) 540/1200 மதிப்பெண்கள் (45 விழுக்காடு) பெற்றிருக்க வேண்டும். எனினும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு +2 தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. விண்ணப்பதாரர் ஆசிரியர் பயிற்சியில் எந்த மொழிப்பாடப் பிரிவிற்கு (தமிழ், தெலுங்கு, மலையாளம், உருது) விண்ணப்பிக்கின்றாரோ அம்மொழியினை +2 வரை மொழிப்பாடத்தில் பகுதி ஒன்றிலோ அல்லது இரண்டிலோ பயின்றிருக்க வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட மொழியினை பயிற்று மொழியாக பயின்றிருக்க வேண்டும். ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு விண்ணப்பிப்போர் ஆங்கில பயிற்று மொழிப் பள்ளிகள் தவிர (ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் போன்றவை) மற்ற பள்ளிகளில் பயின்று இருப்பின் அவர்கள் 10 மற்றும் +2 வகுப்புகளில் ஆங்கிலப் பயிற்று மொழவாயிலாகப் பயின்று இருக்க வேண்டும். ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் தமிழ் பாடமொழியைப் பயில விரும்புவோர் தமிழ்மொழியைப் பாடமொழியாக பகுதி ஒன்று அல்லது பகுதி இரண்டில் +2 வரை பயின்றிருக்க வேண்டும்.

தகுதியுள்ள பெண் விண்ணப்பதாரர்கள் எவரேனும் தமிழ்வழி **(Tamil Medium)** பயிற்சிக்கும் மற்றும் ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் ஆங்கில வழி

**(English Medium)** பயிற்சிக்கும் விண்ணப்பிக்க விரும்பினால் அவர்கள் தனித்தனியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

**பாடவாரியான ஒதுக்கீடு :**

ஒவ்வொரு நிறுவனத்திலும் உள்ள மொத்த இடங்களில் +2 அறிவியல் பாடப்பிரிவு மாணவர்களுக்கு 50% +2 கலைப்பாட பிரிவு மாணவர்களுக்கு 25%, +2 தொழிற்கல்விப் பாடப்பிரிவு மாணவர்களுக்கு 25% என்ற அடிப்படையில் இடங்கள் ஒதுக்கப்படும்.

**வயது வரம்பு :**

ஜூலை 31ஆம் தேதி அன்று அதிகபட்ச வயது 30–க்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு அதிகபட்ச வயது 35 ஆகும். அனாதை, கணவரால் கைவிடப்பட்ட பெண்டிர் மற்றும் விதவைகளுக்கான அதிகபட்ச வயது 40 ஆகும். வேறு எக்காரணம் கொண்டும் வயது வரம்புத் தளர்வு அளிக்கப்பட மாட்டாது.

**தேர்ந்தெடுக்கும் முறை :**

இனவாரியான இட ஒதுக்கீடு முறைக்கு உட்பட்டு +2 தேர்வு மதிப்பெண்கள் தகுதி **(Merit)** அடிப்படையில் ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**இடஒதுக்கீடு :**

ஆதி திராவிடர் –18% (இதில் அருந்ததியர் வகுப்பினருக்கு 3% அடங்கும்), பழங்குடியினர் – 1%, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் – 20%, பிற்படுத்தப்பட்டோர் –26.5%, முஸ்லீம் பிற்படுத்தப்பட்டவர் – 3.5%, பகிரங்கப் போட்டி – 30%. இன ஒதுக்கீட்டு முறையில் தேர்வு செய்ய சாதிச் சான்றிதழ் மிகவும் அவசியமாகிறது. பழங்குடியினத்தவரைப் பொறுத்தமட்டில் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியரால் **(RDO)** வழங்கப்பட்ட சான்றிதழின் சான்றொப்பமிட்ட நகல் இணைக்கப்பட வேண்டும்.

**சிறப்பு இடஒதுக்கீடு :**

---

**உடல் ஊனமுற்றோர் :**

மாவட்ட மருத்துவக்குழு சான்றிதழின் பேரில் பார்வையற்றோர், வாய் பேசாதோர், காது கேளாதோர் ஆகியோர் இப்பயிற்சியின் சேர்க்கைக்கு கருத இயலாது.

தமிழ்வழி மொத்த இடங்களில் 3% (உருது 2 இடங்கள், தெலுங்கு 4 இடங்கள், மலையாளம் 1 இடம், ஆங்கிலோ இந்திய ஆசிரியர் பயிற்சி நிறுவனம் – 1 இடம் உட்பட)

---

**முன்னாள் படைவீரரின் குழந்தைகள்**

முன்னாள் படைவீரர் நல மாவட்ட அலுவலரின் சான்றிதழின் பேரில்

132 இடங்கள் (தமிழ் வழி மட்டும்)

---

**சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகள்**

மகன்/மகள்/பேரன்/பேத்தி

மைய அரசு/தமிழக அரசால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியரால் வழங்கப்பட்ட உறவு முறை வாரிசு சான்றிதழ்களின் பேரில்

28 இடங்கள் (தமிழ் வழி மட்டும்)

அரசு அங்கீகாரம் பெற்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில்தான் மாணவர்கள் சேர வேண்டும். இல்லாவிட்டால் பரிட்சை எழுத முடியாமல் போய்விடும். கீழ்க்கண்ட முகவரியில் இதுபற்றி தெரிந்து கொள்ள முடியும். இயக்குநர், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கம், சென்னை – 600 006. இமெயில் : dtert@tn.nic.in, tnscert.org. போன் : 044 – 2827 8742 / 282 68027.

**பட்டதாரி ஆசிரியர் பயிற்சி :**

தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகத்தின் இணைப்புக் கல்லூரிகளில் B.A.,B.Sc.,, படித்து முடித்தவர்கள் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற B.Ed. கல்லூரிகளில் சேரலாம். M.A., M.Sc., M.Com. முடித்தவர்களும் B.Ed. கல்லூரிகளில் சேர முடியும். B.Ed. படித்து முடித்தால் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியலாம், B.Ed. படித்தவர்கள் முதுநிலை M.Ed. படிப்பான படிக்கலாம்,

**தொலைதூரக்கல்வி :**

B.Ed. படித்து முடிக்காமல் பள்ளிக்கூடங்களில் ஏற்கனவே பணிபுரிந்து கொண்டு இருக்கும் ஆசிரியர்களும் தங்கள் அனுபவ சான்றிதழ்களை காட்டி Correspondence Course–களில் சேர்ந்து படிக்கலாம். இந்திராகாந்தி திறந்தநிலைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் சில தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் தொலைதூரக் கல்வி மூலம் பிஎட் படிப்புகளை வழங்கி வருகின்றன.

கல்லூரி விரிவுரையாளர்களாகப் பணியில் சேர வேண்டுமானால் M.Phil., Ph.D., போன்ற மேற்படிப்புகளை படிக்க வேண்டும். NET/SLET தேர்வு எழுதுவது கல்லூரி விரிவுரையாளர் பணிக்கு அவசியம்.

**தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம்**

பட்டதாரி ஆசிரியர் பயிற்சியை நெறிப்படுத்துவதற்கும், அறிவுபூர்வமான ஆசிரியர்களை உருவாக்கவும், தரமான ஆசிரியர் கல்வியை வழங்கவும், தமிழ்நாடு ஆசிரியர் பல்கலைக்கழகம் இயங்கி வருகின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவி பெறும் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகள் இதன் இணைப்புக் கல்லூரிகள், இக்கல்லூரிகளில் பி.எட்., எம்.எட்., எம்.பில். பி.எச்டி படிப்புகள் உள்ளன.

**முகவரி :** பதிவாளர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வி பல்கலைக்கழகம்,

கங்கையம்மன் கோவில் தெரு, காரப்பாக்கம், சென்னை – 600 097. போன் : 73959 65062. இணைய முகவரி : http://www.tnteu.in

***

### 7. மத்திய அரசு (SISI) பயிற்சிகள்

சிறுதொழில் சேவை மையம் (எஸ்.ஐ.எஸ்.ஐ.) அளித்து வரும் தொழிற்பயிற்சிகளுக்கு கட்டணம் குறைவு. எஸ்.சி., எஸ்.டி உடல் ஊனமுற்றோர் பிரிவினருக்கு 50% கட்டணச் சலுகை உண்டு. பெண்களுக்கு 10% கட்டணத்தில் குறைத்துக் கொள்ளப்படும். இங்கு தொழிற்சாலை உற்பத்தி EDP & MDP, CNC மெஷின்கள், காஸ்மடாலஜி, மேலாண்மை, கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ், ரெப்ரிஜிரேஷன், ஹோட்டல் மேனேஜ்மெண்ட் மற்றும் சமையல் கலை, சட்ட மேலாண்மை ஆகிய துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

8–ஆம் வகுப்பு முதல் என்ஜினியரிங் படித்தவர்கள் வரை இங்கு நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் சேர முடியும். பயிற்சி முடிவில் அரசு தேர்வு நடத்தி சான்றிதழ்கள்

வழங்கப்படும். இங்கு படித்துவிட்டு சொந்தமாக தொழில் தொடங்கலாம். அதற்கு வங்கிகள் கடன் உதவி வழங்கும். வேலை பார்க்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் தனியார் கம்பெனியிலோ, அரசு நிறுவனங்களிலோ சேருவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. வெளிநாடுகளுக்கு சென்ற பணம் சம்பாதிக்கவும் வழி வகை உள்ளது.

இது பற்றி மேலும் விவரம் தேவை என்பவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

1. சிறுதொழில் சேவை நிறுவனம், 65/1, ஜி.எஸ்.டி. சாலை, கிண்டி, சென்னை – 32, தொ.பே. : 044 – 22341011.

2. சிறுதொழில் சேவை நிறுவனம், 386, பட்டேல் ரோடு, ராம் நகர், கோவை–9. தொ.பே. : 0422 – 2230426.

3. சிறு தொழில் சேவை நிறுவனம், 76, கி.ஜி.இ. காலனி, திருச்செந்தூர் ரோடு, தூத்துக்குடி – 3. தொ.பே. : 0461 – 2322345.

4. சிறுதொழில் சேவை நிறுவனம், 7/8, இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் பேட்டை, திருநெல்வேலி–10. தொ.பே. : 0462 – 2342137.

***

## 8. சாலைப் போக்குவரத்து நிறுவனப் பயிற்சிகள்

பெருகிவரும் வாகனங்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, ஓட்டுநர் பற்றாக்குறையை ஈடுசெய்ய தமிழக அரசால் கீழ்க்கண்ட 17 பயிற்சி மையங்களில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**பயிற்சி மையங்கள் :**

1. கும்மிடிப்பூண்டி, 2. விழுப்புரம், 3. வேலூர், 4. திருச்சி, 5. கும்பகோணம், 6. காரைக்குடி, 7. புதுக்கோட்டை, 8. ஈரோடு, 9. பொள்ளாச்சி, 10. மதுரை (பசுமலை), 11. மதுரை (செங்குளம்), 12. திருநெல்வேலி, 13. திண்டுக்கல், 14. நாகர்கோவியல், 15. விருதுநகர், 16. சேலம், 17. தருமபுரி.

ஆண்/பெண் இருபாலரும் சேரலாம். பயிற்சி துவங்கும் நாளன்று விண்ணப்பதாரர் 20 வயதிற்குக் குறையாமலும் 28 வயதிற்கு மிகாமலும் **LMV** ஓட்டுநர் உரிமம் எடுத்து ஓராண்டு நிறைவடைந்தும் அதில் **PSV Badge** பதியப் பெற்றும், குறைந்த பட்ச உயரம் 160 செ.மீ., எடை 50 கி.கி. 10–ஆம் வகுப்பில் தமிழைப் பாடமாகக் கொண்டு தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும்.

**மேலும் விவரங்களுக்கு :**

கூடுதல் இயக்குநர் (கவாஓப) சாலைப் போக்குவரத்து நிறுவனம், ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு, கும்மிடிப்பூண்டி – 601 201.

சாலை போக்குவரத்து நிறுவனம், 100 அடி சாலை, தரமணி, சென்னை – 600 113.

சாலை போக்குவரத்து நிறுவனத்தின் சென்னை (குரோம்பேட்டை), பர்கூர் மற்றும் திருநெல்வேலி பாலிடெக்னிக் கல்லூரிகளில் மின்னியல் & மின்னணு பொறியியல் **(EEE)**, மின்னணு & தொடர்பியல் பொறியியல் **(ECE)** மற்றும் கணினிப் பொறியியல் **(CE)** ஆகிய பிரிவுகளில் பயிற்றுவிக்கப்படுகிறது.

இரண்டாம் ஆண்டு **(lateral Entry)** : மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், தொழில் பிரிவில் **(Vocational)** கணிதம்/இயற்பியல்/வேதியியல் (ஏதாவது ஒன்று)

சம்பந்தப்பட்ட தொழிற்பிரிவு பாடங்கள் (எழுத்துமுறை & செய்முறை – **Theory & Practical)** அல்லது அதற்கு சமமான படிப்பு பயின்றிருக்க வேண்டும்.

அல்லது

10ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் 2 ஆண்டுகள் தொழில் பயிற்சிகள் உரிய தொழில் பிரிவில் பயின்றிருக்க வேண்டும். **(2 years ITI with appropriate specialization)**

முதல் ஆண்டு : எஸ்.எஸ்.எல்.சி. / 10ஆம் வகுப்பு அல்லது அதற்கு இணையான படிப்பில் தேர்ச்சி.

***

## 9. விமான பைலட்/ ஏர் ஹோஸ்டஸ் பயிற்சி

ஏர்லைன் சேவை எனப்படும் விமானப் போக்குவரத்துச் சேவையில் விமானி (பைலட்), விமானப் பணிப்பெண்கள் (ஏர் ஹோஸ்டஸ்) ஆகியோர் முக்கியமானவர்கள். இப்போதெல்லாம் விமானப் போக்குவரத்து சேவைப் பணியாளர்கள் (கேபின் க்ரூ) என்பவர்களின் பணி அதிகம் உள்ளது.

ஒரு விமானத்துக்கு விமானிதான் தலைவராக இருப்பார். அவருக்கு உதவியாக துணை விமானி (கோ பைலட்) இருப்பார். விமானம் பறக்கும் பயணத்தைத் திட்டமிடுவது, வானிலை குறித்த தகவல்களை அறிக்கைகள் மூலம் அறிதல், ஓட்டுவதற்கு ஏற்ப காற்று நிலைக்கு உகந்த நிலையில் விமானம் இருக்கிறதா என அறிதல், விமானத்தில் உள்ள பொருட்களைக் கண்காணித்தல், தானாகப் பறக்கும் அமைப்புக் குறித்து கண்காணித்தல், விமானம் ஓட்டுவது தொடர்பான தகவல்களை தரைக்கட்டுப்பாட்டு நிலையத்துக்கு அவ்வப்போது தெரிவித்தல் ஆகியவை விமானியின் பணிகள் ஆகும்.

விழிப்புடன் செயல்படுதல், புத்திக்கூர்மை, திறமை, சமயோசிதம் ஆகியவை மிக அவசியம். விமானி ஆவதற்கு உரிய பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டுமானால், அதற்கான உரிமங்களை (லைசன்ஸ்) பெற்றாக வேண்டும்.

1. மாணவர் விமானி லைசென்ஸ் **(Student Pilot Licence)**
2. தனியார் விமானி லைசென்ஸ் **(Private Pilot Licence)**
3. வணிக விமானி லைசென்ஸ் **(Commercial Pilot Licence)**

**மாணவர் பைலட் லைசென்ஸ் :**

விமானி ஆவதற்கு முன் மாணவர் பைலட் லைசென்ஸ் பெற வேண்டும். ஃபிளையிங் கிளப் நிறுவனத்தில் சேர்ந்து அதற்கான பயிற்சியைப் பெற்று தேர்ச்சியடைய வேண்டும். லைசென்ஸ் பெற 60 மணி நேரம் பறந்திருக்க வேண்டும். இதில் 20 மணி நேரம் பயிற்சியாளருடனும் 20 மணி நேரம் தனியாகவும் பறந்திருக்க வேண்டும். 5 மணி நேரம் நாட்டின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குப் பறக்க வேண்டும். அத்துடன் ஏர் ரெகுலேஷன் நேவிகேஷன், ஏவியேஷன் மீட்டிரியாலஜி, ஏர்கிராப்ட் என்ஜின் ஆகியவற்றைக் கையாளும் பயிற்சியைப் பெற வேண்டும். குறைந்தது 17 வயது நிரம்பியர் இதில் சேரலாம். இயற்பியல், கணிதம் ஆகியவற்றைப் படித்திருக்க வேண்டும். 12–ம் வகுப்பில் 50 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். மருத்துவத் தகுதிச் சான்றிதழ் செக்யூரிட்டி கிளியரன்ஸ் ஆகியவையும் பெற்றிருக்க வேண்டும்.

**தனியார் பைலட் லைசென்ஸ் :**

மாணவர் விமானி உரிமம் பெற்றவர்கள் பயிற்சியாளருடன் சேர்ந்து பறக்கலாம். இது **Dual fly** என்று குறிப்பிடப்படுகிறது. இருவராகப் பறக்கும்போதே பயிற்சியைப் பெறலாம். 15

மணி நேரம் பயிற்சி பெறுபவர் சராசரியாகப் பறக்கும் பயிற்சி அனுபவத்தைப் பெறுவார். இந்த உரிமத்தைப் பெற மொத்தம் 60 மணி நேரம் பறக்க வேண்டும். இதற்குக் கல்வித்தகுதி பிளஸ்–2 டெல்லியில் உள்ள விமானப்படை மத்திய மருத்துவ நிறுவனம் **(Air Force Central Medical Establishment - AFCME)** அல்லது பெங்களூரில் உள்ள நிறுவனத்தில் தகுதிச் சான்றிதழ் பெற வேண்டும். அத்துடன் நுழைவுத் தேர்வையும் எழுதியாக வேண்டும். அதில், ஆங்கில அறிவு, பொது அறிவு, கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய திறன்கள் சோதிக்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் குறித்து அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : **Director General of Civil Aviation (Training Section), Technical Centre, Opp to Safdarjang Air Port, New Delhi - 110 003.**

**வணிகப் பைலட் :**

வணிகப் பைலட் லைசென்ஸ் பெற 250 மணி நேரப் பயிற்சியை முடித்திருக்க வேண்டும். பிளஸ் 2 முடித்தவர்கள் தனியார் பைலட் லைசென்ஸ் வைத்திருக்க வேண்டும். மூன்ற ஆண்டு விமானம் ஓட்டிய அனுபவம் தேவை. டெல்லி மற்றும் பெங்களூரில் உள்ள விமானப்படை மருத்துவ நிறுவனம் உடல் தகுதிச் சான்றிதழ் பெற வேண்டும். விமானம் ஓட்டும் தகுதியைப் பெறுவதற்குப் பி.எஸ்.ஸி. (ஏவியேஷன்), பி.இ. ஏர்லைன் என்ஜினியரிங் அண்ட் மேனேஸ்மெண்ட், பி.இ. (ஏர்கிராப்ட் மெயின்டனஸ் என்ஜினீயரிங்), பி.டெக். (ஏரோநாட்டிகல்) ஆகிய ஏதாவதொரு படிப்பை முடித்திருக்க வேண்டும். இப்படிப்பை நடத்தும் சில நிறுவனங்கள்.

**Madras Flying Club, Chennai Airport, Chennai-600 227.**

**Commercial Pilot's Licence Course and B.Sc. (Aviation) : Indira Gandhi Rashtriya Urban Academy, RaeBareli - 229302. Website : www.igruta.gov.in. Phone : 0535-2441147/527.**

**Aviation Science and technology Courses : Hindustan Group of Institutions, 40 GST, St. Thomas Mount, Chennai - 600 018. www.hindustance.com. Courses : BE (Airline Engg. and Management) MIT, Chrompet.**

**Flying Clubs : Orient Flight School, St. Thomas Mount Road, Chennai - 600 016. www.hindustancollege.com.**

**International Aviation Academy Pvt. Ltd., Salem Airport, Salem.**

**விமானப் பணிப்பெண்கள் / ஆண்கள் :**

இந்தப் பயிற்சியைப் பெறுவதற்குக் குறைந்தபட்சம் பிளஸ்–2 படித்திருக்க வேண்டும். மாநில மொழியிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டும். வயது 17–26க்குள் இருக்க வேண்டும். பெண்கள் 157 சென்டி மீட்டர் உயரமும், ஆண்கள் 170 சென்டி மீட்டர் வரையும் இருக்க வேண்டும்.

இத்தகைய பயிற்சியை முடித்து வெளியேறும் ஏர்ஹோஸ்டஸ்களுக்கும், ஸ்டிவர்ட்களுக்கும் வேலை வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கின்றன. உள்நாட்டு விமானத்தில் பணி செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் மாதம் 25,000, பன்னாட்டு விமானத்தில் பணி என்றால் 75,000, எமிரேட்ஸில் 1.3 லட்சம் வரை சம்பளம் கிடைக்கும். ஆண்டுக்கு 1000க்கு மேல் விமானப் பணிப்பெண்கள் பயிற்சி பெற்று வெளிவருகிறார்கள். சென்னையிலும் பல பயிற்சி நிலையங்கள் உள்ளன.

***

### 10. மத்திய அரசு தொழில் பழகுநர் திட்டம்

மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம், உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும். சென்னை தரமணியிலுள்ள தொழில் பழகுநர் பயிற்சி வாரியம் (தென் மண்டலம்) ஒரு தன்னாட்சி நிறுவனமாகும்.

ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசங்களைக் கொண்ட தென்மண்டலத்தில், மத்திய, மாநில, தனியார் தொழில் நிறுவனங்களில் (ஆஸ்பத்திரி, வங்கிகள் உள்ளிட்ட) பொறியியல் பட்டதாரிகள் **(Graduates in Engineering/Technology),** பட்டயதாரர்கள் **(Diploma Holders in Engineering)** மேலும் +2 தொழில் சார்ந்த கல்வியில் **(Vocational Group)** தேர்ச்சி பெற்றவர்களை தொழில் பழகுனர்களாக அமர்த்துவமே இந்நிறுவனத்தின் பணியாகும்.

தென் மண்டலத்தில் உள்ள தொழில் நிறுவனங்களில் பழகுநராக பயிற்சியில் சேரும் பட்டதாரிகளுக்கு **(Engineering Graduates) Rs. 3560/-** பட்டயதாரர்களுக்கு **(Diploma Holders in Engineering) Rs. 2530/- +2 Vocational** கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு **Rs. 1970/–**ம் குறைந்தபட்ச மாதாந்திர உதவித் தொகையாக தொழில் நிறுவனங்கள் அளித்து வருகின்றன. அரசாங்கம் நிர்ணயித்துள்ள இந்தத் தொகையைக் காட்டிலும் அதிக அளவு தொகையைக் கொடுப்பது அந்தந்த நிறுவனங்களின் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால் அரசாங்கம் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச மாதாந்திர உதவித் தொகையில் 50 சதவிகிதத்தினை தொழில் நிறுவனங்கள் இந்த அலுவலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தொழில் கல்வி பயின்றவர்கள் பலன் பெறும் வகையில் **Centralised Walk in Interview** தென் மண்டலங்களிலுள்ள நகரங்களில் நடைபெறுகின்றன. அது குறித்த விவரங்கள் அவ்வப்போது பத்திரிக்கைகளில் விளக்கமாக வெளியிடப்படுகின்றன.

மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியை அணுகவும் :

**Director, Board of Apprenticeship Training (Southern Region), CIT Campus, Taramani, Chennai-600 113. Phone : 22542236, 22541292. E-mail : boat_sr@vsnl.net. Web-site : www.boatsr-apprentice.tn.nic.in.**

### 11. அட்வான்ஸ்டு ட்ரெயினிங் சென்டர்

**சி.ஐ.டி. கேம்பஸ், கிண்டி, சென்னை–600032.**

**போன்: 044 – 2250 1211** இணைய முகவரி : **www.atichennai.org.in**

இப்பயிற்சி நிறுவனம் பின்வரும் தொழிற்பயிற்சிகளை சலுகை கட்டணத்தில் வழங்கி வருகின்றது.

1. எலக்ட்ரானிக் கண்ட்ரோல் & மெயின்டெனன்ஸ்
2. எலக்ட்ரிகல் கன்ட்ரோல் & மெயிட்டனன்ஸ்
3. பிராசஸ் கன்ட்ரோல் இன்ஸ்ட்ருமென்டேசன்
4. மெட்ராலஜி & இன்சினியரிங் இன்ஸ்பெக்‌ஷன்
5. மெஷின் டூல் மெயிட்டனன்ஸ்
6. புரொடக்சன் டெக்னாலஜி
7. கேட் / கேம்
8. சி.என்.சி. டென்னாலஜி
9. ஹைட்ராலிக்ஸ் & நியுமெட்டிக் கன்ட்ரோல்ஸ்
10. ஹீட் என்ஜின்

11. ஹீட் ட்ரீட்மென்ட் & மெட்டீரியல் டெஸ்டிங்
12. அட்வான்ஸ்டு வெல்டிங்
13. இன்டஸ்ட்ரியல் கெமிஸ்ட்ரி
14. இன்ஸ்ட்ரக்டர் ட்ரெயினிங் புரோகிராம்

❋❋❋

## 12. வேளாண்மை தொடர்பான தொழிற் பயிற்சிகள்

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தின் திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி மூலம் பின்வரும் படிப்புகளை / சான்றிதழ் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

**1. பேச்சிலர் ஆஃப் ஃபார்ம் டெக்னாலஜி :** தமிழில் நடத்தப்படும் இப்படிப்பு மூன்றாண்டு காலம். அதாவது 6 செமஸ்டர்களைக் கொண்டது. கட்டணம் ரூ. 4000/– / செமஸ்டர். கல்வித் தகுதி : 10வது பாஸ் அல்லது பெயில்.

**2. சான்றிதழ் படிப்புகள் :** காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மூலிகைப் பயிர்கள் சாகுபடி... இவ்வாறான 16 தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தமிழில் நடத்தப்படும் இப்பயிற்சிகளில் சேர தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

**3. டிப்ளமா இன் அக்ரி இன்புட்ஸ் :** தமிழில் நடத்தப்படும் இப்படிப்பு காலம் ஒரு வருடம். இரண்டு செமஸ்டர்கள். கட்டணம் ரூ.25000/–

இதைத் தவிர முதுகலை பட்டயப் படிப்பு மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளையும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி மூலம் பெறலாம்.

தொடர்பு முகவரி :

இயக்குனர், திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககம்,

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641003.

❋❋❋

## 13. கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சிகள்

தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்ககம் மூலம் பின்வரும் தொழிற் பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

1. முதுகலை பட்டயப்படிப்புகள்
2. சான்றிதழ் படிப்புகள்
3. குறுகிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்
4. சுயவேலைவாய்ப்புப் பயிற்சிகள்

கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ளோர் மேற்கண்ட பயிற்சிகளில் சேரலாம்.

**முகவரி :** தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகம், மாதவரம் பால்பண்ணை காலனி, சென்னை – 600 051. போன் : 044 – 2555 1586 / 2555 4555.

❋❋❋

## 14. ஃபயர் மற்றும் சேஃப்டி பயிற்சிகள்

தற்போதைய காலகட்டத்தில் ஃபயர் மற்றும் சேஃப்டி பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே பரவலாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியும், பெருகிவரும்

தொழிற்சாலைகளும் மேற்கண்ட துறைகளில் பயிற்சி பெற்றவர்களின் தேவையை அதிகரித்துள்ளது. நம் நாட்டில் மட்டுமல்ல, பிற நாடுகளிலும் குறிப்பாக வளைகுடா நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகளிலும் ஃபயர் மற்றும் சேஃப்டி பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. இன்ஸ்ட்ரக்டர், ட்ரெயினர், சூப்ரவைசர், அலுவலர், இன்சினியர், மேனேஜர், கன்சல்டன்ட் ஆகிய பதவிகளில் அமர்த்தப்படுகின்றனர். நம் நாட்டிலேயே இவர்களுக்கு சம்பளம் ரூ.15,000/–த்திலிருந்து ரூ.40,000/– வரை கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. வெளி நாடுகளில் இன்னும் கூடுதலாகக் கிடைக்கும். பொதுவாக ஃபயர் மற்றும் சேஃப்டி பயிற்சி பெற கல்வித் தகுதி பத்தாவது. இதற்கு மேலும் படித்தவர்களும் குறிப்பாக இன்சினியரிங் படிப்பில் டிப்ளமா மற்றும் பட்டதாரிகளும் பயிற்சியில் சேரலாம். படிப்புக்கும் பயிற்சிக்கும் ஏற்றவகையில் வேலை கிடைக்கும். பயிற்சிக் கட்டணம், பயிற்சி நிறுவனம் மற்றும் எடுத்துக் கொள்ளும் பயிற்சி, பயிற்சிக்காலம் பொறுத்து மாறுபடும். சென்னை மற்றும் பெருநகரங்களில் பல பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.

❋❋❋

# II. சயின்ஸ் டெக்னாலஜி

## 15. தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகள்

அண்ணா பல்கலைக்கழகத்தின் இயைந்த பொறியியல் கல்லூரிகள் தவிர நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், திருச்சி என்ஐடி, சென்னை ஐ.ஐ.டி. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் பொறியியல் பட்டப்படிப்புகள் உண்டு. ஏரோநாட்டிகல் என்று துவங்கி டெக்ஸ்டைல் டெக்னாலஜி முடிய சுமார் 30 அடிப்படைப் பாடப்பிரிவுகள், மேலும் பகுக்கப்பட்டு சுமார் 50 பாடப்பிரிவுகள் உள்ளன.

அண்ணா பல்கலைக்கழகத்துடன் இயைந்த கல்லூரிகளை வகைப்படுத்தினால், பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள், அரசின் உதவி பெறும் தனியார் கல்லூரிகள், அரசின் உதவி பெறாத தனியார் கல்லூரிகள் என்று பிரிக்கலாம். பாடப்பிரிவுகளில் அரசின் உதவி பெறாத பிரிவுகளும் **(SS : Self Supporting)** உண்டு.

மாணவர் சேர்க்கையைப் பொருத்தவரை, அண்ணா பல்கலைக்கழகம் நடத்தும் கலந்தாய்வில் பெறக்கூடிய ஒற்றைச் சாளர சேர்க்கை, தனியார்க் கல்லூரியின் மேலாண்மை இடங்கள் **(Management quota seats)** ஆகிய இரண்டு வகைக்கும் நுழைவுத் தேர்வு இல்லை. ஓரிரு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களைத் விர மற்ற அனைத்துக்கும் தனித்தனி நுழைவுத் தேர்வுகள் உண்டு.

### பொறியியல் பாடப்பிரிவுகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

தமக்கு எந்தப் பொறியியல் துறை அல்லது பிரிவில் மிகுந்த விருப்பம்/நாட்டம் இருக்கிறது என்பதை ஒவ்வொரு மாணவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பிரிவுகள் ஒன்றுக்கு மேலும் இருக்கலாம். அவற்றை அறிய சைக்கோ மெட்ரிக் டெஸ்ட் முதலிய திடமான முறைகள் இருந்தாலும், சுய சிந்தனையும் ஆய்வும் இதற்குப் பெரிதும் பயன்படும். பெற்றோரின் வற்புறுத்தல் இதில் கூடாது. அதற்கு, விவரம் தெரிந்த ஆசிரியர்கள், கலந்தாய்வு வல்லுநர்கள், அவர்களது உரைகள், கட்டுரைகள், கணினி வலைதளங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி இளைஞர்கள் தெரிந்து முடிவெடுக்க வேண்டும்.

இரண்டாவதாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது மாணவரின் திறமை **(Ability)**. இதில் அவரது தகுதி **(Eligibility)**, இயலும் தன்மை **(Affordability)** ஆகியவையும் அடங்கும். ஒரு பொருளைப் பெற ஆசை மட்டும் இருந்தால் போதாது. எடுத்துக்காட்டாக, கணிதத்தில் போதுமான திறமை இல்லாதவர்கள் மின்னியலில் **(Electrical Engineering)**

சுலபமாக ஒளிர முடியாது. +2 தேர்வில் சராசரி 50% மதிப்பெண்கள் பெறாதவர்கள் கவின் கட்டவியல் **(Architechture)** சேரத் தகுதி இல்லாதவர்கள். கப்பல் பொறியியல் பிரிவில் சேரக் கட்டணம் கூடுதல். இவை தவிர, வெளியூரில் படிக்க வேண்டி இருத்தல், விடுதியில் தங்கிப் படித்தல் முதலியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டி இருக்கும்.

மூன்றாவதாக, பாடப்பிரிவின் வாய்ப்பு வளம் அப்பிரிவில் படித்தால் வேலை எளிதில் கிடைக்குமா, ஊதியம் போதுமானதாக இருக்குமா, மேற்படிப்புக்கு வழி, வெளிநாட்டு வாய்ப்பு முதலியவற்றைக் கருதிப் பாடப் பிரிவுகளைத் தேர்வு செய்யவும்.

**பொறியியல் கல்லூரிகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?**

பொதுவாக நாட்பட்ட கல்லூரிகள் அனுபவ முதிர்ச்சியால் நல்லபடி இயங்கும் என்று எதிர்ப்பார்க்கலாம். ஆனாலும் பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் கல்லூரிகளைத் தரவரிசையிட்டுச் சேர்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. அடிப்படை வசதிகள் : வகுப்பறை, நூலகம், விடுதி, விளையாட்டு/ஜிம் வசதி, மருத்துவ வசதி, வங்கி, **ATM,** போக்குவரத்து வசதி, கழிப்பறை, காண்டீன், மாணவியர் ஓய்வறை, சாலைகள் முதலியவை இவற்றில் அடங்கும்,

2. உடற்குறை மாணவர்களுக்கு : அவர்களுக்கான தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருத்தல்.

3. கல்லூரி நிறுவனங்களின்/நடத்துபவர்களின் கல்வி ஈடுபாடு, தொண்டு, மனப்பான்மை, மாணவர் நலனில் அக்கறை.

4. சரியான ஆசிரியர்–மாணவர் விகிதம். அனுபவமும் உயர்படிப்பும் திறமையும் கொண்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை விகிதம், நூலகம், வகுப்பறைகளின் இன்றைய கல்வி முறைகள், மின்னணுக் கருவிகளின் பயன்பாடு.

5. கடந்த பல்கலைக்கழகத் தேர்வு முடிவுகள். பிற கல்லூரிகளோடு ஒப்பிட்ட தர வரிசை.

6. பாடப்பிரிவு, கல்லூரி ஆகியவற்றின் தரச்சான்று நிலை **(NBA, NAAC Accrediation Status)**

7. கல்லூரி–பணிக்கூட ஈடுபாடு, பணியிடப் பயிற்சிக்கு ஏற்பாடு.

8. மாணவர்களுக்கான வேலையமர்வு உதவிக்குழு.

9. முன்னாள் மாணவர் குழுவும் அவர்களது கருத்தும்.

10. மேல்வகுப்பு மாணவர்களுக்கு குழுக் கலந்துரையாடல். தலைமையேற்கும் திறம், உரையாடும் புலமை, உடல் அசைவு மொழி முதலிய மென்திறமைகளில் **(Soft Skills)**பயிற்சி பெற வாய்ப்பு. **GRE, TOFEL, GATE** முதலிய தேர்வுக்குத் தனிப் பயிற்சி வகுப்புகள்.

11. இடைச் செருகல் மற்றும் பயோ பிரிவு மாணவர்களுக்கு பொறியியல் டிப்ளமோ, பிஎஸ்ஸி பயின்றுவிட்டு இரண்டாம் ஆண்டு **BE/B.Tech.** சேருபவர்களுக்கும் **(Lateral entrants),** 12ம் வகுப்பில் கணிதம் அல்லது பயாலஜி படிக்காமல் பயோ–பொறியியல் பிரிவுகளில் சேரு மாணவர்களுக்கும், விட்டுப்போன பாடங்களின் இணைப்பு வகுப்புகள் **(Bridge Courses)** நடத்தப்படும் சாத்தியம்.

12. ஜப்பானிய, பிரஞ்சு, ஜெர்மன் முதலிய பிறநாட்டு மொழிகளில் ஒன்றையேனும் கற்க வாய்ப்பு இருத்தல்.

13. ராகிங், டீஸிங் ஆகியவற்றைக் கண்காணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.

**வாய்ப்புள்ள பாடப்பிரிவுகள் :**

இன்று உலகம் முழுவதிலுமுள்ள பொருளாதாரத் தேக்கநிலை வேலைவாய்ப்பைப் பல துறைகளில் பாதித்துள்ளதைப் போல, பொறியியலிலும் பாதித்துள்ளது. இதனால் மட்டுமின்றி, வழக்கமாக நிகழும் சுழல் நிகழ்ச்சியின் ஒரு கட்டமாகவும், அண்மையில் மிக அதிகமாக விரும்பப்பட்டு வந்த ஐ.டி. உள்ளிட்ட சில பாடப் பிரிவுகள் இன்று கவர்ச்சி குன்றியும், ஒதுக்கப்பட்டு வந்த சிவில், மெக்கானிக்கல் முதலிய பிரிவுகள் கவர்ச்சி கூடியும் உள்ளன. இவற்றில் முதல் நிகழ்வின் பாதிப்பு பிற நாடுகளில் ஏற்பட்டுள்ளதை விட நமது நாட்டில் மிகக் குறைவாகவே நிகழ்ந்துள்ளது என்பது NASSCOM அறிக்கை முதலியவற்றின் மூலம் தெளிவாகிறது. நேரடி ஐடி பணிகளின் வளர்ச்சி வீதம் ஓரளவுக்குக் குன்றியிருந்தாலும் ஐடியைச் சார்ந்துள்ள பணிகளின் (IIES) வளர்ச்சி வீதம் அவ்வளவாகக் குறையவில்லை என்றும் தெரிகிறது. ஆனால், தமிழ்நாடு மட்டுமே 500க்கு மேற்பட்ட பொறியியர் கல்லூரிகளில் ஒவ்வொன்றிலும் 60 முதல் 120 கணினிப்பொறியாளர்களை உருவாக்கி வருகிறது.
மாணவர்கள் தெரிந்து முடிவெடுக்க உதவியாகச் சில முக்கிய பாடப்பிரிவுகளைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

**ஏரோ நாட்டிகல் என்ஜினியரிங் :**

விமானங்களை வடிமைத்தல், உருவாக்குதல், சந்தைப்படுத்துதல், பழுது பார்த்தல், நிர்வகித்தல் ஆகியவை பற்றியது. கட்டுப்பாட்டுப் பொறிகள் சோதனை முறைகள், காற்றாலை, ஏவுகணை, ராக்கெட், தாதுப்படிவு ஆய்வுகள், உயர்வேக இயக்கம், அதிர்வுகள் முதலியவை கற்பிக்கப்படும். வளி இயக்கவியல், ஹெலிகாப்டர் இயக்கம், கிரயோஜெனிக்ஸ், ஏவியானிக்ஸ், CAD, விமானப் பயிற்சிக்கூடம் முதலியவை சில விருப்பப் பாடங்கள். இப்பிரிவுடன் அஸ்ட்ரோநாட்டிகல் இன்ஜினியரிங் பிரிவையும் உள்ளடக்கிய ஏரோஸ்பேஸ் இன்ஜினியரிங் சென்னை ஐஐடியில் வழங்கப்படுகிறது.

நம் முந்தைய குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாம் சென்னை எம்ஐடியில் ஏரோ நாட்டிகல் பிரிவில்தான் படித்தார். ISRO, NAI, பன்னாட்டு விமான நிறுவனங்கள், விமான நிலையங்கள் முதலியவற்றில் பணி வாய்ப்பு உள்ளது. இயந்திரவியலில் இருந்து கிளைத்த பிரிவுகளில் இது ஒன்று.

**தானியங்கிப் பொறியியல் :**

இதையும் இயந்திரவியலில் இருந்து கிளைத்த ஒரு பிரிவாகக் கருதலாம். இத்துறையின் நிலையைக் கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார நிலையையே அளவிட்டு விடலாம். உள்தளப் பொறிகள், தானியங்கிகளின் வடிவமைப்பு தயாரிப்பு, பாதுகாப்பு பராமரிப்பு, போக்குவரத்து மற்றும் பாதுகாப்புத் துறைகளில் நிர்வாகம், கட்டுப்பாடு CAD முதலியன இப்பிரிவில் கற்பிக்கப்படும். பணிக்கூடப் பயிற்சி ஓர் இன்றியமையாத அங்கம். தானியங்கிகளின் தயாரிப்பு, பராமரிப்பு, தரக்கட்டுப்பாடு, வடிவமைப்புப் பொறியியல், விற்பனை, கணிப்பொறியியல், மேலாண்மை ஆகியவற்றில் பணிக்கும், இவை சார்ந்த பிரிவுகளில் மேற்படிப்புக்கும் இடமுண்டு.

**பயோ டெக்னாலஜி :**

சில ஆண்டுகளுக்கு முன் தகவல் தொழில்நுட்பத் துறைக்கு அடுத்தபடியாக விரும்பப்பட்டும், அண்மைக் காலத்தில் சற்று வரவேற்புக் குறைந்தும், இன்று மீண்டும்

வரவேற்புக் கூடியும் உள்ள துறைகளில் இது ஒன்று. தாவர, விலங்கு செல்களையும் நுண்ணுயிரிகளையும் மனிதர் நலத்திற்கு பயோ டெக்னாலஜி பயன்படுத்துகிறது. இது உயிரியலும் வேதிப் பொறியியலும் இணைந்த துறை. வேளாண்மை, உணவியல், மருத்துவம், மருந்தியல் உள்ளிட்ட பல துறைகளின் அடிப்படையில் இயங்குவது. இதை பயோ கெமிஸ்ட்ரி, மைக்ரோ பயாலஜி, செல்திசு வளர்ப்பு முதலிய துறைகளைப் பயன்படுத்தும் அறிவியல் என்று **The European Federation of Biotechnology** வரையறை செய்கிறது.

பயோ மெடிக்கல் பொறியியல், பயோ இன்ஃபர்மேடிக்ஸ், பயோமெடிக்கல் இன்ஸ்ட்ரூமென்டேஷன் ஆகியவை இத்துறையிலிருந்து கிளைத்த பிற பிரிவுகள்.

ஸ்டெம்செல் உத்திகள், **DNA** டெக்னாலஜி, **DNA** வாக்சின்கள், பயோ சென்சார், பயோரெமிடியேஷன் முதலிய பலவும் இதில் அடங்கும்.

மருத்துவம், உடல்நலவியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், சுற்றுச்சூழல் முதலியவற்றில் ஆராய்ச்சி, தயாரிப்பு மற்றும் விற்பனைத் துறைகளில் இப்பொறியாளர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல வாய்ப்பு உண்டு.

**நேனோ டெக்னாலஜி :**

இதுவும் பல துறைகள் சம்பந்தப்பட்டது. மருந்தியல், ஐடி, மின்னணுவியல், பாலிமர்கள், உடல் நலவியல், மருத்துவம், டெக்ஸ்டைல், தானியங்கியல், டெலிகாம், பயோடெக், இயற்பியல், உணவு, கணினியியல், **R & D,** மார்க்கெட்டிங் முதலியவற்றிலும் பயன்படுகிறது. எதிர்காலத்தில் இத்துறையில் பணியாற்ற உலக அளவில் 10 லட்சம் பேர் தேவைப்படுவார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது.

உலகப் புகழ் பெற்ற பகல்கலைக்கழகங்கள் அனைத்தும் நேனோ அறிவியல், நேனோ தொழில்நுட்பத்தில் பட்டப்படிப்புகளையும் மற்றும் பட்ட மேற்படிப்புகளையும் அறிமுகப்படுத்தி உள்ளன. அவற்றுள் லண்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடத்தும் நானோ தொழில்நுட்பம் சார்ந்த முதுகலை ஆராய்ச்சிப் படிப்பும் **(M.Res.)** மற்றும் பி.எச்.டி. ஆராய்ச்சிப் படிப்பும் குறிப்பிடத்தக்கவை. புகழ்பெற்ற இந்தியக் கல்வி நிறுவனங்களான இந்திய அறிவியல் ஆராய்ச்சிக் கழகம் **(IISc)**பெங்களூரில் உள்ள ஜவஹர்லால் நேரு அறிவியல் ஆராய்ச்சிக்கழகம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகங்கள் (ஐ.ஐ.டி.) தேசிய தொழில் நுட்பக் கழகம், **(NIT)** அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களில் இத்துறையில் பி.எச்.டி. ஆய்வு நடத்தப்படுகின்றன.

இத்துறையில் உள்ள படிப்புகள். பி.டெக். (நேனோ டெக்னாலஜி) எம்.டெக். (நேனோ டெக்னாலஜி)

**செராமிக் டெக்னாலஜி :**

தானியங்கி, அணுசக்தி, சிமெண்ட் துணி, மின்சாரம், மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு, சுகாதாரம், மருத்துவக் கருவிகள், கட்டுமானம் ஆகிய துறைகளில் செராமிக் டெக்னாலஜி மிகவும் பயன்படுகிறது. உயர்வெப்பக் கருவிகள் மின் உற்பத்தி மற்றும் கடத்தல் கருவிகள், எதிர்காலப் பயன்பாடுகள் ஆகியவையும் இப்படிப்பில் கற்பிக்கப்படும். இவை சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியாரின் ஆய்வுக்கூடங்களிலும், பணிக்கூடங்களிலும் இவற்றின் தயாரிப்பு விற்பனைத் துறைகளிலும் வேலைவாய்ப்பு உண்டு.

**வேதிப் பொறியியல் :**

வேதியியல் பயன்பாடு தொடர்பான தயாரிப்பாளர்களுக்கும் நுகர்வோருக்கும் பயன்படுவது பெட்ரோலியம், உரம், உணவுப் பதனிடல், சர்க்கரை, மருந்து, வண்ணப்பூச்சு,

சிமெண்ட், செயற்கை நூலிழை, கனிமங்கள், செராமிக்ஸ் முதலியவற்றின் தயாரிப்புத் தொடர்பான வடிமைப்பு, கட்டுமானம், பராமரிப்புத் துறைகளில் இத்துறைப் பொறியாளர்கள் தேவைப்படுவார்கள். சுற்றுப்புறட்சசூழலைப் பேணுவதும் இவர்களது பொறுப்பு. அணு ரியாக்டர்கள், பாதுகாப்பு விண்வெளி ஆய்வு, ஊர்திகள் தொடர்பான நிறுவனங்களில் உள்நாட்டிலும், அதைவிட அதிகமாக வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு உண்டு. மேற்படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் வெளிநாட்டு வரவேற்பு மிகுதியாகவே இருக்கும்.

**ஜியோ இன்ஃபர்மேடிக்ஸ் :**

இதை சிவில் பொறியியலிருந்து கிளைத்தாகக் கொள்ளலாம். பொறியியல் ஜியாலஜி, கிராபிக்ஸ், நில அளவை, கேடஸ்ட்ரல் மற்றும் மின்னணு சர்வே, போட்டோகிராமெட்ரி, தொலை உணர்வியல், கார்ட்டோகிராபி, ஹைட்ராலஜி, துணைக்கோள் ஜியோடஸி, புவியியல் தகவலியல், கணினிப் பயன்பாடு, CAD டிஜிட்டல் இமேஜ் ப்ராசசிங் ஆகியவை கற்பிக்கப்படும். நகர்ப்புற, வட்டாரத் திட்டமிடல், சுற்றுச்சூழலியல், சமூகவியல், பொருளாதாரம் ஆகியவையும் பாடத்தில் உண்டு.

இந்திய சர்வே, DST, தேசியத் தொலை உணர்வு ஏஜன்சி, CMDA, நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித் துறைகளில் இத்துறை வல்லுநர்களுக்குப் பணி உண்டு.

**இன்டட்ரியல் இன்ஜினியரிங், மானுஃபேக்சரிங் இன்ஜினியரிங் :**

இவையும் இயந்திரப் பொறியியலின் கிளைப்படிப்புகள் எனலாம். ரோபோடிக்ஸ், தானியக்கம், ஆலைகள் தொடர்பான கருவிகள், தளவாடங்களின் தயாரிப்பு மூலப் பொருட்கள், நிர்வாகம், லேபர் முதலியவை இவற்றில் கருதப்படும். இன்டஸ்ட்ரியல் என்ஜினியரிங்கில் என்ஜினியரிங் கிராபிக்ஸ், மெஷின்டூல்ஸ், மின்கருவிகள், பொருள்வலிமை, பொறி வரைவு, வெப்ப இயக்கவியல், ஆபரேஷன்ஸ் ரிசர்ச், CNC டெக், அக்கவுண்டிங், மேலாண்மை, கம்ப்யூட்டர் சிமுலேஷன் முதலியவை. கற்பிக்கப்படும். CAD, ஹைடிராலிக்ஸ், நுமேடிக் கண்ட்ரோல், வேல்யூ என்ஜினியரிங், ரீ என்ஜினியரிங், மைக்ரோ புராசசர், மரபு சாரா மேலாண்மை, முதலியவை மானுஃபேக்சரிங் என்ஜினியரிங்கில் இடம்பெறும்.

BHEL, NLC, தானியங்கி மற்றும் மின் உற்பத்தித் துறைகள் முதலிய பலவற்றிலும் அரசு மற்றும் தனியார் துறைகளிலும் நல்ல வேலைவாய்ப்பு உண்டு.

**தோல் தொழில்நுட்பம் :**

தோல் பதனிடுதல், காலணி, தோலாடை, வீட்டு உபயோக மற்றும் பணிக்கூடத் தயாரிப்புகள், சுற்றுச்சூழல் முதலியன சம்பந்தப்பட்டது. கால்நடைச் செல்வம் கொழித்துள்ள நமக்கு நெடுங்காலமாகவே இத்துறையில் ஈடுபாடு உள்ளது. மத்திய–மாநில அளவிலான தோல் தொடர்வுடைய வேதிப்பொருட்கள், முறைகள், மெஷினரி, ஆராய்ச்சி, காலணி முதலிய பல துறைகளில் வேலைவாய்ப்பு உண்டு. இதே துறையிலும், சம்பந்தப்பட்ட வேறு சில துறைகளிலும் மேற்படிப்புக்கும் இடமுண்டு.

**மெக்கட்ரானிக்ஸ் :**

இதன் பெயரிலேயே மெக்கானிகல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் இணைந்திருப்பது தெரியும். உடன், எலக்ட்ரிக்கலும் இணைந்தது. இதில் ப்ளூயிட் மெக்கானிக்ஸ் மற்றும் மெஷினரி, மின் பொறிகள் மற்றும் இயக்கிகள், டிஜிட்டல் எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் கிராபிக்ஸ், CNC எந்திரங்கள், CAD, CAM, பவர் எலக்ட்ரானிக்ஸ், TQM, தன்னியக்கம், ரோபோடிக்ஸ் முதலியன கற்பிக்கப்படும். இத்தனை துறைகளிலும் பணி வாய்ப்பு உண்டு.

**உலோகவியல் :**

தாதுக்களிலிருந்து கனிமங்களைப் பிரித்தல் முறைகளையும் பயன்படுத்துவதையும் பற்றிய துறை. எரிபொருள், உலை, ரீஃப்ரேக்டர், ஃபிசிகல் மெட்டலர்ஜி, மெட்டலர்ஜிகல் தர்மோடைனமிக்ஸ், துரு மற்றும் மேற்பரப்புப் பொறியியல், பொருள் ஆய்வு, ஃபவுண்டரி, வார்ப்பு, பாலிமர்கள், செராமிக்ஸ், தூள் உலோகவியல் முதலியவை பாடப் பகுதிகள். இரும்பு, அலுமினியத் துறைகளில் பணிவாய்ப்பு உண்டு.

**சுரங்கவியல் :**

பெண்கள் (தமிழ்நாட்டில்) அனுமதிக்கப்படாத மற்றொரு துறை இது. இதற்கும் இயந்திரவியலே அடிப்படை. சுரங்க ஜியாலஜி, அடிப்படைக் கருவிகள், தளவாடங்கள், சுற்றுச்சூழலியல், சர்வே, தரைமட்ட மற்றும் தரையடிச் சுரங்கம், சுரங்கத் திட்டமும் வடிவமைப்பும், சுரங்கச் சட்டங்கள், பாதுகாப்பு முதலீடு, TQM, மேலாண்மை முதலியவை கற்பிக்கப்படும். தமிழ்நாட்டில் நெடுங்காலமாக கிண்டி பொறியியற் கல்லூரியில் மட்டுமே வழங்கப்பட்டு வந்த பாடப்பிரிவுகளில் இது ஒன்று.

**பாலிமர் டெக்னாலஜி :**

பிற்காலத்தில் தோன்றிய துறைகளில் ஒன்று. மிகுந்த சக்தியும், துருவாலும், வேதிப்பொருட்களாலும் தாக்கப்படாத தன்மையும் கொண்டது என்பதால் பாலிமர் பல முக்கிய பயன்கள் கொண்டது. பாத்திரங்கள் முதலாக விண்வெளி ஓடங்கள், தானூர்திகள், மின் தளவாடங்கள் எனப் பலவற்றிலும் பயன்படுவது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நல்ல வேலைவாய்ப்பு உண்டு.

**ரப்பர், பிளாஸ்டிக் டெக்னாலஜி :**

ரப்பர், பிளாஸ்டிக் பொருட்களின் தயாரிப்பும் பயன்பாடும் பற்றிய படிப்பு. சம்பந்தப்பட்ட கருவிகளும் கற்பிக்கப்படும். 6–8 வாரங்களுக்குத் தொழிற்கூடப் பயிற்சியும் உண்டு. இத்துறைகளில் மட்டுமின்றி, இவை தொடர்பான கெமிக்கல் இன்டஸ்ட்ரி, ஆய்வகங்களிலும் வேலை கிடைக்கும்.

**டெக்ஸ்டைல் டெக்னாலஜி :**

துணி உற்பத்தி நுணுக்கங்களோடு, அத்துறையில் பயன்படும் கருவிகள், அவற்றின் பராமரிப்பு, நிர்வாகம் ஆகியவற்றையும் பற்றியது. இந்தியாவும் வங்காளதேசமும், சைனாவும், எகிப்தும் மட்டுமே உலகின் துணித் தேவையின் பெரும் பகுதியைத் தீர்ப்பதால் நமக்கு இது ஒரு முக்கியமான துறை.

வோல்டாஸ், ரிலையன்ஸ், பாம்பே டையிங், NTC, இந்திய ஆர்கானிக் கெமிக்கல்ஸ் முதலிய தனி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிவாய்ப்புகள் நிறைய உண்டு. இதே துறையில் மட்டுமின்றி, மேலாண்மை, உற்பத்தி முதலிய துறைகளிலும் மேற்படிப்புக்கு இடமுண்டு.

இவை தவிர, கெமிக்கல் மற்றும் பெட்ரோ கெமிக்கல் பொறியியல், உணவுத் தொழில்நுட்பம், ஃபார்மாசூட்டிகல் டெக்னாலஜி, பெட்ரோலியம் சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல் பொறியியல், ஃபேஷன் டெக்னாலஜி, மெட்டீரியல் அறிவியல், வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனப் பொறியியல், ஆடைவடிவமைப்பு டெக்னாலஜி ஆகியவை அண்மையில் தோன்றியுள்ள சில புதிய கவனத்தை ஈர்க்கும் பாடப்பிரிவுகள். தமது விருப்பத்தையும் தேவையையும், அவற்றின் தன்மைகளையும் கருத்தில் கொண்டு மாணவர்கள் தேர்ந்தெடுத்துப் பயன்பெறலாம்.

## பாடப்பிரிவுகள்

அண்ணா பல்கலைக்கழக கவுன்சிலிங்கின்போது இன்ஜினியரிங் படிப்புகளை சுருக்கமாக எப்படி அழைப்பார்கள் என்பதை இங்கே காணலாம்.

| Br.Code | Branch Name | Br.Code | Branch Name |
|---|---|---|---|
| AE | Aeronautical Engineering | AI | Agriculture and Irrigating Engg.(SS) |
| AP | Apparel Technology (SS) | AR | Architecture |
| AS | Automobile Engineering (Self Supporting) | AU | Automobile Engineering |
| BM | Bio Medical Engineering | BS | Bio-Technology (SS) |
| BT | Bio Technology | BY | Bio Medical Engineering (SS) |
| CB | Chemical Technology (Paper and Pulp Tech) | CC | Ch & Elec. Chem (SS), Karaikudi |
| CE | Civil Engineering | CF | Chemical Technology (Fertilizer and ChemicalTech) |
| CH | Chemical Engineering | | |
| CM | Computer Science and Engg. (SS) | CN | Civil Engineering (SS) |
| CO | Chemical Technology (Petrol Chemical Tech) | CR | Ceramic Technology (SS) |
| CS | Computer Science and Engg. | CT | Chemical Technology (Cement Technology) |
| EC | Electronics and Comm Engg. | EE | Electrical and Electronics Engg. |
| EF | Electrical and Electronics (SS) | EI | Electronics and Instru. Engg. |
| EM | Electronics & Comm Engg (SS) | ES | Elec & Electronics (Sandwich) (SS) |
| EW | Elec. and Electronics Engg. SW (SS) | EY | Elec & Electronics Engg. (SS) |
| FD | Food Technology | FS | Food Technology (SS) |
| FT | Fashion Technology | FY | Fashion Technology (SS) |
| GI | Geo-Informatics | IB | Industrial Bio-Technology |
| IC | Instrumentation and Control | IE | Industrial Engineering |
| IM | Information Technology (SS) | IS | Industrial Bio-Technology (SS) |
| IT | Information Technology | IY | Instrumentation and Control (SS) |
| LE | Leather Technology | MA | Materials Science and Engg. (SS) |
| MC | Mechatronics | MD | Medical Electronics |
| ME | Mechanical Engineering | MF | Mechanical Engineering (SS) |
| MI | Mining Engineering | MN | Manufacturing Engineering |
| MR | Marine Engineering | MS | Machanical Engg (Sandwich) (SS) |
| MT | Metallurgical Engineering | PB | Paper and Pulp Technology |
| PC | Petro Chemical Technology | PE | Petroleum Engineering |
| PH | Pharmaceutical Engineering | PL | Polymer Technology |
| PM | Pharmaceutical Technology (SS) | PP | Petro. Refi. and Petro. Chem. Tech (SS) |
| PR | Production Engineering | PS | Production Engg (Sandwich) (SS) |
| PT | Printing Technology | PW | Production Engg. SW (SS) |
| RP | Rubber and Plastic Technology | RU | Rubber Technology |
| TC | Textile Chemistry | TX | Textile Technology |

### சாண்ட்விச் படிப்பு

படிப்பு, தொழில் பயிற்சி என்று மாணவர்களின் படிப்புக் காலத்திலேயே நேரடித் தொழிற் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் படிப்பு இது. மெக்கானிக்கல், புரொடக்ஷன், எலெக்ட்ரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ் போன்ற குறிப்பிட்ட சில பாடப் பிரிவுகளில் 'சாண்ட்விச்' படிப்புகள் உள்ளன. பொறியியல் இளநிலைப் பட்டப்படிப்புகளுக்கான காலம் நான்கு ஆண்டுகள். 'சாண்ட்விச்' பொறியியல் படிப்புகளுக்கான படிப்புக் காலம் ஐந்து ஆண்டுகள். பாடத் திட்டத்தில் அதிக வேறுபாடு இருக்காது. இப்படிப்பைப் படிக்கும் மாணவர்களுக்கு உடனடியாக நல்ல வேலைவாய்ப்பு உண்டு!

**Birla Institute of Technology BITS, PILANI**

தமிழ்நாட்டில் கணிசமான மாணவர்கள் ராஜஸ்தான் மாநிலம் பிலானியில் உள்ள **Birla Institute of Technology (Bits)** கல்லூரியில் சேர்ந்துவிட ஆர்வம் காட்டுகிறார்கள். +2 தேர்வில் வாங்கிய மார்க்குகள் தகுதிக்கு எடுத்துக் கொள்ளப்படும். எனினும் **BITSAT** எனப்படும் நுழைவுத்தேர்வில் வாங்கும் ஸ்கோர் அடிப்படையில்தான் அட்மிஷன் செய்யப்படும். இங்கு படித்தவர்களுக்கு வேலை நிச்சயம். இங்குள்ள கோர்ஸ்கள் விவரம் :

**B.E. (Hons.) in Chemical, Civil, Electrical, Electronics, Mechanical, Computer, Instrumentation, Manufaturing, Biotechnology, B.Pharm (Hons), M.S. (Hons) in Bio Sciences, Chemistry, Maths, Physics, Economics - Dual degree Scheme.**

### சி.பி.எஸ்.இ. மாநில தேர்வு முறை மார்க்குகளை சமச்சீராக கணக்கிடுவது எப்படி?

புதிய முறை அறிமுகம்

பிளஸ்–2 தேர்வை பொறுத்தவரையில் மாநில பாடத்திட்டம், சி.பி.எஸ்.இ. என்று சொல்லப்படும் மத்திய கல்வி வாரியம் என்ற இரண்டு வகையான பாடத்திட்டங்களின்கீழ் மாணவர்கள் பிளஸ்–2 தேர்வு எழுதுகிறார்கள். இரண்டு திட்டங்களுக்கும் பாடத்திட்ட அளவு மற்றும் மாணவர்கள் வாங்கும் மதிப்பெண்ணில் வேறுபாடு இருப்பதால் எந்த மாணவர்களும் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக சமச்சீராக்குதல் என்று புதிய மதிப்பெண் ஒழுங்குபடுத்தும் முறையை அரசு கொண்டு வந்துள்ளது.

மாநில பாடத் திட்டத்தில் நூற்றுக்கு நூறு வாங்கும் மாணவர்கள் அதிகம். ஆனால், சி.பி.எஸ்.இ. தேர்வில் 100–க்கு 100 வாங்குவது மிகவும் கடினம் என்ற கருத்து நிலவுகிறது. இதற்காக மதிப்பெண்ணை சமப்படுத்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மார்க்கை மாற்றுவது எப்படி?**

இதன்படி சி.பி.எஸ்.இ. தேர்வில் குறிப்பிட்ட பாடத்தில் ஒரு மாணவர் வாங்கிய அதிகபட்ச மதிப்பெண் அந்தப் பாடத்தைப் பொறுத்தவரை 100–க்கு 100 என்று கருதப்படும். உதாரணமாக சி.பி.எஸ்.இ. தேர்வில் இயற்பியல் பாடத்தில் முதல் மதிப்பெண் 90 என்று வைத்துக் கொள்வோம். இந்த மதிப்பெண்ணை மாநிலப் பாடத்திட்டத்திற்கு சமப்படுத்தும்போது அது 100ஆக கணக்கிடப்படும்.

சி.பி.எஸ்.சி. மாணவர் இயற்பியலில் 60 மதிப்பெண் பெற்றிருந்து அதே சி.பி.எஸ்.சி.யை சேர்ந்த முதலிட மாணவர் இயற்பியலில் 90 மார்க் பெற்றிருந்தால் 60 மார்க்கு என்பது 66.66 என்று கணக்கிடப்படும்.

உதாரணமாக – $\frac{100 \times 60}{90} = 66.66\%$

இவ்வாறு சி.பி.எஸ்.சி. பாடமுறையில் படிக்கும் ஒவ்வொரு மாணவனின் மார்க்கும் சமச்சீர் முறையில் கணக்கிடப்பட்டுப் பின்னர் பொது தரப்பட்டியல் தயாரிக்கப்படும். அதன் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெறும்.

அதே நேரம் இயற்பியலில் சி.பி.எஸ்.சி. மாணவரும், மாநில திட்ட மாணவரும் 100 மார்க்கு பெற்றிருந்தால் சி.பி.எஸ்.சி. மாணவர்களின் மார்க்குகளில் எந்த மாற்றமும் இருக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

## பகுதி நேர B.E./B.Tech. படிப்பு

தகுதி :

**Part Time B.E.** பட்டப்படிப்பு படிக்க விரும்புவர் தமிழகத்தை இருப்பிடமாகக் கொண்டிருக்க வேண்டும். மாநில தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டயப் படிப்பில் தேர்ச்சி. இப்பட்டயப் படிப்பும் பட்டப் படிப்பும் தேர்ந்தெடுக்கப்படும் படிப்பிற்கு தொடர்புடையதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் சேர்க்கை ஆண்டிற்கு 1 வருடம் முன்னதாக பட்டயப் படிப்பினில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தற்போது பகுதிநேர படிப்பு தரும் கல்லூரிகளும், கோர்ச்சுகளும் வருமாறு.

| Sl. No. | Name of the Engineering College | Part time B.E. / B.Tech. Degree Courses offered |
|---|---|---|
| 1. | Government College of Technology (Autonomous) Thadagam Road, Coimbatore - 641 013 | Civill Engineering<br>Mechanical Engineering<br>Electrical and Electronics Engg.<br>Electronics and Communication Engg. |
| 2. | Government College of Engineering (Autonomous) Salem-636 011 | Civill Engineering<br>Mechanical Engineering<br>Electrical and Electronics Engg.<br>Electronics and Communication Engg. |
| 3. | Government College of Engineering Tirunelveli 627 007 | Civill Engineering<br>Mechanical Engineering<br>Electrical and Electronics Engg.<br>Electronics and Communication Engg.<br>Computer Science and Engineering |
| 4. | Alagappa Chettiar College of Engineering and Technology, (Autonomous), Karaikudi - 630 004 | Civill Engineering<br>Mechanical Engineering<br>Electrical and Electronics Engg.<br>Electronics and Communication Engg. |
| 5. | Thanthai Periyar Government Institute of Technology, Bagayam, Vellore - 632 002 | Mechanical Engineering<br>Electronics and Communication Engg. |
| 6. | Government College of Engineering, Bargur - 635 104 | Electrical and Electronics Engg. |

| Sl. No. | Name of the Engineering College | Part time B.E. / B.Tech. Degree Courses offered |
|---|---|---|
| 7. | PSG College of Technology (Autonomous), Peelamadu, Coimbatore - 641 004. | Textile Technology |
| 8. | Coimbatore Institute of Technology (Autonomous), Civil Aerodrome Post, Coimbatore - 641 014 | Civill Engineering<br>Mechanical Engineering<br>Electrical and Electronics Engg. |
| 9. | Thiagarajar College of Engineering (Autonomous), Madurai - 625 015 | Civill Engineering<br>Mechanical Engineering<br>Electrical and Electronics Engg. |

### இடைநிலை சேர்க்கை (லேட்டரல் என்ட்ரி ஸ்கீம்)

*தமிழ்நாடு அரசு, அரசு உதவிபெறும் பொறியியல் கல்லூரிகள், தனியார் பொறியியல் கல்லூரிகள் (சரண்டர் செய்யப்பட்ட சீட்டுகளுக்கு மட்டும்) அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் பி.இ. பி.டெக். படிப்புகளில் இரண்டாம் ஆண்டில் நேரடியாக (லேட்டரல் என்ட்ரி) சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறு சேர்வதற்கான தகுதிகள்*

*1. அந்தந்த பொறியியல்/தொழில்நுட்ப பட்டயப்படிப்பில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மார்க்களுக்குடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.*

*2. பி.எஸ்.ஸி அறிவியல் பட்டப்படிப்பில் (10+2+3 திட்டத்தில் 3 ஆண்டு பட்டப்படிப்பு) நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இவர்கள் பட்டப்படிப்பில் கணிதத்தை பாடமாக படித்திருக்க வேண்டும்.*

*மேல் விபரங்களுக்கு : தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்குனரகம், சென்னை–600 025.*

### நிர்வாக ஒதுக்கீட்டு இருக்கைகள்

*தமிழ் நாட்டில் உள்ள சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் பி.இ./பி.டெக். நிர்வாக ஒதுக்கீட்டு இருக்கைகளுக்கு விண்ணப்பிக்க பின்வரும் முகவரியிலோ அல்லது அந்தந்தப் பொறியியல் கல்லூரிகளிலோ தொடர்பு கொள்ளலாம்.*

**Consortium of Self Financial professional Arts & Science Colleges in Tamil Nadu, N. 29, Ganapathy Street, Royapettah, Chennai 600 014. Website : www.tnsfconsortium.org. Email : tnsfconsortium@gmail.com. Phone : 044 - 2450 2203 Fax : 044 - 2450 1270.**

### கவுன்சிலிங் எப்படி இருக்கும்?

*என்ஜினியரிங் படிக்க வேண்டும் என்றால் மாணவ–மாணவிகள் தாங்கள் எந்தப் பாடப்பிரிவைப் படிக்க வேண்டும். மற்றும் எந்தக் கல்லூரியை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பனவற்றை முன்கூட்டியே முடிவு செய்ய வேண்டும். இவற்றிற்கு பெற்றோர்களும் உதவி செய்ய வேண்டும். பெற்றோர்கள் மாணவ–மாணவிகளுக்கு விருப்பப்பட்ட பாடப்பிரிவை தேர்வு செய்வதில் உதவி செய்தாலும் கல்லூரியைத் தேர்வு செய்வதில் மாணவ–மாணவிகளைக் காட்டிலும் பெற்றோர்களே முக்கியப் பங்கு வகிக்க வேண்டும். பாடப்பிரிவையும் கல்லூரியையும் ஒன்றாக இணைத்துப் பார்த்து தேர்வு செய்ய வேண்டும்.*

*பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை படிப்புக்காக வெளியூர் செல்ல அனுமதிக்கலாமா மற்றும் வெளியூரில் சென்று விடுதியில் தங்கி படிக்க வைக்க தங்களிடம் பணவசதி உண்டா போன்றவற்றை சிந்தனை செய்து கல்லூரியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தகவல் கையேட்டிலிருந்தும் தங்களுக்கு வேண்டிய சில விவரங்களை தெரிந்து கொள்ளலாம். இவை எல்லாவற்றையும் மனிதல் கொண்டு பாடப்பிரிவையும் கல்லூரியையும் வரிசைப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் வரவேண்டிய கலந்தாய்வு தினத்திற்கு ஒருநாள் முன்னதாகவே கலந்தாய்வுக் கூடத்திற்கு வந்து தாங்கள் விரும்பிய கல்லூரிகளில் விரும்பிய பாடப்பிரிவில் காலி இடங்கள் உள்ளனவா என்பதை தெரிந்து கொள்வது நல்லது. காலி இடங்கள் இல்லாததை நீக்கிவிட்டு மீண்டும் பாடப் பிரிவையும் கல்லூரியையும் வரிசைப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் கலந்தாய்வுக்கு செல்லும்பொழுது இதில் கூட சில பிரிவுகளில் சில கல்லூரிகளில் காலி இடங்கள் இல்லாமல் போகலாம். ஆதலால் தாங்கள் அதிகமாக பாடப்பிரிவையும் கல்லூரிகளையும் தேர்வு செய்து வைத்திருந்து ஒவ்வொரு முறையும் வரிசைப்படுத்திக் கொள்ளுங்கள்.*

*மாணவர்கள் கலந்தாய்வுக்கு வரும்பொழுது தங்களுடன் பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது விவரம் தெரிந்த வேறொருவரையோ அழைத்து வரலாம். மாணவர்கள் கலந்தாய்வுக்கு தவிர்க்க முடியாத காரணத்தால் வர முடியாமல் போனால் தாங்கள் அத்தாட்சி நபரை கலந்தாய்வுக்கு அனுப்பி பாடப் பிரிவையும் கல்லூரியையும் தேர்வு செய்து கொள்ளலாம். அல்லது தாங்கள் மறுநாளோ அல்லது வேறொரு நாளிலோ கலந்தாய்வுக்கு வந்து அன்றைய நிலவரப்படி அங்குள்ள காலி இடங்களிலிருந்து பாடப்பிரிவையும் கல்லூரியையும் தேர்வு செய்யலாம்.*

*கலந்தாய்வுக்கு வரும்பொழுது கலந்தாய்வு அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து சான்றிதழ்களையும் கொண்டுவர வேண்டும். இனவாரியாக மற்றும் சிறப்பு ஒதுக்கீட்டின் கீழ் உள்ள இடங்களுக்கு தாங்கள் தகுதி பெற்று இருந்தால் அதற்குரிய நிரந்தர சாதிசான்றிதழ் மற்றும் சிறப்பு இட ஒதுக்கீட்டிற்கு சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளால் வழங்கப்பட்ட சான்றிதழ்களையும் கொண்டு வர வேண்டும்.*

*கலந்தாய்வின் ஆரம்பத்திலேயே உங்கள் விருப்பங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரியப்படுத்துங்கள். பொதுப் பிரிவிலோ அல்லது இனவாரியான பிரிவிலோ காலி இடங்கள் இல்லாமல் போனால் தாங்கள் சிறப்பு இட ஒதுக்கீட்டிற்கு தகுதி பெற்று இருந்தால் அதில் உள்ள இடங்களில் தங்களுக்கு விருப்பமிருந்தால் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். சில சமயங்களில் உடல் ஊனமுற்றோர் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு உண்டான சிறப்பு ஒதுக்கீட்டிற்கு முன்கூட்டியே கலந்தாய்வு நடைபெறும். தாங்கள் சிறப்பு இட ஒதுக்கீட்டிற்குத் தகுதி இருந்தால் சிறப்பு இட ஒதுக்கீட்டு கலந்தாய்விலும் கலந்து கொண்டு பாடப்பிரிவுகள் மற்றும் கல்லூரிகளை தேர்ந்தெடுக்கலாம். இம்மாணவர்கள் பிறகு நடைபெறுகின்ற பொது கலந்தாய்விலும் கலந்து கொண்டு பாடப்பிரிவு மற்றும் கல்லூரிகளை தேர்ந்தெடுக்கலாம்.*

*கட்டடக் கலை படிப்பில் சேர தனியாக கட்டக்கலை சேர்க்கைக்கு உண்டான விண்ணப்பங்கள் கிடைக்கும். கட்டடக் கலை பாடப் பிரிவில் சேர்வதற்கு தனியாக கலந்தாய்வு நடத்தப்படும். கட்டக்கலை பாடப்பிரிவில் சேருவதற்கு அகில இந்திய அளவிலான கட்டடக் கலை நாட்டத் தேர்வு* **(NATA)** *எழுதி இருக்க வேண்டும்.*

***கட் ஆஃப் மதிப்பெண்கள் :***

*கணிதம் பாடத்தில் பெற்ற மதிப்பெண்களை 200க்குப் பதிலாக 100க்கு மாற்றிக் கொள் வேண்டும். அதேபோல இயற்பியலில் பெற்ற 200க்கான மதிப்பெண்ணை 50க்கும்,*

வேதியியலில் பெற்ற 200க்கான மதிப்பெண்ணை 50க்கும் மாற்றிக் கொள்ள வேண்டும். இந்த மூன்று பாடங்களின் கூடுதலை மொத்தம் 200க்கு மாற்றிக்கொள்வதே கட்அஃப் மதிப்பெண்கள் எனப்படுகிறது.

(உதாரணம் : 100+50+50 = 200. இதில் மாணவர் எடுத்தது 90+45+50=185. இந்த 185தான் மாணவனின் கட்அஃப் மார்க்.)

**ரேண்டம் எண் மற்றும் ரேங்கிங் :**

ஆந்திரா பல்கலைக்கழகத்தில் **Marine Engineering and Naval Architechture** கோர்ஸ் உள்ளது. நேவல் ஆர்க்கிடெக்ஸர் கோர்ஸில் எல்லாவகை **Marine Vehicle**–ன் டிசைன், கட்டுமானம் **(Construction)**, பராமரிப்பு **(Maintenance)** மற்றும் சீர்செய்தல் **(repair)** கற்றுக் கொடுக்கப்டுகின்றன. இந்தியாவில் மொத்தம் 138 மெரைன் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.

இந்திரா காந்தி தேசியத் திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தில் டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஷிப்பிங்கும் இணைந்து அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் பி.எஸ்.ஸி. நாட்டிக்கல் சயின்ஸ் படிப்பை நடத்துகிறது. இதில் சேர நுழைவுத் தேர்வு எழுதி பாஸ் செய்ய வேண்டும். விபரங்களுக்கு : **www.ignou.ac.in**

**படிப்புச் செலவு :**

கல்வி நிறுவனங்களைப் பொறுத்துக் கட்டணம் மாறுபடும். பொதுவாக ஆண்டுக்கு ரூ. 2 இலட்சம் வரை செலவாகும்.

இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் :

சென்னையில் உள்ள இந்தியக் கடல்சார் பல்கலைக்கழகம் (இண்டியன் மாரிடைம் யுனிவெர்சிடி) இந்தியாவின் முதல் கடல்சார் பல்கலைக்கழகம் என்ற பெருமை பெற்றது. கடந்த 2008–ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பல்வேறு கடல்சார் நிறுவனங்கள் ஏற்கனவே பல ஆண்டுகளாக இயங்கி வந்தவை. அவையாவன:

| | | |
|---|---|---|
| நேஷனல் மாரிடைம் அகாடமி | – | சென்னை |
| டி.எஸ். சாணக்கியா | – | மும்பை |
| லால்பகதூர் சாஸ்திரி மாரிடைம் கல்லூரி | – | மும்பை |
| மரைன் இன்ஜினியரிங் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் | – | மும்பை மற்றும் கொல்கத்தா |
| இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் போர்ட் மேனேஜ்மெண்ட் | – | கொல்கத்தா |
| நேஷனல் ஷிப் டிசைன் அண்ட் ரிசர்ச் சென்டர் | – | விசாகப்பட்டினம் |
| இண்டியன் மாரிடைம் யுனிவெர்சிட்டி கேம்பஸ் | – | கொச்சி |

மேலும் 50 கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ளன **(Affliated)**. மொத்தம் 5000 மாணவர்கள் இந்நிறுவனங்களில் பயில்கின்றனர்.

**படிப்புகள் :**

ஒரு ஆண்டு நாட்டிக்கல் சயின்ஸ் டிப்ளமா / முதுகலை மரைன் இன்ஜினியரிங் டிப்ளமா

மூன்று ஆண்டு நாட்டிக்கல் சயின்ஸ் டிகிரி / மாரிடைம் சயின்ஸ் டிகிரி

நான்கு ஆண்டு மரைன் இன்ஜினியரிங் டிகிரி.

நான்கு ஆண்டு பி.டெக். (நேவல் ஆர்க்கிடெக்சர் அண்ட் ஓஷன் இன்ஜினியரிங்)

இரண்டு ஆண்டு எம்.பி.ஏ. (ஷிப்பிங் அண்ட் போர்ட் மேனேஜ்மெண்ட், லாஜிஸ்டிக் மேனேஜ்மெண்ட், இண்டர்நேஷனல் டிரான்ஸ்போர்ட்)

**சேர்க்கைத் தகுதி :**

1. அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் +2 படிப்பில் இயற்பியல், வேதியியல், கணிதப் பாடங்களில் 55 சதம் மார்க்குகளுக்குக் குறையாமல் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. கடல்சார் பல்கலைக்கழகம் நடத்தும் காமன் என்ட்ரன்ஸ் டெஸ்டில் பெற்ற ஸ்கோர்ஸ் அடிப்படையில் மாணவ/மாணவிகள் சேர்க்கப்படுவார்கள்.

முகவரி : **Indian Maritime University. East Coast Road, Uthandi, Chennai-600 119.** போன் : **044-24530343/24530345.** வெப் முகவரி : **www.nipm.tn.nic.in.**

**சென்னையில் உள்ள தனியார் மெர்ச்சண்ட் நேவி நிறுவனங்கள் :**

1. **Sri Ram Nautical Science Institutions at Chennai - 44, Phone : 044-42267777. Web : www.sairamgroup.in.**
2. **Academy of Maritime Educational Training (AMET), Kanathur, Chennai-603 112.**
3. **Southern Academy of Maritime Studies (SAMS), Panakkam, Chennai - 601 102.**
4. **Vel's Acaedmy of Maritime Education, Near Navalur, Chennai - 600 013.**
5. **Maritime Foundation, Thozhuvur Kuppam, Thiruvoor (Po.) - 602 025.**
6. **Chidambaram Institute of Maritime Technology. Kalpakkam, Chennai - 603 102.**
7. **International Maritime Academy, Chennai - 600 028.**

**வேலை வாய்ப்பு, சம்பளம் :**

சுமார் 7500 கிலோ மீட்டர் கடற்கரை கொண்ட நமது நாட்டில் 12 பெரிய துறைமுகங்களும் 187 நடுத்தர மற்றும் சிறிய துறைமுகங்களும் உள்ளன. இருப்பினும் இந்தியாவின் மொத்த உலக வாணிப கொள்ளவில் **(Volume)** கடல் மூலமாகச் செய்யப்படும் வாணிபம் 9 சதவீதம் மட்டுமே. இதன் மதிப்பு 1 சதவீதம்தான் **(Valuewise)**. கடல் வாணிபத்தின் அளவு அதிகரிக்கும்போது மனிதவள தேவையும் அதிகரிக்கும். வரும் 10 ஆண்டுகளில் 27000 நாட்டிக்கல் சயின்ஸ் / மரைன் இன்ஜினியரிங் படித்தவர்கள் மற்றும் 40000 சீமென் எனப்படும் கப்பல் பணியாளர்களும் தேவைப்படுவார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. படித்து முடிக்கும் முன்பே, பல ஷிப்பிங் நிறுவனங்கள் தகுதி படைத்த திறமையான மாணவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கின்றன. பயிற்சி காலகட்டத்தில் தொடக்க சம்பளம்300 டாலரிலிருந்து 500 டாலர் வரை இருக்கும். (நமது மதிப்பில் சுமார் ரூ. 18,000 முதல் ரூ. 30,000வரை) கப்பல் கேப்டன்களாகப் பணிபுரிபவர்களக்கக் கப்பல்களைப் பொறுத்து மாதம் 5,000 டாலரிலிருந்து 10 ஆயிரம்டாலர் வரை (சுமார் 4 லட்சம் ரூபாய்) சம்பளம் கிடைக்கும். உணவு, சீருடைப்படி,விடுமுறையில் சொந்த ஊருக்குச் சென்று வர விமான டிக்கெட் போன்ற இதர சலுகைகளும் உண்டு.

***

## 37. உணவியல் மற்றும் உணவுப் பதனீட்டுத் தொழில் நுட்பம்

### 1. உணவியல் (ஃபுட் டெக்னாலஜி)

இளநிலை படிப்புகள் : நியூட்ரிஷன் அண்ட் டயட்டிக்ஸ்

நியூட்ரிஷன் அண்ட் ஃபுட் சர்வீஸ் மேனேஜ்மென்ட்

கிளினிக்கல் நீயூட்ரிஷன் அன்ட் டயட்டிக்ஸ்

கல்வித்தகுதி : +2 வகுப்பில் உயிரியல், வேதியியல், இயற்பயில் படித்திருக்க வேண்டும்.

கல்லூரிகள் :

அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் நியூட்ரிஷன், ஹைதராபாத்.

இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோம் எக்கனாமிக்ஸ், டெல்லி.

சென்ட்ரல் ஃபுட் டெக்னாலஜிகல் அண்ட் ரிசர்ச், மைசூர்.

நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஃபுட் டெக்னாலஜி, சோன்பத், ஹரியானா.

மகளிர் கல்லூரிகள்

### 2. உணவு பதனீட்டு தொழில்நுட்பம் (ஃபுட் பிராஸஸிங் டெக்னாலஜி)

கல்லூரிகள் / படிப்புகள்:

1. அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

பி.இ. (ஃபுட் பிராஸஸிங் அண்ட் பிரிசர்வேஷன் டெக்னாலஜி) 4 ஆண்டு படிப்பு

2. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – பி.டெக். (ஃபுட் ப்ராஸஸ் இன்ஜினியரிங்) – 4 ஆண்டு படிப்பு

3. ஏ.சி. தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை – பி.டெக். (ஃபுட் டெக்னாலஜி)

4. எஸ்.ஆர். எம். நிகர்நிலைப் பல்கலைக்கழகம்.

5. காருண்யா நிகர்நிலைப் பல்கலைக்கழகம்.

6. சென்ட்ரல் ஃபுட் டெக்னாலஜிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட், மைசூர்.

**வேலை வாய்ப்பு :**

நியூட்ரிஷன் படித்தவர்களுக்கு மருத்துவமனைகள், ஓட்டல்கள், ஃபிட்னஸ் சென்டர்கள், லேப்கள், அரசுத்துறை நிறுவனங்களில் டயட்டீஷன்களாக பணிபுரியலாம். புட்பிராஸஸிங் படித்தவர்கள், புட் பிராஸஸிங் தொழில் நிறுவனங்களில் உற்பத்தி மேலாளர்கள், தர உத்தரவாத மேலாளர்கள், லேப் சூப்ரவைஸர்லகள், புராடக்ட் டெவலப்மென்ட் மேஜேனர்கள், புட் டெக்னாலஜிஸ் போன்ற பணிகளில் அமரலாம். இத்தொழிலுக்குத் தேவையான இயந்திர சாதன உற்பத்தி நிறுவனங்களில் பணியாற்றலாம். மேற்கண்ட படிப்பு படித்தவர்கள் கன்சல்டன்ஸி மற்றும் சுயதொழில் செய்யும் வாய்ப்புகளும் உள்ளன.

***

## 38. சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானம்

இந்த பாடப்பிரிவு மற்ற பாடப் பிரிவுகளுடன் சார்ந்துள்ள ஒன்றாகும். மீட்டிரியாஜி, அட்மாஸ்பெரிக் கெமிஸ்ட்ரி, வேதியியல், இயற்பியல், ஹைடிராலஜி, ஜியாலஜி, ஜியோ

மார்பாலஜி, செடிமென்டாலஜி, ஹைடிரேஜியாலஜி, ஓசனோகிராபி, மேலாண்மைப்படிப்பு, பொருளாதாரம், சட்டம், புவியியல், மண் விஞ்ஞானம், டெரஸ்ட்ரியல் இகாலஜி, அக்வொட்டிக் இகாலஜி, பாபுலேஷன் டைனமிக்ஸ், அரசியல், சமூகவியல், உளவியல் போன்றவைகளின் கலவையே சுற்றுப்புறச் சூழல் படிப்பாகும். ஆகவே, பல்வேறு பாடப் பிரிவைச் சார்ந்த வல்லுனர்களும் இந்த விஞ்ஞானத்தை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர், பி.எஸ்.சி./எம்.எஸ்.சி. )சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானம்) பி.இ. (என்விரான்மெண்டல் என்ஜினியரிங்), சுற்றுப்புறச் சூழல் தாவரவியல்/உயிரியல்/ டாக்சிகாலஜி மேலும் எம்.பில்./எம்.டெக்., பி.எச்.டி., டிப்ளமோ படிப்புகள் வழங்கப்படுகின்றது. சுற்றுப்புறச் சூழல் மேலாண்மை மற்றும் உடல் நலம் சார்ந்த விஞ்ஞானம் போன்றவையும் பயிற்றுவிக்கப்படுகின்றது.

நிதி உதவியுடன் கூடிய ஆய்வு வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. யூ.ஜி.சி., இந்தியன் கவுன்சில் ஆப ்மெடிக்கல் ரிசர்ச், கவுன்சில் ஆப் சைன்டிபிக் அண்ட் இன்டஸ்ரியல் ரிசர்ச் (CSIR), டிபார்ட்மென்ட் ஆப் பயோடெக்னாஜி (DBI), அணுசக்தித்துறை (DAE), இந்தியன் கவுன்சில் ஆப் அக்ரிகல்சுரல் ரிசர்ச் (ICAR), டிபன்ஸ் ரிசர்ச் டெவலப்மென்ட் ஆர்க்னைசேசன் (DRDO), ஜவஹர்லால் நேரு மொமோரியல் பன்ட், கே.எஸ். கிருஷ்ணன் ரிசர்ச் அசோசியேட்ஷிப் போன்றவை ஆய்விற்கு நிதி உதவி அளிக்கின்றது. ஜெர்மனி, பெல்ஜியம், சீனா போன்ற நாடுகளும் ஆய்விற்கு நிதி உதவி அளிக்கின்றன.

பயோடைவர்சிட்டி கன்சர்வேஷன், வளம் குன்றிய நிலங்களை மேம்படுத்துதல், இயற்கை விவசாயம், மரபுசாரா எரிசக்தி பயன்பாடு, நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு, கழிவு மேலாண்மை போன்ற துறைகளில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**வேலைவாய்ப்பு :**

சுற்றுப்புறச் சூழல் ஆலோசகர், திட்டமிடுபவர், மேலாளர், பொறியாளர், எழுத்தாளர், போன்ற பணிகள். மேலும், சுற்றுப்புற வேதியியல் விஞ்ஞானி, ஹைடிராலஜிஸ்ட், இகாலஜிஸ்ட், எரிபொருள் பாதுகாவலர், ஆழியியல் விஞ்ஞானி போன்ற பணிகள். அரசின் மாசுக் கட்டுப்பாடு வாரியத்துறை பணிகள், தனியார் நிறுவனங்களில் மாசு கட்டுப்பாடு செயல்பாட்டுப் பணிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் கல்லூரிகளில் யூ.ஜி.சி. தேர்வின் மூலம் பணிநியமனம் என்று வாய்ப்புகள் உள்ளது. சுற்றுப்புறச் சூழலை பேணுவதில் ஆர்வமுடைய பலர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலமும் செயல்பட வாய்ப்புள்ளது.

**கல்வி நிறுவனங்கள் :**

1. மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்.சி. (சுற்றுப்புறச்சூழல் மேலாண்மை)

2. அண்ணா பல்கலைக்கழகம், ஐ.ஐ.டி. மற்றும் சென்னை பல்கலைக் கழகங்களின் முறையே எம்.டெக்., எம்.எஸ்.ஸி. படிப்புகள் அளிக்கப்படுகின்றது.

3. கோவையில் பாரதியார் பல்கலைக்கழகம் மூலம் எம்.எஸ்.சி.

4. தமிழநாடு விவசாயப் பல்கலைக்கழகம் மூலம் பி.டெக். (எரிசக்தி மற்றும் சுற்றுப்புறச் சூழல் படிப்பு) வழங்கப்படுகின்றது.

5. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூலம் முதுநிலை டிப்ளமோ மாசுக்கட்டுப்பாடு பிரிவிலும் மற்றும் எம்.எஸ்.ஸி. படிப்பு அளிக்கப்படுகின்றது.

6. பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் மூலம் எம்.எஸ்.சி. (எகாலஜி மற்றும் சுற்றுப்புறச் சூழல்) மற்றும் பி.எச்.டி. படிப்புகள் வழங்கப்படுகின்றது.

7. இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மூலம் சான்றிதழ் படிப்பு வழங்கப்படுகின்றது.

8. ஆந்திராவில் உஸ்மானியா பல்கலைக்கழகம், ஆந்திரா பல்கலைக்கழகங்களில் இப்படிப்பு உள்ளது.

9. கேரளா மற்றும் கர்நாடகாவிலும் இப்படிப்பு சில கல்வி நிறுவனங்களில் வழங்கப்படுகின்றது.

மேலும், இந்தியா முழுவதும் பல இடங்களில் இப்படிப்பு அளிக்கப்படுகின்றது.

***

### 39. உயிர் தகவலியல் (பயோ இன்பர்மேடிக்ஸ்)

பயோ, இன்ஃபர்மேட்டிக்ஸ் என்னும் உயிர் தகவலியல் துறையை 'கம்ப்யூடேஷனல் பயலாஜி' என்றும் கூறலாம். பல்வேறு உயிரினங்களில் மரபணுத் தொகுப்புகள் கண்டறியப்பட்டு ஒவ்வொரு மரபணுவின் செயல் திறனும், அதில் உற்பத்தியாகும் புரோட்டீன் தன்மைகளும் ஆராயப்பட்டு வருகின்றன. இந்த விவரங்களை கம்ப்யூட்டர் மூலம் ஆராய்வதற்கான புதிய உத்திகள் உருவாகி உள்ளன.

முதுநிலைப் பட்டப்படிப்பு நிலையில் மட்டும் இருந்த பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பை தற்போது இளநிலை பட்ட நிலையிலும் உள்ளது. ப்ளஸ் டூ வகுப்பில் அறிவியல் பாடப் பிரிவுகளை எடுத்துப் படித்த மாணவர்கள் படிக்கலாம். இவர்கள் பி.டெக். பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பில் சேர முடியும். தமிழகத்தில் உள்ள பல்வேறு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் இது தொடர்பான படிப்புகள் உள்ளன.

கொல்கத்தா பல்கலைக்கழகம், பெங்களூரில் உள்ள இன்ஸ்டிடியூட் ஆஃப் பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் அண்ட் அப்ளைடு பயலாஜி, அலகாபாத்தில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களிலும் பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

மாலிக்யூலர் பயாலஜி, மைக்ரோபயாலஜி, கெமிஸ்ட்ரி, பார்மஸி, மருத்துவம், கால்நடை மருத்துவம், கணிதம், பொறியியல் உள்ளிட்ட துறைகளில் இளநிலை அல்லது முதுநிலைப் பட்டம் பெற்றவர்கள் பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

பி.எஸ்.ஸி., பி.எஸ்.ஸி. (வேளாண்மை), பி.இ., பி.டெக்., எம்.பி.பி.எஸ்., பி.ஃபார்ம். பி.வி.எஸ்.ஸி., போன்ற படிப்புகளைப் படித்தவர்களும் எம்.எஸ்.ஸி., பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்புகளில் சேரலாம். உயிரியல், இயற்பியல், வேதியியல், கணிதம், பயோ டெக்னாலஜி, பயோ பிஸிக்ஸ், தாவரவியல், விலங்கியல், பயோ கெமிஸ்ட்ரி, மைக்ரோபயலாஜி, கம்ப்யூட்டர் சயின்ஸ், வேளாண்மை போன்ற துறைகளில் முதுநிலைப் பட்டப் படிப்புகளை படித்தவர்களும், பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிப்பில் டிப்ளமோ படித்தவர்களும், மருத்துவம், பல் மருத்துவம், பார்மஸி, கால்நடை மருத்துவப் பட்டதாரிகளும், அறிவியல் பட்ட முதுநிலைப் பட்டதாரிகளும் எம்.டெக். பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிக்கலாம்.

பி.டெக். பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படிக்க மற்ற பொறியியல் படிப்புகளைப் போலத்தான் செலவாகும். முதுநிலை மற்றும் ஆய்வுப் படிப்புகளைப் படிக்கும் திறமையான மாணவர்களுக்கு, கல்வி நிறுவனங்களைப் பொறுத்து ஃபெலோஷிப் கிடைப்பதற்கும் வாய்ப்புகள் உள்ளன.

பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ் படித்தவர்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன.

பயோ டெக்னாலஜி. பார்மசூட்டிகல்ஸ், பயோ மெடிக்கல் சயின்ஸ், மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் போன்ற பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பயோ மெடிக்கல் கம்ப்யூட்டேஷனல் சயின்டிஸ்ட், ஜெனிட்டிசிடிஸ்ட், கம்ப்யூட்டேஷனல் பயலாஜிஸ்ட், பயோ ஸ்டாட்டிஷியன், கிளினிக்கல் ஃபாப்மகாலஜிஸ்ட், இன்ஃபப்மேட்டிக்ஸ் டெவலப்பர்ஸ், கம்ப்யூடேஷனல் கெமிஸ்ட், புரோட்டீனாமிக்ஸ் (புரோட்டீன் குறித்த ஆய்வு) ஜினோமிக் அனாலிசிஸ், டேட்டா பேஸ் டிஸைன் அண்ட் மெயின்டெனன்ஸ் ஆகிய பணிகளில் சேரலாம்.

***

## 40. நேனோ டெக்னாலஜி

அறிவியல் தொழில்நுட்பத்தின் அடுத்த பரிமாணம்தான் நேனோ டெக்னாலஜி அறிவியல் வரலாற்றில் இது ஒரு திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் பொருள்களின் உள்அமைப்பை மிகத் துல்லியமாகப் பகுத்து, மாற்றி அமைக்கலாம். ஒரு காலத்தில். ஆராய்ச்சிக்கூடங்களில் மட்டுமே பேசப்பட்ட பயோ டெக்னாலஜி, தற்போது மருத்துவம், வேளாண்மை, அறிவியல் என்று பல்வேறு துறைகளில் கொடி கட்டிப் பறக்கிறது. அதுபோல நேனோ டெக்னாலஜியும் புதிதாக வளர்ந்து வரும் முக்கியத் துறை.

பெங்களூரில் உள்ள ஜவஹர்லால் நேரு சென்டர் ஃபார் அட்வான்ஸ்டு சயின்டிஃபிக் ரிசர்ச், இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ், கான்பூர், மும்பை, டெல்லியில் உள்ள ஐ.ஐ.டி.–க்கள் டெல்லியில் உள்ள நேஷனல் பிஸிகல் ரிசர்ச் லேபரட்டரி, சாலிட் ஸ்டேட் பிஸிக்ஸ் லேபரட்டரி, கான்பூரில் உள்ள டிஃபன்ஸ் அண்ட் டெவலப்பெமண்ட் ஆர்க்னைசேஷன் போன்றவை நேனோ டெக்னாலஜி தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ள முக்கிய மையங்களாலும் இங்கு நேனோ டெக்னாலஜி தொடர்பான ஆய்வுப் படிப்புகளில் சேருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. டெல்லியில் உள்ள அமித்தி பல்கலைக்கழகத்தில் நேனோ டெக்னாலஜியில் ஐந்து ஆண்டு ஒருங்கிணைந்த எம்.டெக். படிப்பு படிக்கலாம்.

கோவை. அண்ணா பல்லைக்கழகத்தில் பி.டெக். நேனோ டெக்னாலஜி படிப்பு உள்ளது. இப்படிப்பில் பிளஸ்டூ முடித்த மாணவர்கள் சேர முடியும். சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் எம்.டெக். நேனோ டெக்னாலஜி படிப்பு உள்ளது, தஞ்சை சாஸ்த்ரா, வேலூர் வி.ஐ.டி. எஸ்.ஆர்.எம். போன்ற நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் நேனோ டெக்னால தொடர்பான படிப்புகளைப் படிக்கலாம். இது தவிர, சிவகாசியில் உள்ள மெக்கோ ஷெல்ங்க் பொறியியல் கல்லூரி. நாமக்கல் கே.எஸ். ரங்கசாமி டெக்னாலஜி கல்லூரி உட்பட வேறு சில தமிழகக் கல்வி நிலையங்களும் நேனோ டெக்னாலஜி படிப்புகளில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. பி.எஸ்.ஸி. பி.டெக். இளநிலை பட்ட நிலையிலேயே நேனோ டெக்னாலஜி படிப்புகள் பல கல்வி நிலையங்களில் உள்ளன.

வேளாண்மை, சுற்றுச்சூழல், மருத்துவம், ஜெனிட்டிக்ஸ், பயோடெக்னாலஜி, ஸ்டெம்செல் டெவலப்மென்ட், பயோ இன்ஃபர்மேட்டிக்ஸ், பர்மாசூட்டிக்கல், ஸ்பேஸ் ரிசர்ச், தடய அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் நேனோ டெக்னாலஜி படித்தவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

நேனோ டெக்னாலஜி துறையில், வேலைவாய்ப்புகள் பெரும் பகுதி ஆராய்ச்சித் துறைகளிலேயே உருவாகி வருகிறது. பல தொழில் நிறுவனங்களும் நேனோ டெக்னாலஜி

ஆராய்ச்சியில் களம் இறங்கி உள்ளன. ஐ.ஐ.டி. போன்ற பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களில் ஆய்வுப் படிப்புகளை முடித்தவர்களுக்குப் பன்னாட்டு நிறுவனங்களில் அதிக சம்பளத்துடன் வேலைவாய்ப்புக் கிடைக்கிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் நேனோ டெக்னாலஜி ஆய்வுக்காக ஏராளமான பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளன. நேனோ டெக்னாலஜி திட்டங்களுக்கான முயற்சிகளுக்கு செலவிட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

***

## 41. பயோ டெக்னாலஜி மற்றும் பயோ மெடிக்கல் இன்ஜினியரிங்

### 1. பயோடெக்னாலஜி :

தற்போது கம்ப்யூட்டர் துறைக்கு நிகராக அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பது பயோ டெக்னாலஜி **(Biotechnology)** எனப்படும் உயிர் தொழில்நுட்பமாகும். தற்போது விவசாயத்துறையில் மரபணு மாற்றங்கள் மூலம் அதிக உற்பத்தி, நோயெதிர்ப்பு மற்றும் வறட்சி தாங்கும் பயிர்கள் என பலவிதமான திறனுடைய பயிர்கள் உருவாக்கப்படுகின்றன என்பது நாம் அறிந்ததே உயிரினங்களை பயன்படுத்தி பலவிதமான உயிர் காக்கும் மருந்துகள், தடுப்பூசிகள் உருவாக்கப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் க்ளோனிங் **(Cloning)** மூலம் உயிரினங்களையே பிரதியெடுப்பது போல் அதே உயிரினத்தை உருவாக்கியுள்ளது, இத்தொழில்நுட்பம். இத்துறையில் ஈடுபட உயிர்தொழில்நுட்ப பொறியாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் மற்றும் பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுனர்களும் தேவைப்படுகின்றனர்.

**கல்வித்தகுதி :**

இளநிலை பட்ட வகுப்பிலேயே பயோடெக் படிக்க முடியும். தமிழகத்தில் உள்ள பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளிலும் பயோடெக் இளங்கலை, முதுகலை படிப்புகள் உளள்ன. +2வில் இயற்பியல், வேதியியல், கணிதம் ஆகிய சப்ஜெட்டுகளை எடுத்துப் படித்தவர்கள்கூட பயோடெக் படிப்பில் சேரலாம். உயிரியல் படித்திருந்தால் கூடுதல் சாதகம்.

முன்னணி கல்வி நிறுவனங்கள் :

1. அண்ணா பல்கலைக் கழகம், சென்னை

(பி.டெக். எம்.டெக். – இண்டஸ்ட்ரியல் பயோ டெக்னாலஜி) **www.annauniv.edu**

2. சென்டர் ஃபார் பயோ டெக்னாலஜி, ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், டெல்லி,

(எம்.எஸ்.ஸி. பயோ டெக்னாலஜி) **www.jnu.ac.in**

3. யுனிவர்சிட்டி ஆஃப் அக்ரிகல்சுரல் சயின்ஸ், பெங்களூர்.

(எம்.எஸ்.ஸி. பயோ டெக்னாலஜி) **www.uasvog.kar.nic.in**

4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

(எம்.எஸ்.ஸி. பயோ டெக்னாலஜி) **www.tnau.ac.in**

5. இந்தியன் அக்ரிகல்சுரல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட், டெல்லி.

(எம்.எஸ்.ஸி, அக்ரிகல்சுரல் பயோ டெக்னாலஜி) **www.iari.res.in**

6. ஐ.ஐ.டி. ரூர்க்கி. (எம்.எஸ்.சி. பயோ டெக்னாலஜி) www.iitr.ernet.in

7. ஐ.ஐ.டி. டெல்லி (எம்.டெக். பயோ கெமிக்கல் இன்ஜினீயரிங் அண்டு பயோ டெக்னாலஜி) www.iitd.ac.in

8. ஐ.ஐ.டி. மும்பை. (எம்.எஸ்.ஸி. பயோ டெக்னாலஜி) www.iib.ac.in

9. ஐ.ஐ.டி. சென்னை. (எம்.எஸ். பயோ டெக்னாலஜி) www.iitm.ac.in

10. ஏ.ஐ.ஐ.எம்.எஸ். டெல்லி (எம்.பயோடெக்) www.aiims.edu

11. ஹைதராபாத் பல்கலைக் கழகம் (எம்.டெக். மெடிக்கல் பயோ டெக்னாலஜி) www.unhydernet.in

12. ஐ.ஐ.டி. கரக்பூர். (பி.டெக். பயோ டெக்னாலஜி அண்டு பயோ கெமிக்கல் இன்ஜினீயரிங், எம்.டெக். – ஆண்டுகள் ஒருங்கிணைந்த படிப்பு) www.iirkgp.in

13. என்.ஐ.டி. நிறுவனங்கள் (திருச்சி என்.ஐ.டி. உட்பட)

**2. பயோ மெடிக்கல் இன்ஜினியரிங்**

பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் துறை, பொறியியல் துறையில் தனித் துறையாக உருவாகி உள்ளது.

பயோ இன்ஸ்ட்ரூமென்ட்டேஷன், டிஷ்யூ இன்ஜினியரிங், பயோ மெக்கானிக்ஸ், கிளினிக்கல் இன்ஜினியரிங், ஆர்த்தோபீடிக் பயோ இன்ஜினியரிங், நேவிகேஷனல் சிஸ்டம்ஸ் என பயோ மெடிக்கல் இன்ஜினியரிங்கில் பல சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இதனோடு தொடர்புடைய மற்றொரு துறை மெடிக்கல் எலெக்ட்ரானிக்ஸ்.

செயற்கை இதயம், செயற்கை உறுப்புகள், லேசர் மூலம் அறுவைச் சிகிச்சை போன்றவையெல்லாம் பயோ மெடிக்கல் இன்ஜினியர்களின் ஆய்வு முயற்சிகளின் விளைவே! ஹியரிங் எய்ட்ஸ், கார்டியாக் பேஸ் மேக்கர். செயற்கைச் சிறுநீரகங்கள், செயற்கை உறுப்புகள் போன்றவற்றைத் தயாரிப்பதற்கும் அறுவைச் சிகிச்சை மற்றும் இன்டென்சிங் கேர் யூனிட்டுக்குத் தேவையான நவீன சாதனங்கள், பயோ கெமிஸ்ட்ரி சாதனங்கள், கண் அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான லேசர் சாதனங்கள், கம்ப்யூட்டர் மூலம் நோய்க் கூறுகளைக் கண்டறிதல், அல்ட்ரா சவுண்ட் எம்.ஆர்.ஐ. ஸ்கேனிங் போன்ற நவீன மருத்துவ சாதனங்களை உருவாக்குவதிலும். அவை சரிவர செயல்படுகிறதா என்பதை கண்காணிப்பதற்கும். அந்தச் சாதனங்களை அவ்வப்போது சர்வீஸ் செய்வதற்கும் பயோ மெடிக்கல் இன்ஜினியர்களின் பணி முக்கியமானது. அதாவது டாக்டர்கள், நர்ஸ்கள், டெக்னீஷியன்கள் போன்றவர்களுடன் இணைந்து இவர்கள் பணியாற்ற வேண்டியிருக்கும்.

**பயோ மெடிக்கல் இன்ஜினியர் ஆக, என்ன செய்ய வேண்டும்?**

ப்ளஸ் டூ வகுப்பில் கணிதம், இயற்பியல், வேதியியல் ஆகிய பாடப் பிரிவுகளை எடுத்துப் படித்தவர்கள் பி.இ. பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் படிப்பில் சேரலாம்.

எலெக்ட்ரிக்கல், மெக்கானிக்கல், கம்ப்யூட்டர், லெக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷன், கெமிக்கல் ஆகிய பாடப் பிரிவுகளில் பி.இ. படித்தவர்கள் முதுநிலை அளவில் பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் பாடப் பிரிவுகளை எடுத்துப் படிக்க முடியும். மெடிக்கல் இன்ஜினியரிங் படிப்புக்கு நிகராகக் கருதப்படும் மெடிக்கல் டெக்னாலஜி என்ற படிப்பையும் படிக்கலாம். எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் பயோ இன்ஜினியரிங், மெடிக்கல் இன்ஜினியரிங், மெடிக்கல் டெக்னாலஜி படிப்புகளைப் படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகத்தில், ஐந்து ஆண்டு எம்.டெக். ஒருங்கிணைந்த படிப்பில் பயோ மெடிக்கல் டெக்னாலஜி படிக்கலாம். சில கல்வி நிலையங்களில் பயோ மெடிக்கல் இன்ஸ்ட்ரூமென்ட்டேஷன், மெடிக்கல் எலெக்ட்ரானிக்ஸ் போன்ற படிப்புகள் உள்ளன. தமிழகத்தில் உள்ள பல பொறியியல் கல்லூரிகளில் பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் இளநிலை பட்டப் படிப்பு உள்ளது.

❋❋❋

## 42. நூலகம் மற்றும் இன்ஃபர்மேஷன் அறிவியல்

**கல்வி நிறுவனங்கள் :**

1. அழகப்பா பல்கலைக்கழகம்
2. சென்னை பல்கலைக்கழகம்
3. மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
4. பெரியார் பல்கலைக்கழகம்
5. ஸ்ரீசந்திரசேகர சரஸ்வதி விஸ்வ வித்யாலயா–காஞ்சிபுரம்
6. காந்தி கிராமம் ரூரல் இன்ஸ்டிடியூட்–காந்தி கிராமம், திண்டுக்கல் மாவட்டம்.
7. பிஷப் ஹூபர் கல்லூரி – திருச்சிராப்பள்ளி

**படிப்புகள் :**

| | |
|---|---|
| 1. பேச்சிலர் ஆஃப் லைப்ரரி & இன்ஃபர்மேஷன் சயின்ஸ் | – 3 ஆண்டு இளங்கலை படிப்பு |
| 2. மாஸ்டர் ஆஃப் லைப்ரரி & இன்ஃபர்மேஷன் சயின்ஸ் | – 2 ஆண்டு முதுகலை படிப்பு |
| 3. எம்.பில். | – 1 ஆண்டு படிப்பு. |
| 4. பி.எச்.டி. | – 3 ஆண்டு படிப்பு |

❋❋❋

## 43. பூகோள அறிவியல்

கடல் வளர்ச்சித்துறை என்ற பெயரில் ஒரு துறை 1981–ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கடல்களைப் பற்றியும் அதில் மறைந்து கிடக்கும் வளங்களைப் பற்றியும் ஆராய்வது இந்தத் துறையின் நோக்கம். இப்படி ஆராய்வதன் மூலம் கிடைக்கும் உண்மைகளை வைத்துக் கொண்டு மேலும் தொழில் நுட்பத்தை எப்படிப் பெருக்குவது என்று பார்ப்பதும் மற்றொரு நோக்கம்.

இத்துறையில் கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ள முக்கியமான நிறுவனம் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் ஓஷன் டெக்னாலஜி, பள்ளிக்கரணை, சென்னை–600 100. போன் : 044–66783559, போன் : 044–66783328.

**இயல் ஆழியியல் :**

கடல்களின் புற இயல்புகளைப் பற்றிப் படிப்பதற்கான படிப்பு இது. கடல்களின் இயல்புகளைப் பற்றிப் படிப்பதில் எத்தனையோ நவீன உத்திகள் வந்துவிட்டன. அவற்றுள் ஒன்றுதான் தொலையுணர் ஆய்வு செயற்கைக் கோள்கள். கணினிகள் உதவியுடன் கடல்களின் தன்மைகளை ஆராயலாம். இந்தத் துறைக்குத் தேவைகள் வளர்ந்து கொண்டு வருகின்றன.

**வேதி ஆழியியல் :**

கடல்களின் வேதிப் பண்புகளை ஆராய்வது இப்படிப்பின் நோக்கம். தண்ணீரில் என்னென்ன பொருட்கள் கலந்திருக்கின்றன என்று ஆராயலாம். வெவ்வேறு கடல் தண்ணீரின் இயல்புகளை ஆராயலாம்.

கடல் தண்ணீரில் பல விலை உயர்ந்த வேதிப்பொருட்கள் கரைந்திருக்கின்றன. ஒவ்வொரு கடலின் தண்ணீரிலும் ஒவ்வொரு மாதிரியான கலப்பு இருக்கும். எந்தக் கடலின் நீரிலிருந்து எந்தப் பொருளைப் பிரித்தெடுப்பது லாபகரமாக அமையும் என்று கண்டறியலாம்.

இப்போதுள்ள சூழ்நிலையில் உலகமே அஞ்சி நடுங்கும் ஒரு பிரச்சனை என்னவென்றால் சுற்றுச்சூழல் மாசுதான். கடல் தண்ணீரை எப்படியெல்லாமோ மாசுபடுத்துகிறோம். ஆறுகள் பலவிதமான கழிவுகளையும் அடித்துக் கொண்டு போய்க் கடலில் கலந்து விடுகின்றன. இதற்கு என்ன தீர்வு என்று கண்டுபிடிக்கலாம். கடற்கரை ஓரங்களில் இயங்கி வரும் ஆலைகள் ஏற்படுத்தும் மாசு பற்றி ஆராயலாம். மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் மாசுக்களுக்கும் தீர்வு கண்டுபிடிக்கலாம். கழிவு நீர் வந்து கடலில் கலப்பது, ஆலைக் கழிவுகள், மனிதர்கள் ஏற்படுத்தும் மாசு பற்றி அறியலாம். இந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதென்பது உண்மையிலேயே மனித குலத்திற்குப் பெரும் தொண்டு செய்வதாகும்.

**உயிரி ஆழியியல் :**

கடலின் சூழலில் என்னென்ன உயிரினங்கள் தோன்றி வளர்கின்றன என்பதை ஆராயும் துறை இது. இத்தகைய உயிரினங்களால் பொருளாதார வளத்தை எப்படி மேம்படுத்திக் கொள்ளலாம் என்று பார்க்கலாம். பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவுப் பொருட்களை போதுமான அளவு கடலிலிருந்து பெற முடியும்.

**நிலவியல் ஆழியியல் :**

கடலின் மேல்மட்டம். மேல்மட்டத்திற்குச் சற்றுக் கீழ் உள்ளவைகளைப் பற்றி ஆராய்வது இப்படிப் பின்நோக்கம், நிலவியல், நிலப்புவியியல், தன்மைகளைப் புதிதாக உருவாக்க வேண்டுமானால், மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்னென்ன என்பதை நிர்ணயிக்கலாம். கடல்களின் தரைமட்டத்தில் பல்வேறு வகையான உலோகங்கள், தாதுக்கள் இருக்கின்றன. இவற்றை வெட்டி எடுத்துப் பயன்படுத்த முடியுமா என்றும் ஆய்வு செய்யலாம்.

ஆழியியல் என்பது ஒரு தனிப் படிப்பு என்று சொல்ல முடியாது. அது பல அறிவியல் துறைகள் ஒன்றிணைந்த கூட்டு. தனி மனித முயற்சியாக இல்லாமல் பல விற்பன்னர்கள் ஒன்று கூடிச் செய்ய வேண்டிய ஆராய்ச்சிகளை உள்ளடக்கியது.

**வேலைவாய்ப்பு :**

இந்தத் துறையில் எப்போதும் ஆட்களுக்குப் பற்றாக்குறைதான். ஆகையால் படித்து முடித்ததும் வேலை நிச்சயம். அரசுத் துறையிலும் சேரலாம். தனியார் நிறுவனங்களும் காத்திருக்கின்றன. கடல்சார்ந்த உற்பத்திப் பொருட்களில் கவனம் செலுத்தும் நிறுவனங்களில் வேலை பெற முயற்சி செய்யலாம். ஆராய்ச்சிக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. கடல் சார்ந்த மூலப் பொருட்களைக் கொண்டு புதிதாக என்ன செய்யலாம் என்று கண்டுபிடிப்பதற்குத் தேவை அதிகமாக இருக்கிறது.

அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் நல்ல வேலை கிடைக்கும். இங்கெல்லாம் ஆராய்ச்கிக்கான சாதனங்களைப் பற்றிக் கவலையே பட வேண்டியதில்லை. எண்ணெய் வளம், நிலவியல் ஆய்வு, காலை நிலைக் கணிப்பு ஆகிய துறைகளில் வேலை கிடைக்கும்.

**தகுதி மற்றும் படிப்புகள் :**

| Under Graduate Courses | Eligibility |
|---|---|
| 1. B.Sc. (Geology) | +2 (Maths, Physics & Chemistry) |

| | |
|---|---|
| **2. B.Sc. (Marine Tech)** | **+2 (Maths, Physics & Chemistry)** |
| **Post Graduate Courses** | **Eligibility** |
| **1. M.Sc. (Marine Geology)** | **B.Sc. (Botany or Zoology or Geology)** |
| **2. M.sc. (Marine Biology)** | **B.Sc. (Marine Tech.)** |
| **3. M.Sc. (Marine Science)** | **B.Sc. (Marine Tech.)** |
| **4. M.Sc. (Occeanography)** | **B.Sc. (Related Field)** |
| **5. M.Tech. (Ocean Engg.)** | **B.Sc. (Related Field)** |

***

## 44. உலோகவியல்

பல்வேறு துறைகளிலும் உலோகங்களின் பயன்பாடு இருக்கிறது. ஆதியில் உலோகங்களின் பயன்பாட்டை அறிந்த பிறகுதான் மனித குலத்துக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டது. தற்போது உலோகங்களின் பயன்பாடு நமது தேவைகளை நிறைவேற்ற அத்தியாவசியமாகவே இருக்கிறது. அணியும் ஆபரணங்கள் முதல் பயன்பாட்டில் உள்ள அனைத்துப் பொருட்களிலும் உலோகங்களின் சேர்க்கை கணிசமாக இருக்கிறது.

நமது நாட்டில் உலோகவியல் பயன்பாடு பற்றிய தொழில்நுட்பக் கல்வி அளிக்கும் கல்வி நிறுவனம் பீகார் மாநிலம் ராஞ்சியில் உள்ளது. மத்திய அரசு, யுனெஸ்கோ கூட்டு முயற்சியுடன் நிறுவிய இந்தக் கல்வி மையம் தேசிய உலோகவியல் பட்டறை மற்றும் சேர்க்கை தொழில்நுட்ப மையம் **(National Institute of Foundry & Forge Technology)** என்று அழைக்கப்படுகிறது. இத்துறை கல்வி வழங்கும் ஒரே அரசு கல்வி நிறுவனம் இதுதான்.

இங்கு உலோக வடிவமைப்பு. உலோகப் பட்டறை மற்றும் அதைச் சார்ந்த பொறியியல் தொழில்நுட்பக் கல்வி நல்ல முறையில் கற்பிக்கப்படுகிறது. பயிற்சி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான அனைத்து வசதிகளையும் பெற்றிருப்பது சிறப்புக்குரியது.

**கற்பிக்கப்படும் படிப்புகள் :**

பி.டெக். (உற்பத்திப் பொறியியல்)

பி.டெக். (மூலப்பொருள்கள் மற்றும் உலோகவியல் பொறியியல்)

மேற்கூறிய பட்டப்படிப்புகளுக்கு பிளஸ்–2 தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். பொறியியலில் நுழைவுத்தேர்வு **(JEE)** மதிப்பெண்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

உலோக வடிவமைப்பு பட்டறை தொழில்நுட்பம்

வெப்பம் மூலம் உலோக உருவாக்கல் வடிவமைப்பு

இவை இரண்டும் பட்டயப் படிப்புகள். இதற்கு டிப்ளமோ (எந்திரவியல் மற்றும் உலோகவியல்) படிப்பு மற்றும் பி.எஸ்.சி. (பௌதீகம், ரசாயனம் மற்றும் கணிதம்) கல்வித் தகுதி தேவை.

**முதுகலைப் பட்டப்படிப்புகள் :**

எம்.டெக். (உற்பத்திப் பொறியியல்) இந்தப் பட்டப்படிப்பில் சேர பி.டெக். (எந்திரவியல்/ உலோகவியல்/ மின்னியல்/உற்பத்தியியல்/விமானப் பொறியியல்/ரசாயனம்/தொழிற்சாலை பொறியியல்) கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும்.

எம்.டெக். (உலோகப் பட்டறை பொறியியல்) இந்த முதுகலைப் படிப்பில் சேர பி.டெக். (எந்திரவியல்/உலோகவியல்/உற்பத்தியியல்) படித்திருக்க வேண்டும்.

மேற்கூறிய முதுகலைப் பட்டப்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை ‘கேட்’ தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் நடைபெறும்.

இங்கு கற்கும் மாணவர்களுக்கு காத்திருக்கும் வேலைவாய்ப்புகள் பல. உள்நாடு மற்றும்வெளிநாடு பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிப் படிப்பு மற்றும் மேல்படிப்புத் தொடர வாய்ப்புகளும் உள்ளன.

இந்தக் கல்விக் கழகம் பற்றி மேலும் விவரங்கள் www.nifft.com, www.nifft.enent.in, www.geocities.com/infftranchi என்ற இணையதள முகவரிகளில் கிடைக்கும்.

***

## 45. விண்ணியல்

(இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்பேஸ் சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி – திருவனந்தபுரம்)

விண்ணியல் சார்ந்த படிப்புகள் குறிப்பிட்ட சில கல்லூரிகளில் வழங்கப்படுகின்றன.

பி.எஸ்.ஸி. (அஸ்ட்ரானமி)
எம்.எஸ்.ஸி. (அஸ்ட்ரானமி)
பி.எஸ்.ஸி. (அஸ்ட்ரோ பிஸிக்ஸ்)
எம்.எஸ்.ஸி. (அஸ்ட்ரோ பிஸிக்ஸ்)

வான் ஆராய்ச்சி நிறுவனங்கள், கோளரங்கங்கள் மற்றும் அறிவியல் நிலையங்களில் வேலை வாய்ப்பு உள்ளது. வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெறலாம்.

திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஸ்பேஸ் சயின்ஸ் அன்ட் டெக்னாலஜி பின்வரும் படிப்புகளை வழங்குகின்றது.

| | |
|---|---|
| 1. பி.டெக். (அவியானிக்ஸ்) | 4 வருடம் |
| 2. பி.டெக். (ஏரோஸ்பேஸ் இன்ஜினியரிங்) | 4 வருடம் |
| 3. பி.டெக். (பிஸிகல் சயின்ஸ்) | 4 வருடம் |
| 4. பி.டெக். + எம்.எஸ். /எம்.டெக். | 5 வருடம் |
| 5. முதுகலை படிப்புகள் | |
| 6. முனைவர் படிப்பு | |

**சிறப்பம்சங்கள் :**

இந்த நிறுவனத்தில் படித்து நல்ல மார்க்குகளுடன் தேறுபவர்களுக்கு இஸ்ரோவில் (இந்தியன் ஸ்பேஸ் ரிசர்ச் ஆர்கனிசேஷன்) வேலை உறுதி.

படிப்பு, ஹாஸ்டல், புக் கிராண்ட் என்று கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**தகுதி :**

+2 தேர்வில் (இயற்பியல், வேதியியல், கணிதம் பாடங்களுடன்) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். IIST எனப்படும் நேஷனல் என்ட்ரன்ஸ் டெஸ்ட் ஸ்கோர் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். சேர்க்கை பற்றிய அறிவிப்பு செய்தித்தாள்களில் வெளியிடப்படும். அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் ஆன்லைன் மூலம் பெயர் மற்றும் விபரங்களை பதிவு செய்ய வேண்டும்.

மெரிட் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு லிஸ்டில் இடம் பெற்றவர்களுக்கு கவுன்ஸிலிங் நடைபெற்று இறுதி மெரிட் லிஸ்ட் தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும். இட ஒதுக்கீடு முறை உள்ளது.

மேலும் விவரங்களுக்கு : இந்தியன் இன்ஸ்ட்டியூட் ஆப் ஸ்பேஸ் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி, திருவனந்தபுரம்–695 547. போன் : 0471–2568452, 2568600 இணையதளம் : www.iist.ac.in.

***

## III. ஜெனரல் ஸ்டடீஸ்

### 46. சட்டப் படிப்பு

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட பின்வரும் சட்டக் கல்லூரிகளில் சட்டம் பயிற்றுவிக்கப்படுகிறது.

**சட்டக் கல்லூரிகள் :**

1. டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை–600 104
2. அரசு சட்டக் கல்லூரி, மதுரை–625 020.
3. அரசு சட்டக் கல்லூரி, திருச்சி–23.
4. அரசு சட்டக் கல்லூரி, கோவை–46.
5. அரசு சட்டக் கல்லூரி, நெல்லை–11.
6. மத்திய சட்டக் கல்லூரி, சேலம் (தனியார் கல்லூரி)
7. சீர்மிகு சட்டப் பள்ளி, சென்னை–600 028.
8. அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு.
9. அரசு சட்டக் கல்லூரி, வேலூர்–632 006.

**சட்டப் படிப்புகள் :**

தமிழ்நாட்டில் 3 வழியான இளநிலை சட்டப் படிப்புகள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. 5 ஆண்டு (பி.ஏ. பி.எல்.) / பி.ஏ. (எல்.எல்.பி.)
2. 3 ஆண்டு (பி.எல்.) / எல்.எல்.பி.
3. 5 ஆண்டு (பி.ஏ. பி.எல். ஹானர்ஸ்) படிப்பில் பி.காம்., பி.பி.ஏ., பி.சி.ஏ. படித்தவர்களும் சேரலாம்.

1. சீர்மிகு சட்டப் பள்ளி, சென்னை–600 028. இங்கு பின்வரும் சட்டப்படிப்புகள் உள்ளன.

**5 ஆண்டு படிப்புகள் :**

1. பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)
2. பி.காம்., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)
3. பி.பி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)
4. பி.சி.ஏ., எல்.எல்.பி. (ஹானர்ஸ்)

மற்றும் 3 ஆண்டு படிப்பு : எல்.எல்.பி. (ஹானர்ஸ்)

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படும் சட்ட பட்ட மேற்படிப்புகள்**

பிரிவு 1 – வணிகச் சட்டம்
பிரிவு 2 – அரசமைப்பு மற்றும் மனித உரிமைகள் சட்டம்
பிரிவு 3 – அறிவுசார் சொத்துரிமைச் சட்டம்
பிரிவு 4 – நாட்டிடைச் சட்டம் மற்றும் அமைப்புகள்
பிரிவு 5 – சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் சட்ட வழிமுறைகள்
பிரிவு 6 – குற்றவியல் சட்டம்
பிரிவு 7 – மனித உரிமைகள் மற்றும் டியூட்டீஸ் எஜுகேஷன்
பிரிவு 8 – தொழிலாளர் மற்றும் நிர்வாகச் சட்டம்
பிரிவு 9 – வரிவிதிப்புச் சட்டம்

சட்டப் பல்கலைக்கழகப் பின்வரும் முதுநிலை படிப்பை தொலைதூரக் கல்வி மூலம் வழிவகுக்கிறது.

– மாஸ்டர் ஆஃப் கார்ப்போரேட் சட்டங்கள் (எம்.சி.எல்.) 2 ஆண்டு படிப்பு

**பல்கலைக்கழகத்தில் முதுநிலை சட்ட பட்டயப் படிப்புகள் :**

சட்டப் பல்கலைக்கழகம் பின்வரும் 14 முதுநிலை ஓராண்டு சட்ட பட்டய வகுப்புகளை நடத்தி வருகிறது.

1. வணிகச் சட்டம்
2. தகவல் தொழில்நுட்பவியல் சட்டம்
3. அறிவுசார் சொத்துரிமைச் சட்டம்
4. சுற்றுச்சூழல் சட்டம்
5. தொழிலாளர் சட்டம்
6. மனித உரிமைகள் மற்றும் டியூட்டிஸ் எஜுகேஷன்
7. கார்ப்பொரேட் சட்டம் (முதல் வருடம்)
8. டாக்குமென்டேசன்
9. நூலகர் சட்டம்
10. நுகர்வு மற்றும் பாதுகாப்புச் சட்டம்
11. சைபர் க்ரைம் மற்றும் இணைய பாதுகாப்புச் சட்டம்
12. கிரிமினல் மற்றும் பாரன்சிக் சயின்ஸ் சட்டம்
13. மருத்துவ சட்டம்
14. கடல் சார் சட்டம்

**பல்கலைக்கழகத்தில் சட்டவியல் முனைவர் படிப்பு :**

பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட சட்டக் கல்லூரியில் பணிபுரிந்து வரும் சட்டம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பகுதி நேர ஆராய்ச்சிப் படிப்பினை (பி.எச்.டி.) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளது. ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல் சட்ட ஆராய்ச்சியில் நாட்டமுள்ளவர்கள் பயன்பெறும் பொருட்டு 2006–ம் ஆண்டிலிருந்து பகுதி நேர ஆராய்ச்சியாக வழக்குரைஞர்கள் மற்றும் நீதிபதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**5 ஆண்டு சட்டப் படிப்பில் சேர்க்கைக்கான தகுதிகள் :**

மேல்நிலைப்பள்ளி (+2) அல்லது அதற்கிணையான படிப்பில் தேர்ச்சி பெற்ற 45 விழுக்காட்டிற்குக் குறையாது மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்டோர்

மற்றும் பழங்குடியினர் விண்ணப்பதாரர்கள் தகுதித் தேர்வில் மொத்த மதிப்பெண்களில் 40 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**3 ஆண்டு (பி.எல்.) சட்டப் படிப்பில் சேர்க்கைக்கான தகுதிகள் :**

இளநிலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்று மொத்த மதிப்பெண்களில் 45 விழுக்காட்டிற்குக் குறையாது மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். எஸ்ஸி/எஸ்டி 40 விழுக்காட்டிற்குக் குறையாமல் முதுநிலைப் பட்டத்தில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. இளநிலை பட்டப்படிப்பு மேற்கொள்ளாமல் திறந்தநிலை பல்கலைக்கழக அமைப்பு முறையில் நேரடி முதுகலை பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். பணியில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

**இட ஒதுக்கீடு :**

விண்ணப்பத்தாரர்கள் தமிழக அரசின் இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். அரசால் முடிவு செய்யப்பட்ட இன அடிப்படை மற்றும் சிறப்பு இட ஒதுக்கீடு விதிகள் பின்பற்றப்படும். முன்னாள் ராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் பிள்ளைகளுக்கும், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், உடல் ஊனமுற்றோர், காதுகேளாதோர், கண்பார்வையற்றோர்களுக்கும் சிறப்பு இட ஒதுக்கீடு உண்டு.

பி.ஏ. எல்.எல்.பி. (ஹானர்ஸ்) / பி.காம். எல்.எல்.பி. (ஹானர்ஸ்) / பி.பி.ஏ. எல்.எல்.பி. (ஹானர்ஸ்) / பி.சி.ஏ. எல்.எல்.பி. (ஹானர்ஸ்) சேர்க்கைத் தகுதி : பிளஸ் 2 தேர்வில் 70 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே இந்தப் படிப்பிற்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தினைச் சேர்ந்தவர்கள் பிளஸ் 2 தேர்வில் 60 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தால் போதுமானது.

எல்எல்பி (ஹானர்ஸ்) சேர்க்கைத் தகுதி : பட்டப்படிப்பில்–பொது 70 விழுக்காடு/ எஸ்ஸி எஸ்டி 60 விழுக்காடு குறையாமல்.

சட்டக் கல்லூரி / சட்டப் பள்ளியில் இட ஒதுக்கீடு மேற்குறிப்பிட்ட சட்டக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு பலதரப்பட்ட வகுப்பினருக்கு பல்வேறு தேதிகளில், தெரிவுக்குத் தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னையில் கலந்தாய்வு அமர்வுகள் நடத்தும். அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மூலச் சான்றிதழ்களை கலந்தாய்வு அமர்வில் சமர்ப்பிக்க வேண்டும். அரசு சட்டக் கல்லூரிகளில் அரசு நிர்ணயித்த கல்விக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இன்றைய காலகட்டத்தில் அதிக பொருட் செலவின்றி மிகக் குறைந்த கட்டணத்தில் கிடைக்கக்கூடிய கல்வி சட்டக் கல்வியேயாகும்.

முகவரி: தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழகம், ராஜா அண்ணாமலை புரம், சென்னை – 600 028. போன் : 044 – 2464 1212.

**தேசிய சட்டப் பள்ளிகள்**

சட்டக் கல்வி படிக்க மேலும் ஒரு வாய்ப்பாக பெங்களூரில் 1987–இல் நிறுவப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் 14 இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன. தமிழ்நாடு நேஷனல் சட்டப்பள்ளி 2012 ஆரம்பிக்கப்பட்டது.

முகவரி : **TamilNadu National Law School, Navalkuttapattu, Trichy Dt. Webaddress : http://www.tnnis.in**

இந்தியாவில் சட்டப்படிப்பில் முதல் இடம் பிடிக்கும் நிறுவனங்கள் இவை. இங்கு சட்டம் படிப்பவர்கள் **Campus Interview** மூலம் பெரிய சட்ட நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறலாம். **CLAT (Common Law Admission Test)** எனப்படும் நுழைவுத் தேர்வு மூலம் அட்மிஷன் நடைபெறும்.

***

## 47. திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கல்வி

### 1. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரி

சென்னை தரமணியில் உள்ள அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சிக் கல்லூரியில் ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, பிலிம் புராசசிங், பிலிம் எடிட்டிங் போன்ற படிப்புகளில் +2 வகுப்பில் அறிவியல் பாடப் பிரிவுகளை எடுத்துப் படித்தவர்கள் சேரலாம். நடிப்புக் கலைப் படிப்புகளுக்குக் குறைந்தபட்ச கல்வித்தகுதி 10வது தேர்ச்சி. ஏப்ரல் / மே மாதங்களில் சேர்க்கை அறிவிப்பு வெளியிடப்படும். சேர்க்கைக்கான கட்ஆப் மார்க்ஸ்:

ஓபன் கேட்டகரி : 50%, பி.சி, 45%, எம்.பி.சி. 40%, எஸ்ஸி/எஸ்டி தகுதி தேர்வில் தேர்ச்சி. நுழைவுத் தேர்வும் உண்டு. அதில் எடுக்கும் மார்க்கும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

படிப்புகள் :

| Name of the Course | Duration | Qualification |
|---|---|---|
| **Diploma Courses** | | |
| **Diploma in Direction and Screenplay writing and T.V. Production** | **3 Years** | **Degree** |
| **Diploma in Film Technology & T.V. Production (Cinematography)** | **3 Years** | **Plus Two** |
| **Diploma in Film Technology & TV Production (Sound Recording & Sound Engineering)** | **3 Years** | **Plus Two** |
| **Diploma in Film Technology & TV Production (Film Processing)** | **3 Years** | **Plus Two** |
| **Diploma in Film Editing & TV Production** | **3 Years** | **Plus Two** |
| **Diploma in Film Technology (Animation Visual Effects)** | **3 Years** | **Degree** |

இந்தக் கல்லூரியில் சேர்ந்து படித்தவர்கள் பலர் திரையுலக நட்சத்திரங்களாக, தொழில்நுட்ப வல்லுனர்களாக மின்னுகிறார்கள். கைநிறைய சம்பாதிக்கிறார்கள்.

தொடர்பு முகவரி : எம்.ஜி.ஆர். பிலிம் அண்ட் டெலிவிஷன் இன்ஸ்டிடியூட், சிஐடி கேம்பஸ், தரமணி, சென்னை – 13. போன் : 044–22542212.

### 2. சென்னையில் உள்ள தனியார் நிறுவனங்கள்

| | |
|---|---|
| எல்.வி. பிரசாத் பிலிம் & டி.வி. அகாடமி | – வடபழனி |
| ஆர்கேவி ஸ்டூடியோ | – வடபழனி |
| சென்னை பிலிம் ஸ்கூல் | – கோட்டிவாக்கம் |
| மிராஜ் திரைப்பட நிறுவனம் | – தி.நகர் |

| | |
|---|---|
| இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பிலிம் மேக்கிங் | – தி.நகர் |
| ப்ளு ஓஷன் பிலிம் & டெலிவிஷன் அகாடமி (BOFTA) | – கோடம்பாக்கம் |
| மைன்ட் ஸ்கிரீன் பிலிம் இன்ஸ்டிடியூட் | – மைலாப்பூர் |
| தென்னிந்திய திரைப்பட நிறுவனம் | – கோடம்பாக்கம் |

***

## 48. ஓட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் கலை

சென்னை தரமணியில் மத்திய அரசுக்குச் சொந்தமான இன்ஸ்டிடியூட் ஆப் ஹோட்டல் மானேஜ்மெண்ட் கேட்டரிங் டெக்னாலஜி அண்டு அப்ளைடு நியூட்ரிஷன் கல்லூரி உள்ளது.

மத்திய அரசின் சுற்றுலாத்துறை சார்பில் இன்ஸ்டிடியூட்ஆஃப் ஓட்டல் மேனேஜ்மென்ட், கேட்டரிங் டெக்னாலஜி அண்ட் அப்ளைட் நியூட்ரிஷன் கல்வி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மொத்தம் 20க்கும் மேற்பட்ட இடங்களில் (சென்னையில் தரமணி உட்பட) செயல்பட்டு வரும் இவற்றில் ‘பி.எஸ்.ஸி. (ஹாஸ்பிடாலிடி அண்ட் ஓட்ல் அட்மினிஸ்ட்ரேஷன்) என்ற மூன்று ஆண்டுப் படிப்புப் படிக்கலாம். இதற்கான பட்டங்களை இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் வழங்கும். இப்படிப்பில் சேர நேஷனல் கௌன்சில் ஃபார் ஹோட்டல் மேனேஜ்மென்ட் அண்ட் கேட்டரிங் டெக்னாலஜி நடத்தும் ஜாயின்ட் என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன்ஸ் எழுதி தேர்ச்சி பெற வேண்டும். இதற்கான அறிவிப்பு பத்திரிக்கைகளில் வெளியிடப்படும்.

புட்கிராப்ட் இன்ஸ்டிடியூட் திருச்சி (துவாக்குடி) ஹோட்டல் மேனேஜ்மெண்ட் மற்றும் கேட்டரிங் தொடர்பான பல்வேறு பயிற்சிகளை அளிக்கிறது.

இது தவிர தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தின் அங்கிகாரத்துடன் நடத்தப்படும் டிப்ளமோ படிப்புகளும், பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் ஓட்டல் மேனேஜ்மெண்ட் படிப்புகளும் உள்ளன. இந்தப் படிப்புகளை முடித்தவர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள பிரசித்தி பெற்ற கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பு படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

**வேலைவாய்ப்பு :**

சுற்றுலாத்துறையின் அமோக வளர்ச்சி காரணமாகப் பெரு நகரங்களில் பெருகி வரும் சுற்றுலா இல்லங்கள், விருந்தினர் மாளிகைகள், நட்சத்திர ஓட்டல்கள், பீச் ரிசார்ட்டுகள் போன்றவைகளில் அபரிமிதமான வேலைவாய்ப்பு உள்ளது. கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து கேட்டரிங் சர்வீஸ்களிலும் வேலை வாய்ப்புகள் உள்ளன. தன்னம்பிக்கையுடன் சுயதொழில் தொடங்கி சம்பாதிப்பவர்களும் இருக்கிறார்கள்.

சம்பளம் : வேலைக்கு எடுக்கிற நிறுவனங்களைப் பொறுத்து ஆரம்ப காலத்தில் மாதச் சம்பளம் ரூ. 10,000/– முதல் ரூ. 15,000/– வரை கிடைக்கும். நட்சத்திர ஓட்டல்களில் செஃப் ஆக பணிபுரிபவர்களுக்கு ரூ. 50,000/–க்கு மேலும் சம்பளம் கிடைக்கும்.

சென்னை தரமணியில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான இன்ஸ்டிடியூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மென்ட் அண்ட் கேட்டரிங் டெக்னாலஜியில் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் வருமாறு :

| Name of the Course | Duration & Intake | Eligibility with English as one of the subject | Maximum age limit as on 1st July of the year of admission |
|---|---|---|---|
| 1. Master of Science in Hospitality Administration (M.Sc.)<br>2. Bachelor of Science (B.Sc.) in Hospitality & Hotel Administration. (Full time) (Institute has separate Hostels for Boys and Girls in the Campus itself & limited seats are available) | 2 years<br>3 years<br>150 | Bachelor Degreein HM&CT<br>A Pass in Plus 2 / HSC. Equivalent | 25 years<br>22 years |
| 3. Craftmanship Course in Food Production | 1 year & 6 months | 10th Pass or equivalent | 22 years |
| 4. Craftmanship Course in Food & Beverage Service | 1 year & 6 months 90 | 10 th pass or equivalent | 22 years |
| 5. Certificate Course in Hotel & Catering Management | 6 months 30 | (a) A Pass in SSLC (10th) or equivalent qualification with two years experience in a Hotel / Catering Establishment. (or) (b) Graduate (or) (c) A pass in SSLC (10th) or equivalent qualification with a pass in a Craft Certificate Course from a recognised Institute of Hotel Management / Food Craft Institute | Open No. age bar |
| 6. Diploma in Food Production | 1 Year & 6 months 40 | A Pass in Plus 2 / HSc. or equivalent | 22 years |
| 7. Diploma in Bakery & Confectionery | 1 year & 6 months 40 | A pass in Plus 2 / HSc or equivalent | 22 years |
| 8. Diploma in Front Office Operation | 1 year & 6 months 30 | A pass in Plus 2/ HSc or equivalent | 22 years |

| Name of the Course | Duration & Intake | Eligibility with English as one of the subject | Maximum age limit as on 1st July of the year of admission |
|---|---|---|---|
| 9. Post Graduate Diploma in Accommodation Operation & Management | 1 year & 6 months 30 | Graduate in any stream | 28 years |
| 10. Post Graduate Diploma in Dietetics & Hospitality Food Service | 1 year & 6 months 20 | Graduate in Home Science / Nutrition | 25 years |

முகவரி : முதல்வர், இன்ஸ்டிடியூட் ஆப் ஹோட்டல் மேனேஜ்மென்ட், கேம்பஸ், தரமணி, சென்னை – 113. போன் : 22542029/22541261. 22541615.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கீழ்க்கண்ட கல்லூரிகளிலும் ஹோட்டல் மேலாண்மை மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி கற்றுத்தரப்படுகின்றன. இக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசின் தொழில்நுட்பக் கல்வித்துறையால் தேர்வுகள் நடத்தப்பட்டு பட்டயங்கள் வழங்கப்படுகின்றன.

**I. Tamil Nadu Government - Other Department (01 No.)**

**1. State Inst. of Hotel Management & Catering Tech.Thuvakkudi, Trichy - 620 015.**

**II. Puducherry Government (01 No.)**

**1. Pondicherry Inst. of Hotel Management & Catering Tech., Pondicherry - 605 001.**

**III. Self-Supporting Colleges**

**1. Bharat Institute of Catering Technology & Hotel Managment. Thanjavur.**

**2. MGR Inst. of Hotel Management And Catering Technology, Valasaravakkam, Chennai-600 087.**

**3. Shevaroys College of Hotel Managment & Catering Tech. Yercud-Hills - 636 601.**

**4. VJP College of Catering And Hotel Managment, Sriranganur, Trichy - 621 105.**

**5. Asan Memorial Inst. of Hotel Managment & Catering Tech., Jaladampet, Chennai - 601 302.**

**6. Empee Inst. of Hotel Managment & Cateing Tech. Anna Nagar (E), Chennai - 600 102.**

**7. Jenneys Academy of Tourism And Hotel Management, Ramjee Nagar, Trichy - 620 009.**

**8. Annai Fathima Inst. of Catering, Thirumangalam, Madurai Dist - 625 106.**

மேற்கண்ட கல்லூரிகள் தவிர ஹோட்டல் மேனேஜ்மெண்ட் மற்றும் கேட்டரிங் டெக்னாலஜி தனியார் கல்லூரிகள் ஏராளம் உள்ளன. அவற்றில் சேர்வதற்கு முன் அரசு

அங்கீகாரம், உள் கட்டமைப்பு வசதி மற்றும் வேலைவாய்ப்புக்கான வசதி ஆகியவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

***

## 49. கலை அறிவியல் கல்வி

மருத்துவம், பொறியியல், விவசாயம், சட்டம் போன்ற தொழில் கல்லூரிகளில் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கே படிப்பை முடித்தவுடன் வேலையில் அமருவதற்கான வாய்ப்பு உள்ளது என்ற நிலையும் எண்ணமும் தற்போது வேகமாக மாறிவருகிறது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்று வரும் மாணவ–மாணவியருக்கும் பட்டம் பெற்றவுடன் உடனடியாக வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் தற்போது அதிகரித்து வருகின்றன. தமிழக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வேலைவாய்ப்புள்ள பல புதிய பாடப்பிரிவுகளை தொடங்குவதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இக்கல்லூரிகளில் பாடத்திட்டங்களை மாற்றியமைத்தும் இப்பாடப்பிரிவுகளில் பயின்று வரும் மாணவ–மாணவிகளின் வேலைவாய்ப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புதிதாக 163 படிப்புகள் கலைஅறிவியல் கல்லூரிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பத் துறையில் பெருகி வரும் வேலைவாய்ப்பினை கருத்தில் கொண்டு பெரும்பான்மையான அரசுக் கல்லூரிகளில் கணினி அறிவியல் பாடப் பிரிவு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இப்பாடப்பிரிவு இதுவரை தொடங்கப்படாத அரசு கல்லூரிகளில் இதனை தொடங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தற்போது தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் அலுவலகங்களை நிறுவி வருகின்றன. கணினி அறிவியல் பாடப்பிரிவில் பயின்றுவரும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் படிப்பை முடித்தவுடன் வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அதேபோன்று வணிகவியல் பயிலும் மாணவ–மாணவியர்கள் உள்நாட்டு வெளிநாட்டு வங்கிகள், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் நிதிநிறுவனங்களில் உடனடியாக வேலை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. அனைத்துவிதமான தொழிற்சாலைகளுக்கும் கணக்குப் பிரிவே முக்கிய அங்கம் என்ற அடிப்படையில் இத்தொழற்சாலைகளில் வணிகவியல் பட்டதாரிகள் வேலை பெற இயலும். மேலும், தற்போது வணிகவியல் பாடப்பிரிவுடன் கணினி செயல்பாடும் இணைந்த பாடப்பிரிவும் கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இந்த புதிய முறை பாடத் திட்டமும் வணிகவியல் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பினை அதிகரித்துள்ளது.

இளமறிவியல் மற்றும் முதுநிலை அறிவியல் முதன்மைப் பாடப்பிரிவுகளான கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கும் தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த நிறுவனங்களிலும் மைய அரசின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிவரும் பல்வேறு நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகள் உள்ளன. உயிர்வேதியியல் மற்றும் நுண்ணுயிரியல் போன்ற தொழில்நுட்ப பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கு மருந்துகள் தயாரிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிலும், ஆய்வுக்கூடங்களிலும் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. பல கல்லூரிகளில் தற்போது பயிற்றுவிக்கப்பட்டுவரும் 'பி.எஸ்.ஸி. விசுவல் கம்யூனிகேசன்' பாடப்பிரிவில் பயின்று வரும் மாணவ–மாணவியர்களுக்கு அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களிலும் திரைப்படத் துறையில் நிறைய வேலைவாய்ப்புகள் உள்ளன. மல்டிமீடியா, அனிமேஷன் போன்ற துறைகளிலும் இப்பாடப்பிரிவில் பயிலும் மாணவ – மாணவியருக்கு நல்ல ஊதியத்தில் வேலை கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

வணிகவியல் மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகள் அல்லாது இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவிகளுக்கும் பல்வேறு துறைகளிலும் வேலைவாய்ப்புகள் உள்ளன. இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் மாணவ–மாணவியர்கள் ஆங்கில மொழியில் சரளமாக பேசும் திறனை வளர்த்துக் கொண்டால் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களின் பி.பி.ஓ.க்களிலும் கால்சென்டர்களிலும் நல்ல ஊதியத்தில் வேலையில் அமருவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. மெடிக்கல் டிரான்ஸ்கிரிப்ஷன் துறையிலும் தற்போது கலை அறிவியல்கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு நிறைய வேலை வாய்ப்பு உள்ளது. இதனைக் கருத்தில் கொண்ட அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவ–மாணவியர்களின் ஆங்கில மொழியில் உரையாடும் திறனை வளர்க்கும் பொருட்டு தமிழக அரசு ஏறத்தாழ அனைத்து அரசு கல்லூரிகளிலும் மொழியியல் ஆய்வகங்களை தோற்றுவிப்பதற்கான ஆணை பிறப்பித்து அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

அகில இந்திய அளவிலான இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல்பணி, இந்திய அயல்நாட்டு பணி போன்றவற்றிலும் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (யு.பி.எஸ்.சி.) நடத்தும் அகில இந்திய அளவிலான பல்வேறு தேர்வுகளிலும் கலை மற்றும் அறிவியல் பாடப்பிரிவுகளில் பயிலும் மாணவ–மாணவியர்களும் கலந்து கொண்டு வெற்றி பெறுகிறார்கள். அருகில் உள்ள தொழிற்சாலைகளுடன் இணைந்து தொழில்சார்ந்த பாடப்பிரிவுகளை அரசுக் கல்லூரிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஊக்கமுள்ள மாணவ–மாணவியர் சொந்தத் தொழில் தொடங்கி சிறந்த தொழில்முனைவோர்களாக வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

பிளஸ்–2 முடித்தவுடன் பெரும்பாலான மாணவர்கள் கல்லூரிகளில் **B.A., B.Sc.,** போன்ற பட்டப் படிப்புகளில் சேர முடிவு செய்வார்கள். அவர்கள் தேர்வு செய்ய வேண்டிய சில அரிய பட்டப்படிப்புகள் வருமாறு –

1. **BFA (Printing & Sculpture)**
2. **B.A. (Industrial Organisation - Leather)**
3. **BLM (Labour Management)**
4. **BA (Music)**
5. **BA (Social Work)**
6. **BBA (Business Administration)**
7. **BBM (Business Managament)**
8. **BBM (Bank Management)**
9. **BA (Co-Operation)**
10. **BA (Corporate Secretaryship)**
11. **B.Sc. (Bio-Chemistry)**
12. **B.Sc. (Computer Science)**
13. **BCA (Computer Application)**
14. **B.Sc. (Applied Science - Computer Technology**
15. **B.Sc. (Micro Biology)**
16. **B.Sc. (Home Science)**
17. **B.Sc. (Nutrition & Dietetics)**
18. **B.Sc. (Nutrition, Food Service Management & Dietetics**
19. **B.Sc. (Catering Technology & Hotel Management)**
20. **B.Sc. (Electronic Science)**
21. **B.Sc. (Industrial Electronics)**
22. **B.Sc. (Industrial Electronics)**
23. **B.Sc. (Bio-Technology)**
24. **B.Sc. (Costume Design & Fashion)**
25. **B.Sc. (Interior Decoration)**
26. **B.Sc. (Interior Design, Textile Design & Caramic Design**
27. **B.Sc. (Health Care & Hospital Management)**
28. **B.Sc. (Child & Family in a Changing Society)**
29. **B.Sc. B.E.M. (Environmental Management)**
30. **B.Sc. (Environmental Zoology)**
31. **B.Sc. (Rahabilitation Science)**
32. **B.Sc. (Rural Development Science)**
33. **B.Sc. (Applied Physics - Instrumentation)**
34. **B.Sc. (Visual Communication)**

35. B.Sc. (Applied Automobile
36. B.Sc. (Library Information & Documentation Science)
37. B.Sc. (Physical Education)
38. B.Sc. (Physical Education, Health Education & Sports
39. B.Sc. (Geology)
40. ASEd. (Associate Degree in Special Educatioi__
41. BESC (Electronic Science)
42. B.Sc. (Bio Informatics)
43. B.Sc. (Forensic Science)
44. B.Sc. (Archeology)
45. BTTM (Travel and Tourism Management)

***

## 50. உடற்கல்வி நிறுவனங்கள்

| S.No. | Institution | Course | | Eligibilitty |
|---|---|---|---|---|
| | | Physical Education Programme | | |
| 1. | Tamil Nadu Physical Education and Sports University, Melakottaiyur (Po), Vengatamangalam, Chennai - 600 127. Phone : 044 -2747 7906 Web : www.tnpesu.org. | B.Sc. Excercise Physiology and Nutrition | 3 years | +2 or Equivalent |
| | | B.P.Ed. (Bachelor of Physcial Education) | 1 year | Any Degree |
| | | M.P.Ed. (Master of Physical Education) | 2 years | Any Degree with B.P.Ed. or B.PE. Degree |
| | | M.Sc. Excercise Physiology and Nutrition | 2 years | Any Science/ Physical Educational Degree |
| | | M.Sc. Yoga | 2 years | Any Degree |
| | | M.Sc. Sports Phychology and Socialogy | 2 years | Any Degree |
| | | M.Sc. Sports Coaching | 2 years | Any Degree with Diploma in Sport Coaching |
| | | M.Sc. Sports Bio-mechanics and Kniesiology | 2 years | Any Science/ Physcial Education Degree |
| | | MBA Sports Management | 2 years | Any Degree |
| | | M.Tech. Sports Technology | 2 years | B.E. / Equivalent (any discipline) |
| | | M.Phil. | 1 year | PG Degree |
| | | Ph.D. | 3 years | Master's Degree in relevant Field. |
| 2. | Distance Education Courses | B.Sc. | 3 years | +2 Pass |
| | | PG Courses | 2 years | Any graduate |
| | | PG Diploma | 1 year | Any graduate |
| | | Diploma | 1 year | +2 pass |
| | | Certificate courses | 6 months | 10th |

2. Alagappa University College of Physcial Education, Karaikudi-630004. Department of Physcial Education, Alappga University, Karaikudi - 630 004.
3. Dr. Sivanthi Adithanar College of Physical Education, Triuchendur - 628 215.
4. Department of Physcial Educaiton, Annamalai University. Annamalai Nagar
5. YMCA College of Physical education, Nandanam, Chennai-25.
6. Maruthi College of Physical Education, Periya Naikkampalayam, S.R.K. Vidyalaya, CBE.
7. Sri Saradha College of Physcial Education, Salem-636016.
8. Ramakrishna Chandra College of Physical Education for Women, Kullappa, Goundanpatti, Kamban Taluk, Theni Dist.
9. Rabindranath Tagore College of Physical Education for Women, Veerachipalayam, Sankari TK, Namakkal (Dist.)
10. Vivekandha College of Physical Education for Women, Unjanai, Elayampalayam, Triuchengode TK.
11. Gnanamani College of Physical Education, A.K. Samuthiram Pachal (Post) Rasipuram TK. Namakkal Dist.
12. Selvam College of Physical Education, Namakkal.
13. Dept. of Physical Education, Bharathiyar University, Coimbatore.
14. Dept. of Physical Education, Bharathidasan University, Trichy.
15. Dept. oi Physical Education, M.S. University, Tirunelveli.
16. SKT College of Physical Education, Nagapatinam.
17. Renugambal College of Physical Education, Polur.
18. Mother Terasa College of Physical Education, Illupur.
19. Meenakshi Physical Education College, Thathanur, Perambalur Dist.
20. Kovilur Andavar College of Physical Education, Kovilur, Sivagangai Dt.
21. Christopher College of Physical Education, Nagarkoil.
22. St. John's College of Physical Education, Veeravanallur, Tirunelveli Dt.

*இவை தவிர பல கலை அறிவியல் கல்லூரிகளில் பி.எஸ்.ஸி. (பிசிகல் எஜுகேஷன்) என்ற மூன்று வருட படிப்பு உள்ளது. தகுதி : +2 தேர்ச்சி*

**மாணவர்களுக்கான விளையாட்டுப் பள்ளிகளும் பயிற்சி அளிக்கப்படும் விளையாட்டுகளும்**

*1. ஒய்.எம்.சி.ஏ. விளையாட்டுப் பள்ளி, நந்தனம், சென்னை–35,*

*பயிற்சி – தடகளம், ஹாக்கி, கால்பந்து, நீச்சல்.*

*2. சுவாமி சிவானந்தா மேல்நிலை விளையாட்டுப்பள்ளி, பெரிய நாயக்கன்பாளையம், கோவை – 641020.*

*பயிற்சி – தடகளம், கூடைப்பந்து, வாலிபால்.*

*3. நெய்வேலி பழுப்பு நிலக்கரி விளையாட்டுப் பள்ளி, நெய்வேலி.*

*பயிற்சி – தடகளம், கால்பந்து, கிரிக்கெட்.*

*4. திண்டல், ஈரோடு மாவட்டம்.*

**மாணவர்களுக்கான விளையாட்டு விடுதிகள் உள்ள இடங்கள் :**

*1. அண்ணா விளையாட்டு அரங்கம், திருச்சி–23.*
*தடகளம், கால்பந்து, வாலிபால்.*

2. அண்ணா விளையாட்டு அரங்கம், திருநெல்வேலி.
   தடகளம், ஹாக்கி, வாலிபால்.
3. எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கம், மதுரை–2
   தடகளம், கால்பந்து, கூடைப்பந்து.
4. சென்னை
5. கிருஷ்ணகிரி

**மாணவியருக்கான விளையாட்டு விடுதிகள்**

1. அன்னை சத்யா விளையாட்டு அரங்கம், ஈரோடு–3
   தடகளம், கூடைப்பந்து, வாலிபால்.
2. திருவண்ணாமலை
3. நாமக்கல்

***

## 51. நுண்கலை படிப்புகள்

தமிழ்நாட்டில் நுண் கலைப்படிப்புகளை நெறிப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும், நுண்கலை படிப்புகளைத் தரும் கல்வி நிலையங்களை ஒருங்கிணைக்கவும் தமிழ்நாடு இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நீண்டகாலமாகவே நுண்கலைப் படிப்புகள் உள்ளன. அவை பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகம் :**

முகவரி : டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலை, ராஜாஅண்ணாமலைபுரம், சென்னை–600 028. போன்: 044–24629036.

**இணைப்புக் கல்லூரிகள் :**

1. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, ராஜாஅண்ணாமலைபுரம், சென்னை–600028.
2. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, பசுமலை, மதுரை–625004.
3. தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர்–641002.
4. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, திருவையாறு, தஞ்சாவூர்–613204.
5. கலைக் காவேரி காலேஜ் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ், திருச்சிராப்பள்ளி–620001.
6. கவர்ன்மெண்ட் காலேஜ் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ், பெரியார்சாலை, சென்னை–600003,
7. கவர்ன்மென்ட் காலேஜ் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ், கும்பகோணம்–612002.
8. கவர்ன்மெண்ட் காலேஜ் ஆஃப் ஆர்க்கிடெக்சர் & ஸ்கல்ப்சர், மாமல்லபுரம்–603104.
9. எம்.ஜி.ஆர். அரசு பிலிம் & டெலிவிஷன் இன்ஸ்டிடியூட், தரமணி, சென்னை–600028.
10. தமிழ்நாடு மியூசிக் & ஃபைன் ஆர்ட்ஸ் யுனிவர்சிட்டி, ராஜாஅண்ணாமலைபுரம், சென்னை–600028.

இவை தவிர பன்னிரெண்டு சுயநிதிக் கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

**படிப்புகள் :**

மாஸ்டர் ஆஃப் ஆர்ட்ஸ் (மியூசிக்)
பேச்சிலர் ஆஃப் ஆர்ட்ஸ் (மியூசிக்)

டிப்ளமா படிப்புகள்
பேச்சிலர் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ்
மாஸ்டர் ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ்
பி.டெக். (டிரடிசனல் ஆர்க்கிடெக்சர்)
பேச்சிலர் ஆஃப் விஷுவல் ஆர்ட்ஸ் (பி.வி.ஏ.)
பேச்சிலர் ஆஃப் டிசைன்
மாஸ்டர் ஆஃப் டிசைன்
சான்றிதழ் படிப்புகள்

**அண்ணாமலை பல்கலைக்கழகம் :**

முகவரி : முதல்வர், இசைக்கல்லூரி, அண்ணாமலை பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், சிதம்பரம்–608002.

**படிப்புகள் :**

1. பேச்சிலர் ஆஃப் மியூசிக் – 3 ஆண்டுகள்
2. மாஸ்டர் ஆஃப் மியூசிக் – 5 ஆண்டுகள்
3. இசைக்கலை மாமணி – 4 ஆண்டுகள்
4. நாட்டியக்கலை மாமணி – 4 ஆண்டுகள்
5. தேவார இசைக் கலைமாமணி – 4 ஆண்டுகள்
6. பட்டயப்படிப்பு – நட்டுவாங்கம் – 2 ஆண்டுகள்
7. சான்றிதழ் படிப்பு – 1 ஆண்டு

மேற்கண்டவை தவிர நுண்கலை படிப்புகள் தரும் பல்கலைக்கழகங்கள் :

1. சென்னை பல்கலைக்கழகம்
2. பாரதிதாசன் பல்கலைக்கழகம்
3. பாரதியார் பல்கலைக்கழகம்
4. சாஸ்த்ரா பல்கலைக்கழகம்

***

## 52. வங்கி மேலாண்மை படிப்புகள்

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளின் பணி முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. நாடெங்கிலும் உள்ள வங்கிக் கிளைகளுக்கு வங்கி மேலாண்மை கற்றுத் தேர்ந்தவர்கள் தேவைப்படுகிறார்கள். இக்குறையைப் போக்க தமிழகத்தில் பல கல்லூரிகள் வங்கி மேலாண்மையை ஒரு பாடமாகவே கற்றுத் தருகின்றன. பெருகிவரும் மக்கள் தொகைக்கும் நாகரிகத்துக்கும் ஏற்றவாறு அன்றாட வங்கி நடவடிக்கைகள், நிதி மேலாண்மை இன்டர்நெட், பேங்கிங், கடன் அளிக்கும் முறை போன்றவைகளை இப்படிப்பு கற்றுத் தருகிறது. இப்படிப்பை முடித்தவர்கள் அரசு மற்றும் தனியார் வங்கிகள், சர்வதேச வங்கிகள், நிதி நிறுவனங்கள், கடன் வசதி நிறுவனங்கள் போன்றவற்றில் பணிபுரியலாம்.

எங்கு படிக்கலாம்?

| வ.எண். | கல்வி நிறுவனம் | படிப்பு | காலம் | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|
| 1. | Alagappa University, Directorate of Distance Education Karaikudi - 630 003. Ph: 04565-229230 Web: www.aluniv.org | 1. BBM (Bachelor of Bank Management)<br>2. M.B.A. | 3 Years<br>2 Years | 10+2<br>Degree |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | Bharathidasan University,<br>Distance Education,<br>Tiruchirapalli - 620 024.<br>Ph: 0431-2407048/72/32<br>Web: www.bdu.ac.in | BA (Bank Management) | 3 Years | 10+2 |
| 3. | Srimathi Indra Gandhi College, Trichy-620 002. | BBM | 3 Years | 10+2 |
| 4. | University of Madras,<br>I.C.E. Building, Chepauk,<br>Chennai - 600 005.<br>Ph: 044-25393347<br>www.university of madras-ice.ac.in | BBM (Bachelor of Bank Management)<br>B.Sc. (Cost & Banking)<br>B.A. (Rural Banking)<br>B.Com. (Bank Management | 3 Years<br>3 Years<br>3 Years<br>3 Years | 10+2<br>10+2<br>10+2<br>10+2 |
| 5. | Gandhigram Rural Institute,<br>Gandhigram - 624 302,<br>Dindigul District. | Diploma in Banking | 1 Year | 10+2 |
| 6. | Vinayaga Mission's Kirupananda Variar Engineering College, Salem Main Road,Salem Dt. | MBA (Banking and Insurance) | 2 years | BBM |
| 7. | Kalasalingam University | MBA (Banking and Insurance) | 2 years | BBM |
| 8. | Muthu Arts & Science College, Harur, Dharmapuri - 636 903. | BBM | 3 Years | 10+2 |
| 9. | Hindustan College of Arts & Science, No.40, GST Road, St. Thomas Mount, Chennai-600 016. | BBM | 3 Years | 10+2 |
| 10. | Meenakshi College for Women, Kodambakkam, Chennai - 600 024. | BBM | 3 Years | 10+2 |
| 11. | Mother Teresa Women's University, School of Distance Education, Kodaikanal - 624 102. | BBM | 3 Years | 10+2 |
| 12. | Annamalai University, Chidambaram - 608 002. | PG Diploma in Banking and Insurance.<br>M.Com Banking and Insurance Management | 1 Year<br>2 Years | degree<br>degree |
| 13. | Madurai Kamaraj University, Madurai-21. | M.Com (Banking) | 2 years | degree |
| 14. | Arts & Science Colleges | B.Com. (Bank Management | 3 Years | +2 pass |

மேற்கண்டவை தவிர கலை அறிவியல் கல்லூரிகளில் **B.Com. (Bank Management)** என்ற இளங்கலை மூன்று ஆண்டு படிப்பு உள்ளது. இதற்குத் தகுதி +2 தேர்ச்சி.

***

### 53. இன்சூரன்ஸ் துறையில் படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு

கடந்த சில ஆண்டுகளில் இந்தத் துறை பெரிய அளவில் வளர்ந்து வருகிறது. காப்பீட்டுத் துறை தனியார் மயமாக்கப்பட்ட பின்பு பல தனியார் நிறுவனங்கள் இன்சூரன்ஸ் நிறுவனங்களை நிறுவியுள்ளன.

**படிப்பின் வகைகள் :**

பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு.

காப்பீட்டுத் தொழில் தொடர்பான படிப்புகள் பல வகைப்படும். 10, +2 முடித்தவுடன் படிக்கக்கூடிய படிப்புகள் இருக்கின்றன. பி.ஏ., பி.எஸ்.ஸி. என்று பட்டப்படிப்பு படிக்கலாம். வங்கியியல் போன்ற பாடத்துடன் சேர்த்துப் படிக்கலாம். சில கல்வி நிலையங்களில் பட்டயப்படிப்பு படிக்கலாம்.

**சான்றிதழ் படிப்பு :**

10, +2 படித்தவர்கள் குறுகிய காலப் பயிற்சியை முடித்து சான்றிதழ் பெறலாம். மாரத்வாடா பல்கலைக் கழகம், அவுரங்காபாத்–431 004 என்ற முகவரியில் தொடர்பு கொண்டும் மேற்கொண்டு விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**முதுகலைப்டிபப்பு :**

எம்.பி.ஏ. (இன்சூரன்ஸ்) மற்றும் முதுகலை பட்டயம் இன்சூரன்ஸ் அண்ட் மேனேஜ்மெண்ட்) படிப்புகள் உள்ளன.

**IIRM Institute of Insurance and Risk Management**

**Phone : 040-23002041-42-43 web : www.iirmworld.org. Hyderabad-500032.**

ஆந்திர அரசும் இரடாவும் **(IRDA)** இணைந்து ஐஐஆர்எம் இன்ஸ்டிடியூட் ஆப் இன்சூரன்ஸ் அண்ட் ரிஸ்க் மேனேஜ்மெண்ட் என்ற நிறுவனத்தை ஹைதராபாத்தில் நடத்தி வருக்னிற்ன. இந்நிறுவனம் இன்டர்நேஷனல் போஸ்ட் கிராஜுவேட் டிப்ளமா என்று லைப் இன்சூரன்ஸ், ஜெனரல் இன்சூரன்ஸ் மற்றும் ரிஸ்க் மேனேஜ்மென்ட் என மூன்று வகையான போஸ்ட் கிராஜுவேட் டிப்ளமாவை வழங்குகின்றது.

**படிப்பு காலம் :** ஒரு வருடம் முழுநேர படிப்பு

**கல்வித்தகுதி :** ஏதாவதொரு இளங்கலை முதுகலை பட்டப்படிப்பு 50% மார்க்குடன்.

**படிப்பு கட்டணம் :** ரூ.210000/–

அண்ணாமலை பல்கலைக்கழகம் : அண்ணாமலை நகர், சிதம்பரம் – 608 002.

பட்டய மேல்படிப்பாக இன்சூரன்ஸ் – 1 வருட பாடத்திட்டம். ஏதாவது ஒருபட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

சென்னை பல்கலைக்கழகம் : சேப்பாக்கம், சென்னை–600005. பட்டய மேற்படிப்பு 1 வருடம். ஏதாவது ஒரு பட்டம். புள்ளியியல், கணிதம் முக்கிய பாடமாக அல்லது சமமான படிப்பு படித்திருக்க வேண்டும்.

மத்திய அரசு காப்பீட்டு நிறுவனங்கள் : லைப் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா **(LIC)**

பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் : ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி, நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, யுனைடெட் இன்சூரன்ஸ் கம்பெனி, நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி.

இவை தவிர 10–க்கும் மேற்பட்ட தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் **IRDA**–இன்சூரன்ஸ் ஒழுங்குபடுத்துதல் மற்றும் வளர்ச்சி ஆணையத்தால் லைசன்ஸ் வழங்கப்பட்டு செயல்படுகின்றன.

பணிகள் : பணி இடங்களை பூர்த்தியாக்கத் தீர்மானிக்கும்போது எல்லா முக்கியப் பத்திரிக்கைகளிலும் விளம்பரங்கள் கொடுக்கப்படும்.

**இன்சூரன்ஸ் முகவர் ஆவது எப்படி?**

100 கோடிக்கு மேல் மக்கள் தொகை உள்ள நம் நாட்டில் பெரும்பாலான மக்களை ஆயுள் இன்சூரன்ஸ் இதுவரையில் சென்றடையவில்லை. இந்த ஆக்கப் பணியை முழுமையாகச் செய்து முடிக்க முதலில் தேவை முகவர்கள்.

முகவர் ஆவது எப்படி?

நாட்டின் முக்கிய ஆயுள் காப்பீட்டு நிறுவனமான எல்.ஐ.சி.யனில முகவர் ஆவது எப்படி?

**கல்வித் தகுதி :**

+2 தேர்ச்சி. கிராமப் பகுதிகளில் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்தாலே முகவர் பயிற்சி பெறத் தகுதி வாய்ந்தவர் ஆகிறார். எல்.ஐ.சி. கிளை அலுவலகத்தை அணுகிப் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்குக் கட்டணம் ரூ. 150 அதன்பிறகு 30 நாட்கள் பயிற்சி அளிக்கப்படும். இதற்கு எதுவும் கட்டணம் இல்லை. பயிற்சி முடிந்தவன் காப்பீட்டு அலுவலகம் மூலம் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வில் வெற்றி பெற்றவர்கள் பயிற்சி முடிந்தவுடன் காப்பீட்டு அலுவலகம் மூலம் தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வில் வெற்றி பெற்றவர்கள் முகவராக விண்ணபிக்க வேண்டும். இதற்குக் கட்டணம் ரூ. 250. பயிற்சி பெற்று முகவர் தகுதி பெற்றவர் இந்தியாவிலுள்ள இன்சூரன்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வாய்ப்புப் பெறுகிறார்கள். கடுமையாக உழைத்தால் பொருள் ஈட்டலாம். சில அடிப்படைத் தகுதிகளைப் பெற்றவுடன் எல்.ஐ.சி. நிறுவனம் பல்வேறு கடன் வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது.

**பிற பணிகள் :**

பொதுக் காப்பீட்டு நிறுவனங்கள் அடிக்கடி பொதுத் தேர்வு மூலம் நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பணியிடங்களுக்கு ஆட்களை தேர்வு செய்கிறார்கள். குறைந்தபட்ச கல்வித் தகுதி – ஏதாவதொரு பட்டப்படிப்பு.

**தனியார் நிறுவனங்கள் :**

இந்த நிறுவனங்கள் பெரும்பாலும் மார்க்கெட்டிங் பணிகளுக்காக ஆட்களை தேர்வு செய்கிறார்கள். **MBA** படித்திருந்தால் மிக பொருத்தமாக இருக்கும்.

***

## 54. பேக்கேஜிங் துறை படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு

பொருளுக்கேற்ற, பொருள் பாதுகாப்புக்காக நுகர்வோர் பயன்படுத்தும் வகையில் சென்று சேரும் விதத்திலும், தரமாகவும் சுற்றுப்புற சூழல்கேடுகள் இல்லாத வகையிலும் பேக்கேஜிங் அமைய வேண்டும். இத்தகைய வடிவமைப்பை பிரத்யேகமாக பேக்கேஜிங் தொழில்நுட்பம் பயின்றவர்களால் மேற்கொள்ள முடியும். இவர்களை பேக்கேஜிங் தொழில்நுட்ப வல்லுனர் என்று அழைக்கலாம். தொழில்கூடத்தில் மேலாண்மைப் பொறுப்பை மேற்கொண்டவர் பேக்கேஜிங் மேலாளர் என்றழைக்கப்படுவர். பேக்கேஜிங் நிறுவனத்தில் ஒவ்வொரு பிரிவையும் பராமரிப்பவரை கண்காணிப்பாளர் என்றழைக்கலாம். இத்துறை வாய்ப்புக்கள் மிகவும் நுட்பமாகவும் பரந்து விரிந்தும் வளர்ந்துள்ளதால் தனியாக இது குறித்த கல்வி, இது சார்ந்த கல்வி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகின்றன.

1. பேக்கேஜிங்கில் முதுநிலை பட்ட டிப்ளமோ (முழுநேரப் படிப்பு)

2 ஆண்டுகள் படிப்பு, மும்பையிலும் டெல்லியிலும் இந்தியன் இன்ஸ்டிடியுட் ஆப் பேக்கேஜிங் மூலம் நடத்தப்படுகின்றது.

+2 படிப்புக்குப் பின் பட்டப்படிப்பு இயற்பியல்/வேதியியல்/கணிதம் அல்லது நுண் உயிரியல் படிப்பு அல்லது விவசாயம்/உணவு விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்பம் பயின்றிருத்தல் அவசியம். நுழைவுத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வின் அடிப்படையில் அகில இந்திய அளவில் தேர்வு நடத்தி தேர்வு செய்யப்படுவர். பொதுவாக ஜூன் மாதத்தில் ஒவ்வொரு ஆண்டும் இத்தேர்வு நடத்தப்படும். தேர்வு மையங்கள் சென்னை, மும்பை, டெல்லி, கொல்கத்தா ஆகும்.

2. பேக்கேஜிங் பட்ட டிப்ளமோ படிப்பு **(Graduate Diploma in Packaging)** (தொலைத் தொடர்பு கல்வியாக)

18 மாதங்கள் கால அளவைக் கொண்ட படிப்பாக வழங்கப்படுகின்றது. இந்தப் படிப்பு ஆசியன் பேக்கேஜிங் இணையத்தால் அங்கீகரிக்கப்படுகின்றது. இந்தப் படிப்புக்கான அறிவிப்பு மற்றும் பயிற்சி நவம்பர்–டிசம்பர் மாதங்களில் வெளிவரும்.

**கல்வித்தகுதி :**

ஏதாவது ஒரு பட்டப்படிப்பு விஞ்ஞானம்/கலை/வணிகம் அல்லது அவை சார்ந்த படிப்புடன் ஒரு ஆண்டு தொழில் அனுபவம்.

பொறியியல்/மருந்தியல் அல்லது தொழில் நுட்பம் ஓராண்டு அனுபவம் (அல்லது)

டிப்ளமோ படித்தவர்கள் (10+3)க்குப் பின் இரண்டாண்டு தொழில் அனுபவம்.

3. சான்றிதழ் பேக்கேஜிங் படிப்பு **(Certiifcate course of Packaging)**

3 மாத படிப்புக்காக மும்பை மற்றும் பிராந்திய மையங்களிலுள்ள இந்திய பேக்கேஜிங் நிறுவன மையங்கள் மூலம் ஒவ்வொரு காலாண்டிற்கொருமுறை இப்படிப்பு பயிற்றுவிக்கப்படும்.

**கல்வித்தகுதி :**

பட்டப்படிப்பு விஞ்ஞானம் அல்லது தொழில் நுட்பத்தில்/பொருளாதாரம்/பேக்கேஜிங்/வணிகவியல்/கணிதவியல்/பாலிடெக்னிக் டிப்ளமோ/ பேக்கேஜிங் துறையில் அனுபவம் உடையவர்கள்.

***கல்வி நிறுவனங்களின் முகவரி மற்றும் இணைய தள விவரங்கள்***

1. **Indian Institute of Pacaking, E-2, MIDC Area, P.B. No. 9432, Andheri (E), Mumbai-400093. Website : http://www.iip.in.com.**

***மண்டல அளவிலுள்ள மையங்கள்***

2. **Indian Institute of Packaging, Delhi, P.No. 21, Functional Industrial Estate, Patparganj Opp. Patparganj depot. Delhi - 110092.**
3. **Indian Institute of Packaging. Kolkotta, Block C.P. Sector-V, Saltlake, Bishan Nagar, Kolkatta-700 091.**
4. **Indian Institute of Packagng. Chennai, Plot 169, Industrial Estate, Perungudi, Chennai-600096.**
5. **Indian Institute of Packaging, Industrial Estate, Hyderabad.**

***

### *55. விஷுவல் கம்யூனிகேஷன்*

*இது மீடியா யுகம்! பத்திரிகைகள், டெலிவிஷன், அட்வர்டைஸிங், பப்ளிக் ரிலேஷன் உள்ளிட்ட துறைகள் அடங்கியது. மீடியா தொழில் தற்போது மீடியா சம்பந்தப்பட்ட பல்வேறு படிப்புகளைக் கற்றுத் தர தனித்தனிப் படிப்புகள் வரத் தொடங்கிவிட்டன, விளம்பர யுகமும் தனியார் தொலைக்காட்சிகளின் வளர்ச்சியும் விஷுவல் கம்யூனிகேஷன் (விஸ்காம்) பாடத்தை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாற்றிவிட்டன,*

***கல்வித்தகுதி :*** *பிளஸ் டூ படித்த மாணவர்கள் இப்படிப்பில்சேரலாம். கலை, அறிவியல் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் இன்றைய முக்கிய சாய்ஸ் விஷுவல் கம்யூனிகேஷன்.*

***படிப்பு விவரங்கள் :***

*டிராயிங், கலந்துரையாடல், போட்டோகிராபி, அட்வர்டைஸிங், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயார்ப்பு, ஸ்க்ரிப் ரைட்டிங், டாகுமென்ட்டரி படத் தயாரிப்பு, மல்டிமீடியா வெப் டிசைனிங், காப்பி எடிட்டிங், பிரிண்டிங் அண்ட் பிப்ளிஷிங் டிஸைன் உள்ளிட்ட விஷுவல் மீடியா தொடர்பான பல்வேறு வகையான பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன. இதனால் மீடியா துறையின் பல்வேறு அம்சங்களின் அடிப்டை அறிமுகம் மாணவர்களுக்கு இருக்கும் பாடங்கள் வெவ்வேறாக இருந்தாலும்கூட அவை ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவையே.*

*தன்னாட்சிக் கல்லூரிகளிலும், நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களிலும் காலத்தின் தேவைக்கேற்ப மீடியா தொடர்புடைய வேறு சில பாடப் பிரிவுகளையும் கற்றுத் தருகிறார்கள். சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்களை வரவழைத்து மாணவர்களுக்க வகுப்பு எடுக்கச் செய்கிறார்கள். இப்படிப்பில் தியரிக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் நேர்முகப் பயிற்சிக்கும் உண்டு.*

*பிற மாநிலங்களில் உள்ள சில கல்வி நிறுவனங்களில் மாஸ் கம்யூனிகேஷன் படிப்புகளிலேயே வஷுவல் கம்யூனிகேஷனும் ஒரு முக்கியப் பாடமாக நடத்தப்பட்டு வருகிறது.*

***வேலைவாய்ப்பு :*** *விளம்பரதாரர்களின் தயாரிப்புகளை மக்களிடம் பிரலப்படுத்த மக்கள் மனதில் பதிய வைக்கும் வகையில் படங்களுடன் கூடிய வாசகங்களை உருவாக்குதல்,*

லோகோ மற்றும் டிரேட் மார்க் விளம்பரங்களை வடிவமைத்தல் போன்ற துறைகளில் வேலைவாய்ப்பு கிடைக்கும். விளம்பர புகைப்பட நிபுணர் ஆகலாம்.

கிளையண்ட் சர்வீஸிங் எக்ஸியிட்டிவ், லே அவுட் ஆர்ட்டிஸ்ட், காப்பி ரைட்டர், விஷுவலைஸர், ஆர்ட் டைரக்டர் என விளம்பர நிறுவனங்களில் பல்வேறு பணிகளில் சேரலாம்.

*சம்பளம் :* எந்தத் துறையில் என்ன வேலை என்பதைப் பொறுத்து சம்பளம் இருக்கும். எதுவாக இருந்தாலும் தொடக்க நிலையில் 18 ஆயிரம் ரூபாய் அளவுக்கு சம்பளம் கிடைக்கும். விஷுவல் கம்யூனிகேஷன் படித்தவர்களுக்குத் தற்போது தகவல் தொழில் நுட்பத் தொழில் நிறுவனங்களில் 20 ஆயிரம் 30 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் கூட வேலை கிடைத்துள்ளது. விளம்பர ஏஜென்ஸிகள், டி.வி. நிகழ்ச்சி தயாரிப்பு நிறுவனங்கள், டிசைன் ஸ்டுயோ, ஐ.டி. நிறுவனங்களில் மாதம் 16 ஆயிரம் ரூபாய்க்குக் குறையாத சம்பளத்தில் வேலை கிடைக்க வாய்ப்புள்ளது.

கலைக் கல்லூரி மாணவர்களின் கனவுப் படிப்பு இது. சவால் நிறைந்த இத்துறையில் திறமையாளர்கள் வேகமாக முன்னேறி மீடியாவின் பல்வேறு துறைகளில் தங்களது தனி முத்திரையைப் பதிக்க முடியும்.

***

## 56. ஊடகங்கள் படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு

நாம் அன்றாடம் நடக்கும் உலக விஷயங்களை பத்திரிகை தொலைக்காட்சி போன்றவற்றை பார்த்து படித்து தெரிந்து கொள்கிறோம். இத்தகைய ஊடகங்களின் அசுர வளர்ச்சி பணியாளர்களின் தேவையை அதிகரிக்கிறது. மாணவர்களும் ஊடகங்கள் தொடர்பான படிப்புகளைப் படிக்க ஆர்வமாக உள்ளனர். ஊடகங்கள் தொடர்புபான படிப்புகளை பல்வேறு பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன. ஊடகத்துறை என்பது பத்திரிகை, ரேடியோ, தொலைக்காட்சி, இணையதளம், பத்திரிகை விளம்பரத் துறை போன்றவற்றை உள்ளடக்கியது. இந்த படிப்புகள் மாஸ் கம்யூனிகேசன், ஜெர்னலிசம், அட்வர்டைசிங், பப்ளிகேஷன், விஷுவல் கம்யூனிகேஷன் என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. பொதுவாக இந்த படிப்பிற்கு மாணவர்கள் சேர்க்கை நுழைவு தேர்வு மூலமே நடைபெறுகிறது. நுழைவுத் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் மே–ஜூலை மாதங்களில் நடைபெறும். எழுத்துத் தேர்வு நேர்முகத் தேர்வு குரூப் டிஸ்கசன் போன்றவற்றில் வெற்றி பெறும் மாணவர்கள் கோர்ஸில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பத்திரிகைத்துறையில் நுழைய விரும்பும் இளைஞர்களுக்கு மாஸ் கம்யூனிகேஷன் பட்டம் பெரிதும் உதவும். பத்திரிகைதுறையில் நுழைய விரும்பும் இளைஞர்கள் செய்திகளைப் படிப்பதில் ஆர்வம் உடையவராகவும், உலக நடப்புகளை தெரிந்து கொள்ள விருப்பம் உடையவராகவும் இருக்க வேண்டும். எண்ணங்களை தெளிவாக மற்றவர் புரியும் வகையில் வெளிப்படுத்தும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

1. **The Delhi Institute of Communication, www.thedelhischoolof communication.com**
2. **Jarina Millia Islamia University, New Delhi. www.jmi.nic.in**
3. **DDU Gorakpur University, Gorakpur. www.ddgu.edu.in**
4. **National Institute of social research and training. Ghaziabad, Uttar Pradesh. www.niscort.com**
5. **Lucknow University. www.lkoniv.ac.in**
6. **Indian Institute of Journalism and New Media. www.iijnm.org**

7. **Xavier Institute of communciation, Mumbai. www.xaviercomm.org**
8. **National Institute of Advertising, New Delhi. www.niaindia.org.**

மேலே குறிப்பிட்டுள்ள இணையதளத்தை தொடர்பு கொண்டு நுழைவுத் தேர்வு குறித்த விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் தொலைதூரக் கல்வி மூலம் மாஸ்கம்யூனிகேஷன் ஜெர்னலிசம் என்ற எம்.ஏ. முதுகலைப் படிப்பை வழங்குகிறது. மேலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் இதே தலைப்பில் ஒரு ஆண்டு முதுகலை டிப்ளமோ படிப்பும் உள்ளது. தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தில் **Media Art** என்ற பட்டப் படிப்பு உள்ளது.

❋❋❋

## 57. இதழியல் (Journalism)

ஊடகங்கள் என்று பொதுவாக அழைக்கப்படுகிற துறைகளில் பத்திரிக்கைத் துறையும் ஒன்று. இத்துறையில் வேலைவாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. எனவே, இப்படிப்புகளைப் படிக்க மாணவர்களிடம் ஆர்வம் அதிகரித்து வருகிறது.

தற்போது இளநிலைப் பட்ட நிலையிலேயே இதழியல் தொடர்பான படிப்புகள் உள்ளன. எனவே, ப்ளஸ் டூ படித்த மாணவர்கள் இப்படிப்புகளில் சேரலாம். விஷுவல் கம்யூனிகேஷன் தொடர்பான படிப்புகளிலும் இதழியலை ஒரு பாடமாகக் கற்றுத் தருகிறார்கள். மீடியா ஆர்ட்ஸ் போன்ற இளநிலை இதழியல் பட்டப் படிப்புகள் வரத் தொடங்கி விட்டன.

இதழியல் துறைக்கு வர விரும்புபவர்கள் ஏதாவது பட்டம் பெற்ற பிறகு, இதழியல் தொடர்பான முதுநிலைப் பட்டமும் பெற்று, தொழிலில் களம் இறங்குகிறார்கள்.

புது டெல்லியில் உள்ள 'இந்தியன் இன்ஸ்ட்டியூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேஷன்' முக்கியக் கல்வி நிறுவனமாகும். மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனம் இது. சென்னையில் உள்ள 'ஏஷியன் காலேஜ் ஆஃப் ஜர்னலிஸம்' கல்வி நிலையம் உள்ளது. தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இங்கு இதழியல் தொடர்பான ஓராண்டு டிப்ளமோ படிப்பைப் படிக்கலாம்.

புனேயில் உள்ள 'சிம்பயாசிஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மாஸ் கம்யூனிகேஷன்' மும்பையில் உள்ள 'சேவியர் இன்ஸ்ட்டியூட் ஆஃப் கம்யுனிகேஷன்' மலையாள மனோரமா ஸ்கூல் ஆஃப் கம்யூனிகேஷன் உள்ளிட்ட பல்வேறு முக்கியக் கல்வி நிறுவனங்களில் இதழியல் தொடர்பான படிப்புகளைப் படிக்கலாம். மற்ற கல்வி நிறுவனங்கள் :

1. முத்ரா இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்யூனிகேஷன், அகமதாபாத்
2. தி டைம்ஸ் ஸ்கூல் ஆஃப் ஜர்னலிசம்
3. இன்டர்நேஷனல் மீடியா இன்ஸ்டிடியூட் ஆஃப் இண்டியா, நாய்டா

சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், பி.எஸ்.ஜி. கலைக் கல்லூரி ஆகிய இடங்களில் எம்.ஏ. இதழியல் படிப்புகள் உள்ளன. இது தவிர இதழியலைக் கற்றுத்தர தனியாய் கல்வி நிறுவனங்களும் பல இருக்கின்றன. அழகப்பா பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவை தொலைதூரக்கல்வி மூலமும் இப்படிப்பை வழங்குகின்றன.

இதழியல் படித்தவர்கள் பத்திரிகைகளில் நிருபராகவோ, துணை ஆசிரியராகவோ பணியில் சேரலாம். இதழியல் படித்தவர்களுக்கு இணைய இதழ்களிலும், தொலைக்காட்சிகளிலும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும். விளம்பர நிறுவனங்கள், மக்கள் தொடர்பு நிறுவனங்களிலும் இதழியல் படித்தவர்களுக்க வேலை வாய்ப்புகள் உண்டு. பிரசித்தி பெற்ற கல்வி நிலையங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கு 'கேம்பஸ் இன்டர்வியூ' மூலமே வேலைவாய்ப்புக் கிடைத்துவிடுகிறது.

***

## 58. அனிமேஷன் (Animation)

ஓவிய அறிவு, வடிவமைப்பு குறித்த கலைஞானம், கம்ப்யூட்டர் மூலம் நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுதுவதில் ஆர்வம் உள்ள எவரும் அனிமேஷன் துறையில் இறங்கலாம். பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் இந்தப் பயிற்சியில் சேரலாம். பி.எஃப்.ஏ. போன்ற நுண்கலை பட்டப் படிப்புகளைப் படித்த மாணவர்கள் இன்னும் சிறப்பாக அனிமேஷன் துறையில் பிரகாசிக்க முடியும். கலை ஆர்வமிக்க பொறியியல் மாணவர்களும் இந்த படிப்பை படிக்கிறார்கள். அகமதாபாத்தில் உள்ள நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிஸைனிங், டிஸைன் தொடர்பான டிப்ளமோ படிப்புகளில் அனிமேஷன் கற்றுத் தரப்படுகிறது.

இது தவிர, நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் பரவலாக தனியார் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் தரம், கற்றுத் தரப்படும் பயிற்சிகள் குறித்த விவரம், பயிற்சிக் கட்டணம், அங்கு படித்த மாணவர்களுக்கு எந்த அளவுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதை அறிந்த கொண்டு சேருவது நல்லது.

அனிமேஷன் என்றவுடன், அது திரைப்படத் துறைக்கு மட்டுமே தேவையான ஒரு துறை எனப் பலர் எண்ணுகிறார்கள். அப்படி அல்ல. இதன் எல்லை விரிந்து வருகிறது. விளம்பரத் துறையிலும் அநேக வேலைவாய்ப்புகள் உள்ளன. தொலைக்காட்சி நிறுவனங்கள், வீடியோகிராஃபிக்ஸ் மையங்கள் ஆகியவற்றிலும் வேலை கிடைக்கும். வீடியோ கேமிங் துறை வளர்ந்து வரும் முக்கியத் துறைகளில் ஒன்று. தொழில் வல்லுனர்கள் எனவே, அனிமேஷன் பயிற்சி பெற்றவர்களுக்கு இத்துறையிலும் நல்ல வாய்ப்பு காத்திருக்கிறது. கல்வி தொடர்பான இன்டாராக்டிவ் சி.டி.–க்களை உருவாக்குவதிலும் அனிமேஷன் படித்தவர்கள் தேவைப்படுகிறார்கள். வெப் டிஸைனர்களாகவும் கிராஃபிக் டிஸைனர்களாகவும் கூட ஆக முடியும். ஆர்க்கிடெக்சர் மற்றும் இன்டீரியர் டிஸைன் துறைகளிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. மருத்துவம், தொழில் மற்றும் பாதுகாப்புத் துறைகளிலும் அனிமேஷன் தொழில் நுட்பத்தின் பயன்பாடு உள்ளது.

வரும் ஆண்டுகளில் அனிமேஷன் துறையில் 3 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் தேவைப்படுவார்கள் என்று அந்தத் துறை வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஆனால் அந்த அளவுக்குப் பயிற்சி பெற்ற திறமையாளர்கள் இல்லை. எனினும், மற்ற வெளிநாடுகளைவிட இந்தியாவில் அனிமேஷன் பணிகளுக்கான செலவு 40 சதவிகிதம் குறைவு என்பதால் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற பல வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்கள் (அவுட்சோர்சிங்) முறையில் அனிமேஷன் பணிகளை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குகின்றன. நம் ஈட்டில் 300–க்கும் மேற்பட்ட அனிமேஷன் ஸ்டுடியோக்கள் உள்ளன. எனவே, அனிமேஷன் துறையில் படித்த திறமையாளர்களுக்கு

நல்ல வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சாத்தியங்கள் உள்ளன. சம்பாதிப்பதற்கான வாய்ப்புகளும் ஏராளமாய் உள்ளன.

அனிமேஷன் தொடர்பான பல்வேறு பயிற்சிகளைத் தனியார் நிறுவனங்களில் படிக்கலாம்.க ற்றுத் தரும் பாடங்கள், பயிற்சிக் காலம் இவற்றைப் பொறுத்து கட்டணங்கள் கூடும். குறையும்! ரூ. 30 ஆயிரத்திலிருந்து ரூ. 2 லட்சம் வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**அனிமேஷன் கற்றுத்தரும் நிறுவனங்களில் சில :**

1. **Arena Multimedia - Chennai and other places**
2. **Maya Academy of Advanced Cinematic - Chennai and other places.**
3. **Zee Institute of Creative Arts - Mumbai and other places**
4. **Global School of Animation - Delhi & Chennai**
5. **Apeejay Institute of Design - New Delhi**
6. **Masco Media - Noida**

***

## 59. டிசைனிங்

நாம் பயன்படுத்தும் எந்த ஒரு பொருளிலுமே டிசைனிங் என்கிற வடிவமைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

'டிசைனிங்' என்றவுடன் 'ஃபேஷன் டிசைனிங்' மட்டுமேயான துறை என்று கருதிவிடக் கூடாது. கம்ப்யூட்டரில் உள்ள 'சிப்'பை வடிவமைப்பதற்குக்கூட 'சிப்' டிசைனர்கள் தேவை. பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் அழகிய கட்டடங்களை வடிவமைக்கும் ஆர்க்கிடெக்ட்டுகளுக்கும் 'டிசைனிங்' என்பது மிக முக்கியமானது. மோட்டார் வாகனங்கள் போன்ற போட்டி மிகுந்த தொழில் துறைகளிலும் 'டிசைனிங்' முக்கியம். இன்ஜினின் வடிவமைப்பிலிருந்து, அதன் வெளிப்புற வடிவமைப்பு வரை வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் இருந்தால்தான் மார்க்கெட்டில் இடம் பிடிக்க முடியும்.

நம் நாட்டிலேயே டிசைனிங் கல்வியைக் கற்பதற்கான முக்கியக் கல்வி நிறுவனம் 'நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன்'. இது அகமதாபாத்தில் உள்ளது. மத்திய வணிக மற்றும் தொழில் துறையின் உதவியுடன் இயங்கி வரும் கல்வி நிறுவனம் இது. இன்டஸ்ட்ரியல் டிசைன் கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது இது. ஐரோப்பா, ஆசிய நாடுகளில் 'டாப் 25' படிப்புகளில் ஒன்றாக நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிசைன் படிப்பு குறிப்பிடப் பட்டுள்ளது.

கம்யுனிகேஷன் டிசைன், கிராஃபிக் டிசைன், அனிமேஷன் அண்ட் பிலிம் லைன், ஃபிலிம் அண்ட் வீடியோ கம்யூனிகேஷன் எக்ஸிபிஷன் டிசைன், இண்டஸ்ட்ரியல் டிசைன், டெக்ஸ்டைல் அண்ட் அப்பேரல் டிசைன், டெக்ஸ்டைல் டிசைன் போன்ற படிப்புகளைப் படிக்கலாம். இங்கு நேரடிப் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதற்கேற்ற நவீன ஸ்டுடியோ வசதிகள் இங்கு உள்ளன. இதன் கிளைகள் காந்திநகர் (குஜராத்) மற்றும் பெங்களூருவில் உள்ளன.

ப்ளஸ் டூ படித்த மாணவர்கள் இக்கல்வி நிறுவனத்தில் எழுத்துத் தேர்வு **NEED - National Entrance Examination for Design Studies** மற்றும் நேர்முகத் தேர்வு மூலம்

சேர்க்கப்படுகிறார்கள். இத்தேர்வு குறித்த அறிவிப்பு அக்டோபரிலிருந்து டிசம்பருக்குள் வெளியிடப்படும். தென் மாநிலங்களில் சென்னை, பெங்களூரு ஆகிய நகரங்களில் இந்நுழைவுத் தேர்வை எழுதலாம். இக்கல்வி நிறுவனத்திலேயே இரண்டு ஆண்டு போஸ்ட்கிராஜுவேட் டிப்ளமோ படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன. விவரங்களுக்கு : www.nid.edu.

மும்பையில் உள்ள ஐ.ஐ.டி.–யில் இண்டஸ்ட்ரியல் டிஸைனர் சென்டர் உள்ளது. டெல்லியில் 'ஸ்கூல் ஆஃப் ப்ளானிங் அண்ட் ஆர்க்கிடெக்சர்' கல்வி நிறுவனத்தில், டிஸைனிங் தொடர்பான முதுநிலைப் பட்டப் படிப்பு படிக்கலாம். சிவில் இன்ஜினியரிங் இளநிலைப் பட்டம் பெற்ற மாணவர்கள் 'டிஸைன் அண்ட் கன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் கான்க்ரீட் ஸ்ட்ரக்சர்ஸ், 'கம்ப்யூட்டர் எய்டு டிஸைன் ஆஃப் கான்க்ரீட் ஸ்டரக்சர்ஸ்' ஆகிய துறைகளில் படிப்பதற்கான வாய்ப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வழங்குகிறது. அகமதாபாத்தில் உள்ள 'சென்டர் ஃபார் என்விரான்மென்ட்டல் பிளானிங் டெக்னாலஜி' கல்வி நிறுவனத்தில், 'ஸ்கூல் ஆஃப் இன்ட்டீரியர் டிஸைன்' ஐந்து ஆண்டு படிப்பு படிக்கலாம். ப்ளஸ் டூ படித்த மாணவர்கள் இப்படிப்பில் சேரலாம்.

நுண்கலைக் கல்லூரிகளிலும் டிஸைன் தொடர்பான படிப்புகள் உள்ளன. 'கேட்' எனப்படும் 'கம்ப்யூட்டர் எய்டட் டிஸைன்', 'கேம்' எனப்படும் 'கம்ப்யூட்டர் எய்டட் மேனுஃபாக்சரிங்' துறைகளில் படிப்புகளைக் கற்றுத் தரவும். பல கல்வி நிறுவனங்கள் உள்ளன. கிராஃபிக் டிஸைன் உள்பட தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பல்வேறு டிஸைனிங் படிப்புகளும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

**வேலைவாய்ப்பு**

அனைத்து முக்கிய உற்பத்தித் தொழில் நிறுவனங்களிலும் டிஸைனர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி. பொருள், தயாரிப்பு நிறுவனங்களிலும், டெக்ஸ்டைல் டிஸைனிங் கற்றவர்கள் ஜவுளி நிறுவனங்களிலும், கிராஃபிக் டிஸைனிங் பயின்றவர்கள் விளம்பர நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு பெறலாம். தொழில் உற்பத்தி நிறுவனங்கள், ஆட்டோ மொபைல் நிறுவனங்கள், மேனுஃபேக்சரிங் நிறுவனங்கள், நவீன ஃபர்னிச்சர் தொழில் நிறுவனங்களில், 'இண்டஸ்ட்ரியல் டிஸைனிங்' படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். எனவே, எந்தத் துறையில் டிஸைனிங் படிப்பைப் படிக்கிறோமோ, அந்தத் துறையில் வேலைவாய்ப்பைத் தேட வேண்டும்.

'நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிஸைன்' போன்ற கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்கள் வேலை வாய்ப்பு பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. கேம்பஸ் இண்டர்வியூ மூலமே பலருக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைத்துவிடுகிறது. திறமையைப் பொறுத்தும் சேரும் நிறுவனங்களைப் பொறுத்தும் கைநிறையச் சம்பாதிக்கலாம். படைப்பாகத் திறன், புதுமையான சிந்தனையோட்டம் உள்ள இளைஞர்களை இரு கரம் நீட்டி அழைக்கிறது டிஸைனிங் துறை.

'நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டிஸை'னில் சேர்ந்து படிக்க ஏறக்குறைய ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் கட்டணம் இருக்கும். மற்ற கல்வி நிறுவனங்களைப் பொறுத்தும், படிப்புக் காலத்தைப் பொறுத்தும் கட்டணம் வேறுபடும்!

***

## 60. எம்.பி.ஏ./எம்.சி.ஏ.

நம் நாட்டில் மேலாண்மை (எம். பி. ஏ.) படித்த இளைஞர்களின் தேவை அதிகரித்து வருகிறது. பன்னாட்டு நிறுவனங்களும் ஏன் உள்நாட்டு நிறுவனங்கள்கூட தற்போது

தங்களது நிறுவனங்களை சிறப்பாக நடத்த மேலாண்மை படித்தவர்களையே நாடுகின்றனர். திட்டமிடுதல், செயல்படுத்துதல், ஊழியர்களைத் தேர்வு செய்தல், நிறுவனத்தை திறமையாக நடத்திச் செல்ல ஆலோசனை வழங்குதல், ஊழியர்களிடம் வேலை வாங்குதல் என பல்வேறு பணிகளை மேலாளர்கள் செய்கின்றனர், இவர்கள் சிறந்த மேலாளர்கள்/ நிர்வாகிகளாக விளங்க மேலாண்மை படிப்பு தேவைப்படுகிறது.

**1. ஐஐஎம்–கேட் (CAT) தேர்வு :**

எம்.பி.ஏ. படிப்பை அளிக்க இந்தியாவிலேயே மிகச் சிறந்த நிறுவனங்களாக விளங்குபவை ஐ.ஐ.எம். எனப்படும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் கல்வி நிறுவனங்கள். இதுவரை தமிழநாட்டில் ஐ.ஐ.எம். நிறுவனமே இருந்ததில்லை. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஐ.ஐ.எம்.களில் ஒன்று திருச்சியில் அமைந்துள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியது. இவற்றில் சேர்வதற்கு ஏதாவதொரு பாடத்தில் இளநிலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். இளநிலை படிப்பில் இறுதி ஆண்டில் படிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். பி.ஏ. பி.எஸ்.ஸி. பி.காம். பி.பி.ஏ. படிப்பை முடித்தோரும் பொறியியல் கல்வி படித்தோரும் எம்.பி.ஏ. படிக்கலாம். குறிப்பிட்டுச் சொல்வதென்றால் எந்த ஒரு படிப்பிலும் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள் எம்.பி.ஏ. படிக்கலாம்.

இங்கு சேர்வதற்கான நுழைவுத்தேர்வு மிகவும் கடினமானது. இதை காமன் அட்மிஷன் டெஸ்ட் (CAT) என்று அழைக்கிறார்கள். இத்தேர்வில் உயர்ந்த ரேங்கில் வருகிறவர்கள், குழு விவாதம் மற்றும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். இத்தேர்வை எழுத நமது நாட்டில் லட்சக்கணக்கான பேர் மனுச்செய்கிறார்கள். மொத்த இடங்களில் 22.5 சதவீதம் தாழ்த்தப்பட்ட பழங்குடி இன மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2. டான்செட் (TANCET) : தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் எம்.பி.ஏ. படிப்பில் சேர நுழைவுத் தேர்வான டான்செட் (TANCET) எழுதி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இத்தேர்வு அண்ணா பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகிறது.

கல்வித்தகுதி : மூன்று வருட பட்டப்படிப்பில், குறைந்தது 50% மார்க்குடன் தேர்ச்சி, இடஒதுக்கீடு, கேட்டகிரி மாணவர்களுக்கு குறைந்தது 45% மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

3. சிமேட் (CMAT) ஆல் இண்டியா கௌன்சில் பார் டெக்னிகல் எஜுகேஷன், புதுதில்லி நடத்தும் சிமேட் அந்நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேலாண்மை கல்வி நிறுவனங்களில் எம்.பி.ஏ. படிப்பில் சேர்க்க நுழைவுத் தேர்வாகும். இத்தேர்வு ஆன்லைனில் எழுத வேண்டும். தேர்வுகள் தமிழ்நாட்டில் சென்னை, திருச்சி, மதுரை, கோவையில் நடத்தப்படும் இத்தேர்வு ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும். கல்வித்தகுதி : ஏதாவதொரு படிப்பில் பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு : **www.aicte.cmat.in. Phone: 022-40679404.**

4. ஜேமெட் **(JMET) :** எம்.பி.ஏ. படிப்பிற்கு உள்ள வரவேற்பைக் கண்டு சமீப காலத்தில் நமது நாட்டில் ஐ.ஐ.டி. நிறுவனங்களும் எம்.பி.ஏ. படிப்பை ஆரம்பித்துள்ளன. இதில் சேர **JMET** என்ற நுழைவுத் தேர்வு எழுத வேண்டும். விவரங்களுக்கு : **http:// www.mba.iitm.ac.in.**

**எம்.சி.ஏ.**

கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட படிப்புகளில் முக்கியமானதொன்றாக கருதப்படும் இப்படிப்பு ஓர் முதுகலைப் பட்டப் படிப்பாகும். இப்படிப்பு படித்தவர்களுக்கு சாப்ட்வேர் நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் இப்படிப்பு முழுநேர/தொலைதூரப் படிப்பாக வழங்குகின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம். இப்படிப்பை 3 ஆண்டு தொலைதூரக் கல்வியாக வழங்கி வருகின்றன. பி.சி.ஏ. எனப்படும் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ் படிப்பை இளங்கலையில் படித்தவர்களுக்கு முதுநிலை பட்டம் பெற நல்ல வாய்ப்பாக உள்ளது. சாப்ட்வேர் நிறுவனங்கள் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன. அவ்வாறு தேர்வு செய்யப்படுபவர்களில் எம்.சி.ஏ. படித்தவர்களுக்கு முக்கியப் பங்குண்டு.

**கல்வித்தகுதி** : ஏதாவதொரு இளங்கலை பட்டப்படிப்பு. இவர்கள் +2 படிப்பில் கணிதம் பயின்றிருக்க வேண்டும். அல்லது ஏதாவதொரு இளங்கலை பட்டப்படிப்பு, டிப்ளமா படிப்பு. இவர்கள் டிப்ளமா படிப்பில் கணிதம் பயின்றிருக்க வேண்டும். அல்லது ஏதாவதொரு 3 ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு இவர்கள் பட்டப்படிப்பில் கணிதம் அல்லது புள்ளியியல் படித்திருக்க வேண்டும். முதுகலைப் படிப்புக்கான நுழைவுத் தேர்வாகிய டான்செட் **(TANCET)** ஸ்கோர் அவசியம்.

***

## 61. சுற்றுலாத்துறைப் படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு

சுற்றுலாத்துறை என்பது மனதை மகிழ்விப்பதற்கு மட்டுமில்லாமல் வர்த்தகரீதியிலும் இப்பணியை மேற்கொள்பவர்களுக்கு பொருளை ஈட்டித் தரும் விதத்தில் பரந்து விரிந்த உலகளாவிய ஒரு பெரிய துறையாக வளர்ந்துள்ளது. இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசுகள் சுற்றுலாத்துறைப் பணிகளை நெறிப்படுத்தி ஊக்கப்படுத்துவதால் அபரிதமாக வளர்ச்சி அடைந்த துறையாக மலர்ந்துள்ளது.

**வேலைவாய்ப்பு :**

வீட்டைவிட்டு தொழில் நிமித்தம் அல்லது சுற்றுலாவிற்கு பயணத்தை மேற்கொள்பவர்களுக்கு உணவு, தங்கும் இடத்தை ஏற்பாடு செய்து கொடுத்தல், போக்குவரத்துக்கான பயணச்சீட்டை உறுதி செய்து கொடுத்தல், பயணத்திட்டத்தை வகுத்து சுற்றுலா மேற்கொள்ள உதவுதல் போன்ற அனைத்துப் பணிகளிலும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்டு செயல்படும் சேவைப்பணியாகவே இப்பணி விளங்குகின்றது. விமான நிலையம், ரெயில்வே, தரைவழி மற்றும் கப்பல் போக்குவரத்து பணியாளர்கள், பாஸ்போர்ட் **(Passport)** மற்றும் விசா வழங்கும் பணி மேற்கொள்பவர், உணவு மேலாண்மை பணியாளர்கள், சுற்றுலா ஏஜெண்டுகள் என்று பல்வேறு பணிப்பிரிவுகள் கொண்டது.

**டிராவல் ஏஜெண்டு :** இவர்கள் சுற்றுலா இடத்தை இனம்கண்டு சந்தைப்படுத்தும் பணியை மேற்கொள்கின்றனர். சுற்றுலாப் பயணிகளுக்கு தனியாகவோ அல்லது குழுக்களாகவோ வரும் பயணிகளுக்கு உணவு, தங்கும் இடம், பயணச்சீட்டு முன்பதிவு, வாகனம் ஏற்பாடு செய்தல் என்று அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைந்து

மேற்கொள்கின்றனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா மற்றும் சிறப்புக் கூட்டங்களை நடத்த முன் ஏற்பாடு செய்யும் பணிகளை மேற்கொள்கின்றனர்.

### டிராவல் மேலாளர் (Travel Manager)

இவர்கள் சுற்றுலா மேலாண்மைப் பணியை மேற்கொள்கின்றனர். புது சுற்றுலா இடங்களை தேர்வு செய்தல் மற்றும் வாடிக்கையாளர்கள் விருப்பத்திற்கேற்ற சுற்றுலாத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் இவர்களின் பணியாகும்.

### சந்தைப்படுத்துதல் (Marketing)

விளம்பரம் செய்தல், சுற்றுலாப் பயணிகளை இளங்கண்டு சுற்றுலாத் தகவல்களை அளித்து வாடிக்கையாளரை உருவாக்கும் பணியை மேற்கொள்கின்றனர்.

### சிறப்புச் சுற்றுலா செயல்படுத்துபவர்கள் (Tour Operator)

தொல்பொருள் ஆராய்ச்சி சார்ந்த சுற்றுலா, கோல்ப் விளையாட்டின் அடிப்படையில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தல், வன விலங்குகள் சரணாலயம் மற்றும் வானிலை ஆராய்ச்சி போன்ற சிறப்பு விருப்பம் இருக்கும், சுற்றுலாத் திட்டங்களை சந்தைப்படுத்துவதே இவர்களின் பணியாகும். சாகசங்கள் நிறைந்த **(Adventure Tourism)** சுற்றுலா, மலைப்பாங்கான இடத்தில் சுற்றுலா, கடற்கரைச் சார்ந்த சுற்றுலா இடங்களை பார்வையிடுதல், மலையேற்றம், அருவியில் படகுச் சவாரி, தண்ணீரில் விளையாடும் நிகழ்ச்சிகளை **(Water Sport)** ஏற்பாடு செய்தல், யாத்திரைகள் ஏற்பாடு செய்தல் என்று இந்தத் துறை விரிவடைந்து வருகின்றது.

### டிக்கெட்டிங்

வாடிக்கையாளர்களுக்கு டிக்கெட் முன்பதிவு செய்து கொடுத்தல், உள்நாட்டு வெளிநாட்டு பயணத்திட்டத்திற்கு முன்பதிவு ஏற்பாடுகள், விசா, பாஸ்போர்ட் பெற உதவுதல், தகவல் அளிக்கும் பணி என்று பல்வேறு பணிகளை மேற்கொள்கின்றனர்.

### சுற்றுலா வழிகாட்டிகள்

முறையாக வழிகாட்டுதல் பயிற்சி பெற்றவர்கள் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் சென்ற சுற்றுலா இடங்களின் சிறப்பம்சங்கள், கலாச்சாரம், முக்கியத்துவத்தை பயணிகளுடன் சென்று விளங்கும் பணியாகும். இவர்கள் சுற்றுலா இடத்தைப் பற்றி அனைத்துத் தகவல்களையும் அறிந்து வைத்து பயணிகளுக்குப் புரியும் விதத்தில் உரிய மொழியை தேர்ந்தெடுத்து வழிகாட்டுதல் பணியை மேற்கொள்வர்.

### சுற்றுலாப் படிப்பு மற்றும் பயிற்சி வழங்கும் நிறுவங்கள்

1. இந்திய சுற்றுலா மற்றும் பயண மேலாண்மை நிறுவனம் **(Indian Institute of Tourism and Travel Management)** புதுடெல்லி, குவாலியர், புவனேஸ்வர், கோவா, நெல்லூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றது.
2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் அண்ட் ஹாஸ்பிடாலிடி மேனேஜ்மென்ட் ஹைதராபாத்.
3. இந்திராகாந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம் மூலம் தொலைதூர கல்வி டிராவல் அண்ட் டூரிசம் நடத்தப்படுகின்றது.
4. இன்டர்நேஷனல் ஏர் டிரான்ஸ்போர்ட் அசோசியேஷன் **(IATA)** மற்றும் யுனிவர்சல் பெடரேஷன் ஆப் டிராவல் ஏஜெண்ட் இணைந்து சர்வதேச அளவில் டிராவல் ஏஜெண்ட் **(UFTAA)** பயிற்சி அளிக்கிறது.

5. ட்ரேட் விங்ஸ் **(Trade Wings)** புதுடெல்லி – 110 029.

6. மினிஸ்ட்ரி ஆப் டூரிசம் மற்றும் டெல்லி டூரிசம் வழங்கும் பயிற்சி மற்றும் படிப்புகள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகங்களில் டிப்ளமோ, பட்டப்படிப்பு, முதுநிலைப் பட்டப்படிப்பு என்ற நிலையில் கற்பிக்கப்படுகின்றது. தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகத்தில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. டூரிஸம் & ட்ராவல் படிப்பு உள்ளது.

***

## 62. கம்பெனி செக்ரட்டரி

ஒரு நிறுவனத்தில், கம்பெனி செகரட்டரியின் பங்கு மிக முக்கியமானதாகும். கம்பெனிகள் சட்டம் மற்றும் பங்குகள் பரிவர்த்தனை தொடர்பான சட்டங்களில் நிபுணராக விளங்குகிறார். ஒரு நிறுவனம் தொடங்கப்படுவது முதல் கம்பெனி செயலரின் பணி ஆரம்பமாகிறது. ஒரு நிறுவனத்தின் சட்டம், நிதி, கணக்கு, பணியாளர், நிர்வாகம் மற்றும் பொது நிர்வாகம் போன்ற பல்வேறு துறைகளில் தொடர்பு கொண்டு நிறுவனத்தை மிகச் சிறப்பாக நடத்துகிறார். மேலும், இயக்குனர்கள் குழு பங்குதார்கள், அரசு, பொதுமக்கள் மற்றும் கம்பெனி ஊழியர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கும், கம்பெனிக்கும் ஒரு பாலமாக இருந்து செயல்படுகிறார்.

கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம் **(Registrar of Companies)** செபி **(SEBI)**, ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா **(Reserve Bank of India)** போன்ற அரசு அமைப்புகளின் வரைமுறைகளை கம்பெனிகள் சரியாக பின்பற்றுகின்றனவா என்பதைக் கண்காணித்து நடைமுறைப்படுத்தும் முக்கியமான பணியையும் மேற்கொள்கிறார். இதற்காக பல்வேறு சட்ட விதிமுறைகள், அதன் நுணுக்கங்களைப் பற்றி இயக்குனர் குழுவுக்கு அறிவுறுத்துவது கம்பெனி செகரட்டரியின் பணிகளில் ஒன்று.

### கம்பெனி செரட்டரி ஆவது எப்படி?

அடிப்படையில் கம்பெனி செகரட்டரி கோர்ஸ் அஞ்சல் வழி மூலம் கற்பிக்கப்படுகிறது. இக்கல்வியை, தி இன்ஸ்டிட்யூட் ஆப் கம்பெனி செரட்டரிஸ் ஆஃப் இந்தியா **The Institute of Company Secretaries of India)** நடத்துகிறது. இது, பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட **Statuary Body** ஆகும். மத்திய அரசின் கம்பெனி விவகாரத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. இதன் தலைமை அலுவலகம் **(Head Quarters)** புதுடெல்லியில் உள்ளது. சென்னை, மும்பை, கொல்கத்தா மற்றும் புதுடெல்லி ஆகிய 4 நகரங்களில் மண்டல அலுவலகங்களும் **(Regional Office)** 70 கிளை அலுவலகங்களும் **(Chapter Office)** இந்தியா முழுவதிலும் இயங்கி வருகின்றன. தென்னிந்திய மண்டல அலுவலகம் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகின்றது.

### கல்வித்தகுதி :

+2 முடித்தவர்கள் பவுண்டேசன் கோர்ஸில் சேரலாம். +2வில் எந்த குரூப் படித்தவர்களும் இதில் சேரலாம்.

பவுண்டேசன் கோர்ஸில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் டிகிரி கோர்ஸில் எந்த குரூப் படித்தவர்களும் நேரிடையாக இண்டர்மீடியட் கோர்ஸில் சேரலாம். இதன் பின் இறுதித் தேர்வு **(Final Course)** எழுத வேண்டும்.

இறுதித்தேர்வு முடிந்த பின், 16 மாத மேலாண்மை பயிற்சி **(ManagementTraining)** முடிக்க வேண்டும். இதற்குப் பின் இன்ஸ்ட்டியூட்டில் பதிவு செய்தால் **ACS** கோர்ஸ் **(Associate Company Secretary)** முடித்ததற்கான **Professional Degree** வழங்கப்படும்.

**வேலைவாய்ப்புகள் :**

ரூ. 5 கோடியும், அதற்கு மேலும் செலுத்தப்பட்ட மூலதனம் உள்ள கம்பெனிகள் கட்டாயம் ஒரு கம்பெனி செகரட்டரியை நியமிக்க வேண்டும் என்பது கம்பெனிகள் சட்ட விதி. அப்பதவிக்கு இந்த கோர்ஸ் படித்தவர்களை மட்டுமே நியமிக்க வேண்டும்.

ரூ. 2 கோடிக்கு கீழ் உள்ள கம்பெனிகள் இண்டர்மீடியட் தேர்ச்சி பெற்ற மாணவர்களை உதவி கம்பெனி கெரட்டரியாக பணியில் அமர்த்தலாம்.

3. பங்குச் சந்தையில் தங்கள் நிறுவனங்களைப் பதிவு செய்துள்ள அனைத்துக் கம்பனிகளும் கம்பெனி செகரட்டரியை நியமனம் செய்ய வேண்டும்.

4. இக்கோர்ஸ் முடித்தவர்களை மத்திய அரசின் உயர் பதவிக்கு கல்வி அமைச்சகம் அங்கீகாரம் அளித்துள்ளது.

5. **CS** கோர்ஸ் முடித்தவர்கள் நிர்வாக இயக்குனராக, முழு நேர இயக்குனராக, கம்பெனியின் தலைவராக, துணைத் தலைவராக உயர் பதவியில் இருக்கிறார்கள்.

6. **CS** கோர்ஸ் முடித்தவர்கள் கம்பெனியில் முழு நேர அதிகாரியாக பணிபுரியலாம். அல்லது தனியாகவும் செய்யலாம்.

கம்பெனிகள் ஆரம்பித்தல், கம்பெனிகள் பல்வேறு துறைகளில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களை சமர்ப்பித்தல், கம்பெனி நீதிமன்றங்களில் ஆஜராகுதல் போன்ற பல்வேறு பணிகளில் ஈடுபடுகிறார். மேலும் கம்பெனிகள் சட்டம், வருமான வரிச் சட்டம் சொத்து வரிச்சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், ஏகபோக வாணிபத் தடுப்புச் சட்டம், அன்னியச் செலவாணி நிர்வாகச் சட்டம், சுங்கத்துறை, கலால் வரித் துறை மற்றும் அறிவுசார் சொத்துரிமை **(Intellectural Property Rights)** போன்ற பல்வேறு சட்டத்தின் **Practice** கீழ் செய்யலாம்.

**சிறப்பம்சங்கள் :**

1. ஆண்டு முழுவதும் எந்த நாளிலும் சேரலாம்.
2. தபால் வழிக் கல்வி கட்டாயமானது. மண்டல அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் நடக்கும் **Oral Coaching Class**–ல் சேர்ந்து படிக்கலாம்.
3. ஒரு ஆண்டுக்கு 2 முறை தேர்வுகள் – ஜுன் மற்றும் டிசகம்பர்.
4. மார்ச் 31–க்குள் சேருபவர்கள் அந்த ஆண்டு டிசம்பர் மாதம் தேர்வு எழுதலாம். செப்டம்பர் 30–க்குள் சேருபவர்கள் அடுத்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெறும் **Foundation Course** தேர்வு எழுதலாம்.
5. பிப்ரவரி 28–க்குள் இன்டர்மீடியட்டில் சேருபவர்கள் அதே ஆண்டு டிசம்பரில் 2 குரூப்புகளும், மே–31க்குள் சேருபவர்கள் அதே ஆண்டு டிசம்பரில் ஒரு குரூப் மட்டும் எழுதலாம். ஆகஸ்டு 31–க்குள் இண்டர்மீடியட்டில் சேருபவர்கள் அடுத்த ஆண்டு ஜுனில் 2 குரூப்புகளும், நவம்பர் 30–க்குள் சேருபவர்கள் அடுத்த ஆண்டு ஜுனில், ஒரு குரூப் தேர்வும் எழுதலாம்.
6. **SC/ST** மாணவர்களுக்க பயிற்சிக் கட்டணத்தில் **(Course Fess)** 60% சலுகை உண்டு.
7. இக்கோர்ஸில்–சேருபவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

8. சிறந்த முறையில் தேர்வு பெறறவர்களுக்கு பரிசுகள், பதக்கங்கள் மற்றும் உதவித் தொகை வழங்கப்படும்.

இண்டர்மீடியட்/பைனல் தேர்ச்சி பெற் மாணவர்களுக்கு இன்ஸ்ட்டியூட்டில் **Placement Assistance** வசதி செய்து தரப்படுகிறது.

இந்தியாவில் இப்படிப்பு முடித்தவர்கள் குறைவு. ஆனால் வேலைவாய்ப்பு மிக அதிகம். மாணவர்கள் நன்றாகத் திட்டமிட்டு கடினமாக உழைத்தால் அவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு.

தென்னிந்திய மண்டல அலுவலகத்தில் விண்ணப்பப் படிவம் **(Application and Prospectus)** பழைய ஆண்டிற்கான கேள்வி பதில் புத்தகம் மற்றும் இன்ஸ்ட்டிடிட்யூட் வெளியிடும் புத்தகம் கிடைக்கிறது. மாணவர்களின் வசதிக்காக உடனடி பதிவு **(Spot Admission)** செய்யும் வசதி உள்ளது. **Oral Coaching Class** மற்றும் **Library** வசதி உள்ளது. மேலும் மாணவர்களுக்காக அவர்களின் பாடத்திட்ட அடிப்படையில் மாதாந்திர கூட்டம் **(Student's meeting)** நடத்தப்படுகிறது.

இந்தக் கோர்ஸ் பற்றிய முழு விவரங்களை இன்ஸ்ட்டிட்யூட் வெளியிடும் தகவல் அறிக்கையில் தெரிந்து கொள்ளலாம்.

விலை : பவுண்டேசன் கோர்ஸ் ரூ. 200 தபாலில் பெற ரூ. 250

இண்டர்மீடியட் கோர்ஸ் : ரூ, 300 தபாலில் பெற ரூ. 350.

தபால் மூலம் பெறுவதற்கு **SIRC OF ICSI Payable at Chennai** என்ற முகவரிக்கு டிராப்ட் எடுத்து அனுப்பலாம்.

| படிப்பின் நிலைகள் | கட்டணம் |
|---|---|
| 1. அடிப்படை நிலை **(Foundation Programme) - 4 papers** | **Rs.**4500/– |
| 2. நிர்வாக நிலை **- 6 Papers (Executive Programme)** (வணிகவியல் பட்டதாரிகளுக்கு) **Rs.** 10,000/– (வணிகவியல் தவிர பிற பட்டதாரிகளுக்கு) | **Rs.**12500/– |
| 3. தொழில்முறை நிலை **- 8 Papers (Professional Programme)** | **Rs.**12000/– |

**மேலும் விவரங்களுக்கு** : **The Institute of Company Secretaries of India, Southern India Regional Office, New No. 9, Wheat Crofts Road, Nungambakkam, Chennai-600 034. Ph : 044 - 2827 9898/ Email : siro@icsi.edu. Website : www.icsi.edu.**

***

### 63. சார்ட்டர்டு அக்கௌண்டன்ஸ் (CA) படிப்பு

இன்றைக்கு இந்தியாவிலேயே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., டாக்டர் படிப்புகளுக்க நிகராக பெரிதும் மதிக்கப்படுவது சி.ஏ. படிப்பு ஆகும். சார்ட்டர்டு அக்கவுண்டன்சி கோர்ஸ் ஆனது மத்திய அரசின் சார்ட்டர்டு அக்கவுன்டன்ஸ் சட்டம் 1949–ன் படி இந்திய சார்ட்டர்டு அக்கவுன்டன்ட் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தால் நடத்தப்படுகிறது. வணிகவியல் துறையில் படித்து முடித்தவுடனே கைநிறைய சம்பளத்துடன் ஒரு உயர்வான வேலை கிடைக்கும் என்றால் அதற்கு சி.ஏ. படிப்பால் மட்டுமே முடியும். அத்துடன் இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் சி.ஏ. படித்தவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் உள்ளது.

புதுடெல்லியை தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இந்நிறுவனத்தின் பிராந்திய அலுவலகம் தென்னிந்தியாவிலேயே சென்னை நகரத்தில் நுங்கம்பாக்கம்

3. **Spanish : New Acro-Polish Cultural Oganization. #4, second Main Road, Kottur Garden, Kotturpuram, Chennai - 85. Ph. 2447 2162**
4. **Russian : Russian Cultural Centre, #74, Kathuri Ranga Road, Alwarpet, Chennai - 600 018. Ph : 2499 9950.**
5. **Japanese : Indo Japan Chamber of Commerce and Industry, #21, K.B. Dean Road, Teynampert, Chennai - 18. Ph : 2435 2010/2435 4779.**

**வெளிநாடுகளில் வேலைக்குச் செல்ல**

வெளிநாடுகளில் வேலைக்குச் செல்ல வேண்டி ஏஜெண்டுகளிடம் பணம் கொடுத்து ஏமாற்றம் அடைவதைத் தடுக்க தமிழக அரசு அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் ஒன்றைத் தொடங்கி நடத்தி வருகிறது. வெளிநாட்டு வேலை தேடும் தகுதியான நபர்களை தேர்ந்து எடுத்து அவர்களுக்கு வேலை தேடித் தருவதுதான் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம். வேலைக்காக இந்த நிறுவனத்தில் தங்கள் பெயரை பதிவு செய்பவர்கள் பாஸ்போர்ட் வைத்து இருக்க வேண்டும். தான் பார்க்கும் வேலையில் குறைந்தது 2 ஆண்டுகள் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை பதிவை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். முகவரி :

**Overseas Manpower Corporation Ltd., TNHB Commercial Shopping Complex, 1st Floor, 48, Dr. Muthulakshmi Salai, L.B. Road, Adayar, Chennai - 600 020. Phone : 044 - 2446 4268/2446 4269/2446 3112. Website : www.oncmanpower.com**

***

### 85. வங்கிகள் வழங்கும் கல்விக் கடன்

திறமையான மாணவர்கள் தங்கள் கல்வியை உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் தொடர ஏதுவாக இத்திட்டம் தொடங்கப்பட்டது. முதுநிலை பட்டப்படிப்பு மற்றும் தொழில்கல்வி பயில கல்விக் கடன் வழங்கப்படுகிறது. கல்விக் கட்டணத் தொகை கடனாக வழங்கப்படும்பொழுது, மாணவர்கள் மற்றும் பெற்றோரின் கடன் திருப்பிச் செலுத்தும் திறனையும் பொறுத்து கடன் தொகை நிர்ணயிக்கப்படும். உள்நாட்டில் கல்வி பயில அதிகபட்சமாக ரூ. 10 லட்சமும், வெளிநாட்டில் கல்வி பயில அதிகபட்சமாக ரூ. 20 லட்சமும் கடன் வழங்கப்படுகிறது. அதிகபட்சத் தொகை சில நிறுவன படிப்புகளுக்கு கூடுதலாக வழங்கப்படுகிறது.

ரூ. 7.5 லட்சம் வரையிலான கடனுக்கு மூன்றாம் நபர் ஜாமீனோ விளிம்புத் தொகையோ செலுத்த தேவையில்லை. கடன் தொகை 7.5 லட்சத்திற்கு மேற்படும்பொழுது உள்நாட்டில் படிப்பதற்கான கடனுக்க 5% மற்றும் வெளிநாட்டில் கல்வி பயில 15% விளிம்புத் தொகையாக பயனாளி செலுத்த வேண்டும்.

வட்டி விகிதம்

கடன் தொகை ரூ. 7.5 லட்சம் வரையில் 11.10% வட்டியும், 7.5 லட்சத்திற்கு மேற்பட்டால் 10,75% வட்டியும் வசூலிக்கப்படும். வங்கிக்கு வங்கி வட்டி விகிதம் மாறலாம்.

சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்

1. இறுதியாக எழுதி தேர்ச்சி பெற்ற தேர்வின் மதிப்பெண் சான்றிதழ.
2. கல்லூரியில் சேர்ந்ததற்கான அத்தாட்சிக் கடிதம் மற்றும் கல்விக் கட்டண விவரம்.
3. கடன் பெறும் மாணவன்/பெற்றோர் மற்றும் பொறுப்புறுதியாளர்களின் இன்றைய பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் இரண்டு.
4. சம்பளதாரர்களின் மாதச் சம்பளம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுவதாக இருந்தால் கடந்த ஆறு மாதத்திற்கான வங்கிக் கணக்குப் பட்டியல்.
5. வீட்டு விலாசத்திற்கான அத்தாட்சிப் படிவம்.
6. பெற்றோர்களின் சொத்து மற்றும் கடன் பற்றிய விவரம்.
7. மாதாந்திர சம்பளம் பெறுபவராக இருப்பின் அனைத்து பிடித்தங்களடங்கிய சம்பளச் சான்றிதழ் மற்றும் கடந்த 5 ஆண்டுகளில் செய்த வேலை விவரம்.
8. சுய தொழில் செய்பவராக இருந்தால், வருமானத்திற்கான அத்தாட்சி.
9. வருமான வரி செலுத்தி வருமான வரி அலுவலகத்திற்கு சமர்ப்பித்த வருமான வரிப் படிவம்.

கல்விக்கடன்கள் பற்றி சாதாரணமாக எழும் சந்தேகங்களும் அவற்றிற்கான பதில்களும் :

கல்விக் கடன் பெறுவதற்கு என்ன தகுதி வேண்டும்?

ஒரு படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்சத் தகுதி பெற்ற யார் வேண்டுமானாலும் கல்விக் கடன் பெற முடியும். எனினும், கடன் பெறுபவர் படித்து முடித்த பின்பு அந்தப் படிப்பின் மூலம் வேலைவாய்ப்பு பெறுவதற்கு உள்ள வாய்ப்புகளையும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பொதுவாக, தகுதியுள்ள கடன் தேவைப்படும் அனைவருக்கும் கல்விக் கடன் அளிக்க வேண்டும் (meritorious and deserving candidates) என்பதே மத்திய அரசின் நோக்கம். அதாவது, நல்ல மதிப்பெண் பெற்று திறமையான ஒரு மாணவர், பணம் இல்லை என்ற ஒரே காரணத்துக்காகத் தனது படிப்பைக் கைவிட வேண்டிய நிலை இருக்கக்கூடாது என்பதுதான் இந்தக் கடன் கொள்கையின் நோக்கம்.

அதேநேரம், கடன் பெறுபவர், படித்து முடித்த பின்பு, அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் தகுதியை ஓராண்டுக்குள் பெற வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில், கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தொடங்க வேண்டும்.

கடன் வேண்டி வங்கிக்கு வரும் முன்னர்,மாணவர்களும் பெற்றோரும் மிக முக்கியமாக ஒரு விஷயத்தைக் கவனத்தில் கொள் வேண்டும். தான் படிக்கப் போகும் கல்வி நிறுவனம், அந்தப் படிப்பு தொடர்பான உயர் அமைப்பின் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். உதாரணமாக, பி.இ. பொறியியல் படிக்க விரும்பும் மாணவர், தான் படிக்கப்போகும் கல்லூரி ஏ.ஐ.சி.டி.இ. அமைப்பின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறதா என்பதையும் தான் தேர்ந்தெடுத்துள்ள பாடத்துக்கும் அங்கீகாரம் இருக்கிறதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். உரிய அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களிலோ அல்லது பாடத்திட்டத்திலே சேர்ந்தால் வங்கிகளில் கடன் கிடைக்காது.

நிர்வாக ஒதுக்கீட்டு மாணவர்களுக்கு கல்விக்கடன் கிடைக்குமா?

இதுவரையில் அரசு ஒதுக்கீட்டு மாணவர்களுக்கு மட்டும் கடன் வழங்கப்பட்டது. தற்போது நிர்வாக ஒதுக்கீடு மாணவர்களுக்கும் கல்விக்கடன் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

சில மாணவர்கள் முதலில் ஒரு பிரிவில் சேர்ந்துவிட்டு, பின்னர் வேறு பாடத்திற்க மாறுகிறார்கள். அவர்களுக்கும் கடன் கிடைக்குமா?

உதாரணமாக, ஒரு நல்ல கல்லூரியில் தான் விருபும் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவில் இடம் கிடைக்கவில்லை என்பதற்காக அதே கல்லூரியில் சிவில் இன்ஜினியரிங் பிரிவில் சேர்க்றிார் என்று வைத்துக் கொள்வோம். பின்னர் அதே கல்லூரியில் மெக்கானிக்கல் பிரிவில் அவருக்கு ஒருவேளைஇடம் கிடைக்கலாம். அப்படி பாடப் பிரிவை மாற்றிக் கொண்டாலும், கடன் வசதி உண்டு.

**கடன் வேண்டுமானால் யாரை அணுக வேண்டும்?**

கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கும் மாணவரோ அல்லது அவரது தந்தையோ, தான் கணக்கு வைத்திருக்கும் வங்கிக் கிளை மேலாளரை அணுக வேண்டும். அவ்வாறு கணக்கு ஏதும் இல்லாதவர்கள் தங்கள் இருப்பிடத்துக்கு அருகில் உள்ள எந்தவொரு பொதுத்துறை வங்கியையம் அணுகலாம்.

கல்விக் கடன் வேண்டி வங்கிக்குச் செல்பவர்கள், என்னென்ன விவரங்களுடன் செல்ல வேண்டும்?

+2 மதிப்பெண் பட்டியல், நுழைவுத் தேர்வு மதிப்பெண் பட்டியல், கல்லூரியில் சேரத் தேர்வு செய்யப்பட்டதற்கான அட்மிஷன் கடிதம், உதவித் தொகை ஏதும்

கிடைத்திருந்தால் அது தொடர்பான விவரங்கள், படிப்புக்கான மொத்த காலம், படிப்பு தொடங்கும் நாள் உள்ளிட்டவை அடங்கிய கல்வி நிறுவனத்தின் விவரப் புத்தகம் அல்லது கல்லூரியில் இருந்து பெறப்பட்ட அத்தாட்சிக் கடிதம், எவ்வளவு செலவாகும் என்ற விவரம் ஆகியவை வேண்டும்.

அத்துடன், கடனுக்கு விண்ணப்பிக்கும் நபர் மற்றும் அவரது தந்தையின் பாஸ்போர்ட் அளவு போட்டோக்கள் இரண்டு, வங்கி சேமிப்புக் கணக்கின் பணப் பரிமாற்ற விவரங்கள் (குறைந்தது 6 மாதங்களுக்கானது) வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கையெழுத்துச் சான்று அடையாளம் மற்றும் முகவரிக்கான அத்தாட்சிகளும் தேவை.

**இவை மட்டும் போதுமா?**

மாணவரின் தந்தை அல்லது பாதுகாவலர் மாதச் சம்பளதாரராக இருந்தால், கடைசியாக பெற்ற சம்பளத்துக்கான சான்று. கடந்த ஆண்டுகளில் வேலை பார்த்த விவரம் வருமான வரி தாக்கல் செய்ததற்கான சான்று ஆகியவையும் தேவை.

சொந்தமாகத் தொழில் செய்பவராகவோ, வியாபாரிகளாகவோ இருப்பவர்கள், அவர்கள் வருமானத்துக்கான சான்று, வருமான வரி கட்டியதற்கான சான்று (கடைசி இரண்டு ஆண்டுகள்), சொத்து, கடன் குறித்த விவரங்கள் அடங்கிய பட்டியலைக் கொண்டுவர வேண்டும்.

அப்படியானால், கூலி வேலை செய்யும் ஒருவரோ அல்லது நிரந்தரமான வருமானம் இல்லாதவரின் மகனோ மகளோ கடன் பெற முடியாதா?

அவர்களுக்கும் கடன் உண்டு. ரூ. 7.5 லட்சம் வரையிலான கடனுக்கு ஈடு எதுவும் தேவையில்லை என்பதால் அப்படிப்பட்டவர்களும் ரூ. 7.5 லட்சம் வரையில் கடன் பெறலாம். நிரந்தர வருமானம் சான்று ஏதும் இல்லாதவர்கள், அதற்கான ஆதாரத்தைக் காட்ட வேண்டும்.

**உடனடியாக பரிசீலனை செய்யப்படுமா? கடன் கிடைக்க எவ்வளவு காலமாகும்?**

பெறப்பட்ட விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு, அனைத்து விண்ணப்பங்களும் சம்பந்தப்பட்ட வங்கியின் பிராந்திய அல்லது மண்டல அலுவலகத்தில் அதற்கென உள்ள தனிப்பிரிவுக்கு அனுப்பப்படும்.

அங்கு இதற்காக சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் விண்ணப்பங்களைப் பரிசீலிப்பார்கள். ஆவணங்கள் முறையாக இருந்தால் மாணவரின் இருப்பிடத்துக்கு நேரில் சென்ற விண்ணப்பத்தில் உள்ள தகவல்கள் உண்மையானவைதானா என்று சரிபார்ப்பார்கள். அனைத்தும் சரியாக இருக்கும்பட்சத்தில் சில நாள்களிலேயே கடன் கிடைத்துவிடும்.

**கடன் தொகையை மொத்தமாக வழங்குவார்களா?**

மாணவருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள தொகை, பல்வேறு கட்டங்களாக சம்பந்தப்பட்ட கல்லூரியின் பெயருக்கே அனுப்பி வைக்கப்படு. அந்தந்த ஆண்டுக்குரிய தொகை, அந்த ஆண்டின் துவக்கத்தில் வழங்கப்படுகிறது. செலவுத் தொகை ஒவ்வொன்றுக்கும் கல்வி நிறுவனத்திடம் இருந்து ரசீதுகளைப் பெற்று அளிக்க வேண்டும்.

**எந்தெந்த செலவுகளுக்கெல்லாம் கடன் வழங்கப்படுகிறது?**

படிக்கும் மொத்த காலத்துக்குமான கல்விக் கட்டணம், கடன் பெறும் மாணவர் விடுதியில் தங்கிப் படிப்பவர் என்றால் விடுதிக் கட்டணம், புத்தகங்களுக்கான செலவு, கம்ப்யூட்டர் துறை சம்பந்தமான படிப்பு என்றால் கம்ப்யூட்டர் வாங்குவதற்கான செலவு ஆகியவற்றுக்கும் சேர்த்து கடன் அளிக்கப்படுகிறது.

மேலும், இன்டஸ்ட்ரியல் விசிட் என்று சொல்லப்படும் தொழிலக சுற்றுலாவுக்கான கட்டணமும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.விடுதியில் தங்கிப் படிக்காத மாணவருக்கு, அவர் வசிக்கும் இடத்தில் இருந்து கல்லூரிக்குச் சென்ற வர சரியான பேருந்து வசதி இல்லை என்றால், இரு சக்கர வாகனம் வாங்குவதற்கும்கூட கடன் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. கடனுக்கு விண்ணப்பிக்கும்போதே, எந்தெந்த தேவைக்கு எவ்வளவு செலவாகும் என்று படிக்கும் மொத்த காலத்துக்குமான செலவையும் மதிப்பிட்டு, எவ்வளவு கடன் தேவை என்பதை ஆரம்பத்திலேயே முடிவு செய்து கொள்ள வேண்டும். பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டால் அடுத்தடுத்த ஆண்டுகளில் கடன் தொகையை அதிகரிக்க இயலாமல் போய்விடும்.

**கடன் தொகை எப்படி வழங்கப்படுகிறது?**

கடன் தொகை முழுவதும் ஒரே கட்டத்தில் தரப்படுவது இல்லை. கல்லூரியிலிருந்து பெறப்படும் கட்டண விகிதங்களுடன் கூடிய கடிதத்தின் அடிப்படையில் கடனுதவி வழங்கப்படுகிறது.

தவணைத் தொகையைச் செலுத்தத் தெடங்கும் வரையில் கடனுக்கு தனிவட்டி **(simple interest)** கணக்கிடப்படுகிறது. தவணைத் தொகை செலுத்தத் தொடங்கும்க ாலத்தில் இருந்து கூட்டு வட்டி **(Compound Interest)** வசூலிக்கப்படும்.

கடன் பெற்று படித்து முடித்த மாணவர், வேலை கிடைத்தவுடன் தவணைத் தொகையை சமமாகத் தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் தொகையைப் பொறுத்து 10 ஆண்டுகளிலோ அல்லது 15 ஆண்டுகளிலோ திருப்பிச் செலுத்த வேண்டும்.

**படித்து முடித்தவுடன் வேலை கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது?**

மாணவர் படிப்பை முடித்த பின்னர், ஓராண்டு வரை வங்கி காத்திருக்கிறது. அதற்குள் அந்த மாணவர் வேலை தேடிக் கொள்ள வேண்டும். ஓராண்டுக்குள்ளும் வேலை கிடைக்காவிட்டால், வங்கியினால் ஒன்றும் செய்ய இயலாது. வேலை கிடைக்காவிட்டாலும், ஓராண்டு முடிவில் தவணைத் தொகையைச் செலுத்தத் தொடங்க வேண்டும். அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு பெற்றோருக்கும் உண்டு.

வேலை கிடைத்தவுடன் அது குறித்த தகவலை கடன் பெற்ற வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். அதன்பின் கடன் தொகையை திருப்பிச் செலுத்தும் காலம், தவணைத்தொகை எவ்வளவு என்பது மாணவரின் வசதிக்கு ஏற்ப முடிவு செய்யப்படுகிறது.

கடன் பெற்று படித்த மாணவர்கள், கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால்??

அவ்வாறு கடன் பெற்ற மாணவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால், அந்தக் கடனைக் கட்ட வேண்டிய பொறுப்பும் கடமையும் மாணவரின் பெற்றோருக்கு உள்ளது.

வட்டியை ஒழுங்காகக் கட்டுபவர்களுக்கு ஏதேனும் சலுகை அளிக்கப்படுகிறதா?

தவணைத் தொகையைச் செலுத்தத் துவங்கும் முன்பு அவ்வப்போது வட்டித் தொகையைச் செலுத்துவோருக்கு, தவணைத் தொகையைச் செலுத்தத் துவங்கும்போது வட்டியில் சலுகை அளித்து கணக்கிடப்படுகிறது.

கடனுக்கு இணையான சொத்து இருந்தால் கடன் வழங்க வேண்டும் என்ற நிபந்தனை ஏதும் உள்ளதா?

இல்லை. தகுதியுடைய அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கடன் அளிக்க வேண்டும் என்பதே அரசின் திட்டம். ரூ. 7.5 லட்சம் வரையிலான கடன் தொகைக்கு சொத்து ஈடு எதுவும் தேவையில்லை என்பதால், அதுவரையிலான தொகைக்கு இணையான சொத்துகளை ஈடு வைக்க வேண்டும் என்ற நிபந்தனை எதுவுமில்லை.

படிக்கும்போது ஏதாவது ஒரு பாடத்தில் தேர்ச்சி பெறவில்லை என்றால் கடன் தொகை தொடர்ந்து அளிக்கப்படுமா?

பாடங்களில் தேர்ச்சி பெறாதவர்களுக்கு தொடர்ந்து கடன் வழங்குவதில் சிக்கல் ஏற்படும். ஏதாவது குறிப்பிட்ட ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களால் தேர்வு எழுத முடியாமல் போனாலோ அல்லது குறைவான மதிப்பெண் பெற்றாலோ, சிறப்புச் சலுகை அடிப்படையில் அடுத்த ஆண்டுக்கான கடன் தொகை அனுமதிக்கப்படுகிறது.

தகுதியிருந்தும் கடனுதவி அளிக்க சில வங்கிகள் மறுப்பதாகப் பொதுவான குற்றச்சாட்டு உள்ளதே?

அந்தந்தக் கிளைகளில் புகார் பெட்டி உள்ளது. அதில் புகார்க் கடிதத்தைப் போடலாம். அல்லது அந்தந்த வங்கியின் பிராந்திய அல்லது மண்டல அதிகாரிகளுக்குப் புகார் தெரிவிக்கலாம். இது தொடர்பாக எந்த உயர் அதிகாரியைத் தொடர்பு கொள்ள வேண்டும். அவரது முகவரி தொலைபேசி எண் போன்ற விவரங்கள், அனைத்து பொதுத்துறை வங்கிக் கிளைகளிலும் தகவல் பலகையில் வைக்கப்பட்டுள்ளன.

❋❋❋

## 86. சுயதொழில் தொடங்குவது எப்படி?

படிப்பை முடித்துக் கொண்ட எல்லோரும் வேலை வாய்ப்புக்காக அலுவலகங்களை, தொழிற்சாலைகளை நாடிச் செல்ல விரும்புவதில்லை. தாங்களே சுயமாகத் தொழில் செய்ய ஆசைப்படுகிறவர்கள் உண்டு. எவ்வளவுதான் தொல்லைகள் இருந்தாலும் குடும்ப வாழ்வை எப்படி வெற்றிகரமாக நடத்திச் செல்ல நினைக்கிறோமோ அதேபோலத்தான் தொழில் தொடங்கி நடத்துவதும் அமைகிறது. புதிதாக தொழில் தொடங்க நினைப்பவர் முதலில் பயந்தாலும் வலுவான நம்பிக்கையும், உண்மையான உழைப்பும், தேவையான திறமையும் இருந்தால் வெற்றி பெறலாம் என்பது உண்மை.

**சுய தொழில் தொடங்கத் தேவையான அம்சங்கள் :**

1. நாம் விரும்பும் துறையைத் தேர்ந்தெடுத்தல்.
2. தொழிலில் உற்பத்தி செய்யும் பொருளுக்குச் சந்தையில் கிடைக்கும் விற்பனை வாய்ப்புகள்.
3. தொழில் பற்றி முழு விபரங்களையும் தரக்கூடிய திட்ட அறிக்கை,.
4. சிறுதொழில் துறையின் சான்றிதழ் **(SSI Registration)**
5. தொழில் தொடங்கத் தேவையான உள்கட்ட அமைப்பு வசதிகள்
6. தொழிற்சாலையில் வேலை செய்ய ஆட்கள்
7. தொழில் தொடங்க அரசு மற்றும் வங்கிகளில் உதவி
8. அதே தொழில் போட்டி
9. உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனைக்கு எடுத்துச் செல்ல வசதிகள்
10. தரமான பொருள் உற்பத்தி செய்தல்.

தொழில் தொடங்குவோர் ஆலோசனை பெற உதவும் நிறுவனங்கள் :

1. சிறுதொழில் உற்பத்தி மேம்பாட்டுக் கழகம், (சிட்கோ), 4பி, டிபி சாலை, மதுரை–625 010.

2. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 473, அண்ணாசாலை, நந்தனம், சென்னை–600035.

3. சிறுதொழில் சேவை நிலையம், 65/1, ஜி.எஸ்.டி. சாலை, கிண்டி, சென்னை–600 032.

4. தேசிய சிறுதொழில் கார்ப்பரேஷன், 615, அண்ணாசாலை, சென்னை–600 006.

5. தமிழ்நாடு சிறுதொழில் வழிகாட்டி மையம், 19ஏ, ருக்மணி லட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை –600 008.

6. தமிழ்நாடு சிறுதொழில்கள் சங்கம், 10, ஜி.எஸ்.டி. ரோடு, கிண்டி, சென்னை – 600 032.

7. இந்தியச் சிறுதொழில் மேம்பாட்டு வங்கி, டெம்பிள் டவர், நந்தனம், அண்ணாசாலை, சென்னை–600 035.

சிறுதொழில் அல்லது குறுந்தொழில் தொடங்க ரூ. 30 இலட்சம் வரையிலான கடனுக்குக் கிளை அலுவலகங்களையும் அதற்கு மேற்பட்ட தொகைக்குத் தலைமை அலுவலகத்தையும் தொடர்பு கொள்ள வேண்டும்.

தலைமை அலுவலகங்கள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், 473, அண்ணாசாலை, நந்தனம், சென்னை–35.

கிளை அலுவலகங்களில் சில:

1. 134, கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை–06.

2. 5, நிக்கோலஸ் சாலை, சேத்துப்பட்டு, சென்னை–31.

3. சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை–38,

4. சி–48, 2–வது அவென்யூ, வீட்டு வசதிக்கழக வளாகம், அண்ணாநகர், சென்னை–40.

5. ஜவான்ஸ் பவன், 27, டி.பி. சாலை, கோவை–18.

6. பாரதி சாலை, ஆர்காட் உட்லண்ட்ஸ் 3–வது மாடி, கடலூர்–1.

7. பிளாட் எண்: 9, ஸ்பென்1ர் காம்பவுண்ட், திருவள்ளுவர் சாலை, திண்டுக்கல்–3.

8. 7, 2–வது குறுக்கு, 2–வது மாடி, காமராஜ் காலனி, ஓசூர்.

9. 33, முதல் மாடி செங்குந்தபுரம், 5–வது குறுக்கு, கரூர்–2.

10. 18/77–பி, ரயில்வே பீடர் ரோடு, வெள்ளிப்பட்டினம், ராமநாதபுரம்.

11. 3, முதல் மாடி, ஜெனநாதன்ஸ் பழைய டி.வி.எஸ். சாலை, பங்களாமேடு, தேனி.

12. 4–ஏ, லட்சுமிபுரம், பைபாஸ் சாலை, திருவண்ணாமலை–2.

13. 33, தெற்கு மெயின் தெரு, ஐ.ஓ.பி. பில்டிங், தஞ்சாவூர்–9.

14. கே.ஆர்.டி. பில்டிங், 2–வது மாடி, 33, புரோமேனோடு சாலை, கண்டோன்மென்ட், திருச்சி–1.

15. 4/35, என்.பி.எல். காம்ப்ளக்ஸ், பஸ் நிலையம் அருகில், தூத்துக்குடி–2.

16. 12, ஆறுமுகம் லே–அவுட் முதல் மாடி, முதல் தெரு, விழுப்புரம் டவுன், விழுப்புரம்.

17. திருவள்ளுவர் பில்டிங், 176/ஜி3, திருவனந்தபுரம் சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி–3.

***

## 87. வேலைவாய்ப்பு அலுவலகங்கள்

1. மண்டலத் துணை இயக்குனர் (வேலைவாய்ப்பு), மண்டலத்துணை இயக்குனர் அலுவலகம், எண் 140, குயில் தோட்டம், ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை, முதல் மாடி, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை–600 004.
2. மண்டலத் துணை இயக்குனர் (வேலை வாய்ப்பு), மண்டலத் துணை இயக்குனர் அலுவலகம், துடியலூர் அரசு ஐ.டி.ஐ. வளாகம், மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர்–641029.
3. மண்டலத் துணை இயக்குனர் (வேலை வாய்ப்பு) மண்டலத் துணை இயக்குனர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், அரசு ஐ.டி.ஐ. வளாகம், கே.புதூர், மதுரை–625 007.
4. மண்டலத் துணை இயக்குனர் (வேலை வாய்ப்பு) மண்டலத் துணை இயக்குனர், அலுவலகம் மாவட்ட நல நிதிக்குழு, வணிக வளாகம், 16, வில்லியம்ஸ் ரோடு கண்டோன்மெண்ட், திருச்சி–620 001.
5. உதவி இயக்குனர், மாவட்ட வேலைவாய்ப்பு, அலுவலகம் வல்லம் ரோடு, தஞ்சாவூர்–613 007.
6. உதவி இயக்குனர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண். 23, வில்லியம்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி–01.
7. உதவி இயக்குனர், மாவட்ட வேலைவாய்ப்பு, அலுவலகம் அரசினர் ஐ.டி.ஐ. வளாகம், துடியலூர். மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர்–641029.
8. உதவி இயக்னுனர், தொழில் மற்றும் செயல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண். 140, குயில் தோட்டம், ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை, முதல் மாடி, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை – 600 004.
9. உதவி இயக்குனர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், அரசு ஐ.டி.ஐ. வளாகம், மதுரை–625007.
10. உதவி இயக்குனர், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், எண். 16, சின்னைய்யா தெரு வடக்கு மரவனேரி, சேலம்–636007.
11. உதவி இயக்குனர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் சிறப்பு அலுவலகம், எண், 10–20 ஆற்காடு ரோடு, காகிதப்பட்டரை, வேலூர்–632012.
12. உதவி இயக்குனர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் சிறப்பு அலுவலகம், மே.பா. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வண்–23, வில்லியம்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி–620 001.

13. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 57, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, திண்டுக்கல்–624 603.

14. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், ரெயில்வே பீடர் ரோடு, கே.டி.எம். காம்ப்ளக்ஸ், இராமநாதபுரம்–623 501.

15. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், வார்டு எண்–16, கதவு எண்–1385, நேருஜி ரோடு, தேனி–625 531.

16. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 20–15–15ஏ, துறையூர் ரோடு, பெரம்பலூர்.

17. தொழில்முறை வழிகாட்டும் அலுவலகர், தொழில் முறை வழிகாட்டும் அலுவலகம், 57 இ, ஜஸ்டின் வில்லா, ஓல்டு கார்டன் ரோடு, உதகமண்டலம்–643001.

18. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 80.9 எச்.ஆர்.என்.ரோடு விருப்பாட்சிபுரம், தர்மபுரி.

19. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், தொழில் நுட்பப் பிரிவு, 140, குயில் தோட்டம், ஜெயப்பிரகாஷ் நாராயணன் மாளிகை, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை–600 004.

20. உதவி இயக்குனர், பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் அலுவலகம், எண்–51, பழைய டிஸ்ட்ரிக்ட் கோர்ட் கட்டிடம், கொக்கரக்குளம், திருநெல்வேலி–627009.

21. உதவி இயக்குனர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிலையம், அரசினர் ஐ.டி.ஐ. வளாகம், துடியலூர், மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர்–641 029.

22. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண். 1.16 எ.எ. ரோடு, விருதுநகர்–625001.

23. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், பிளாட் எண்–4, 5 மற்றும் 6, கதவு எண் 1, சி.பி. நாயுடு தெரு, திருவள்ளூர்–602001.

24. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், அரசினர் ஐ.டி.ஐ. வளாகம், செம்மண்டலம், கடலூர்–607001.

25. உதவி இயக்குனர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண். 140, குயில் தோட்டம், ஜெய்ப்பிரகாஷ் நாராயணன் மாளிகை, முதல் மாடி, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை–600 004.

26. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், (உடல் ஊனமுள்ளோர்) எண்–140, குயில் தோட்டம், ஜெய்ப்பிரகாஷ் நாராயணன் மாளிகை, முதல் மாடி, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை–600 004.

27. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 14, அரசினர் ஐ.டி.ஐ. வளாகம், கோரப்பள்ளம், தூத்துக்குடி–628101.

28. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 56, டீச்சர்ஸ் காலனி, காமராசர் அவென்யூ, அடையாறு, சென்னை –600020.

29. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எத்திராஜ் கல்யாண மண்டபம், நாகை சாலை, திருவாரூர்–610001.

30. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 14, 38 பி மாம்பழபட்டு ரோடு, விழுப்புரம்–605 602.

31. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 5, – கிழக்கு மெயின் ரோடு, காந்திநகர், திருவண்ணாமலை–606601.

32. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண் 69, ஏ.எஸ்.எஸ். 1223–1225, பெருமாள் வடக்கு தெரு, நாகப்பட்டினம்–611001.

33. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண்–122, தெற்கு ரத வீதி, சிவகங்கை–623560.

34. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 56, காமரா4ர் தெரு, கரூர்–639001

35. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 20, ஏ 4வது கிராஸ் தெரு, கோ–ஆப்ரெடிவ் காலனி, கிருஷ்ணகிரி–635001.

36. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண்–5391, மார்த்தாண்டபுரம் 2வது தெரு, புதுக்கோட்டை–622001.

37. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 57, ஜஸ்டின் வில்லா, ஓல்டு கார்டன் ரோடு, உதகமண்டலம்–643001.

38. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், 58, இராமவர்மாபுரம், கன்னியாகுமரி, இருப்பு நாகர்கோவில்–629001.

39. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண் 51, பழைய டிஸ்ட்ரிக்ட் கோர்ட் பில்டிங், கொக்கிரக்குளம், திருநெல்வேலி–627009.

40. உதவி இயக்குனர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், நெ. 11, வைகுண்டபெருமாள் கோயில் சன்னதி தெரு, காஞ்சிபுரம்–603502.

41. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண்–386, கொன்டிசெட்டிப்பட்டி கிராமம், மோகனூர் ரோடு, நாமக்கல்–637002.

42. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண்–19–20, ஆற்காடு ரோடு, காகிதப்பட்டரை, வேலூர்–632012.

43. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், தொழில்நெறி வழிகாட்டும் நிலையம், அரசினர் ஐ.டி.ஐ. வளாகம், செம்மண்டலம், கடலூர்–607001.

44. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், (தொழில்நுட்பப் பிரிவு), அரசினர் ஐ.டி.ஐ. வளாகம், துடியலூர், மேட்டுப்பாளையம் ரோடு, கோவை–6410929.

45. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், எண்–4, பெருமாள் கவுண்டர் காடு, சென்னிமலை ரோடு, ஈரோடு–638002.

***

### 88. கல்வி உதவித்தொகை பற்றிய விவரங்கள் (Scholarships)

அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கான உதவித் தொகை திட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் மூலம்

தற்போது வழங்கப்படும் உதவித்தொகை மற்றும் பெற்றோரின் வருமானவரம்பு பற்றிய விபரங்களை அந்தந்த கல்வி நிலையங்களை அணுகித் தெரிந்து கொள்ளவும்.

| வ. எண். | உதவித்தொகை பெயர் | உதவித்தொகை அனுமதிக்கப்படும் மற்றும் தொகையின் விவரம் | தகுதி நிபந்தனைகள் | விண்ணப்பிக்க வேண்டிய முகவரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | மாநில அரசு உயர் கல்வி கடன் படிப்புதவித் தொகை | பட்ட வகுப்பு, பட்ட மேற்படிப்பு, தொழிற் கல்வி, எம்.பில். ஆராய்ச்சி பட்டம் | 1. தகுதியுள்ள பொதுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண்கள் 2. பெற்றோருக்கான வருமான வரம்பு உண்டு. | சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குனரால் ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் தினசரி செய்தித் தாள் மூலம் விண்ணப்பங்கள் கோரி விளம்பரம் செய்யப்படும். |
| 2. | ஆதிதிராவிடர் பழங்குடியினராக இருந்து மதம் மாறியவர்களுக்கான தகுதி மானியம் | மேல்நிலைப்பள்ளி +2 வகுப்பு முடித்து மேற்கல்வி தொடரும் மாணவ–மாணவி களுக்கு வழங்கப் படும் ஒரு நேர ஊக்கத்தொகை | 1. மேல்நிலைப்பள்ளி பொதுத்தேர்வில் ஒரே முயற்சியில் தேர்ச்சி பெற்று 60 சதவிதம் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். 2. ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் இவற்றிலிருந்து மதம் மாறிய மாணவ மாணவிகளாக இருக்கும். | சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குநரால் ஜூன்/ஜூலை மாதங்களில் தினசரி செய்தித் தாள் மூலம் விண்ணப்பங்கள் கோரி விளம்பரம் செய்ப்படும். |
| 3. | தமிழ்வழி ஊக்கத்தொகை | தமிழ்மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டு இளங்கலை மற்றும் இள அறிவியல் பட்ட வகப்பில் பயிலும் மாணவ/மாணவியர் களுக்கு வழங்கப் படுவது. | தமிழ்மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டிருக்க வேண்டும். | கல்லூரி முதல்வர் களிடம் இருந்து விவரங்கள் பெறப் பட்டு சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குனரால் ஒப்பளிப்பு செய்யப்படும். |
| 4. | ஈ.வெ.ரா. நாகம்மை நினைவு மகளிர் இலவச படிப்புத் திட்டம் | பட்டப்படிப்பு கல்விக் கட்டண சலுகை | மாணவிகளின் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பு உண்டு. | தகுதி வாய்ந்த மாணவிகள் கல்லூரி முதல்வ ருக்கு விண்ணப் பிக்க வேண்டும். முதல்வர்களிடம் இருந்து பெறப்பட்டு சென்னை–6 கல்லூரிக் கல்வி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இயக்குனரால் ஒப்பளிப்பு செய்யப்படும். (கல்விச் சலுகை மட்டும்) |
| 5. | பள்ளி ஆசிரியர் பிள்ளைகளுக்கான மாநில படிப்புதவித் தொகை | முதுநிலைப்பட்டம் வெளி மாணவர் களுக்கு | பெற்றோர், பள்ளி ஆசிரியர்களாக இருக்க வேண்டும். பட்டப்படிப்பில் பெற்ற அதிகபட்ச மதிப்பெண் அடிப்படையில் தெரிவு செய்யப் படும் வருமான வரம்பு இல்லை. | ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தி லிருந்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டு கல்லூரி முதல்வ ரிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒப்பளிப்பு செய்யப்படும். |
| 6. | மாநிலக் கல்லூரிக் கல்வி படிப்புதவித் தொகை | பட்டப்படிப்பு மேற்படிப்பு பட்டப்படிப்பு பட்ட மேற்படிப்பு முகமதியர்கள், கைம்பெண்கள் சென்னை ராணிமேரிக் கல்லூரி மாணவிகள், கீழ்த்திசை பயில்வோர் | பெற்றோர், ஆண்டு வருமானம், வரம்புண்டு மனு செய்தவர்களில் மதிப்பெண் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். வேறு வகையான நிதி உதவி ஏதும் பெறக்கூடாது. மொழிகள் விண்ணப்பத்துடன் வட்டாட்சியரிடமிருந்து வருமானச் சான்று பெற்று அனுப்புதல் வேண்டும். | ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தி லிருந்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டு முதல்வரிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒப்பளிப்பு செய்யப்படும். |
| 7. | இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியை பாட மாகப் பயிலும் மாணவ– மாணவி களுக்கான படிப்பு உதவித்தொகை | மேல்நிலை வகுப்பு பட்டப்படிப்பு ஆசிரியர் பயிற்சி வகுப்பு விசாரத் எம்.ஏ. எம்.பில். (இந்தியில் பயில்வதற்கு) | தகுதியுள்ள பொதுத் தேர்வில் இந்தியில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் தெரிவு செய்யப்படும். | ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பத்திரிகை மூலம் தகுதியான மாணவ மாணவிகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு சென்னை–6 கல்வி இயக்குநரால் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | தெரிவு செய்யப்பட்டு தெரிவுப் பட்டியல் மைய அரசுக்கு அனுப்பப்படும். |
| 8. | ராணுவத்தில் பணிபுரிவோர் குழந்தைகளுக்கான படிப்பு உதவித் தொகை | பட்டப்படிப்பு வகுப்பு கல்வி மற்றும் சிறப்புக் கட்டணங்கள் (பல்கலைக் கழக கட்டணங்கள் தவிர்த்து) முதல்வரால் ஒப்பளிப்பு செய்யப்படும். | தரைப்படை விமானப்படை மற்றும் கப்பற்படையில் பணிபுரியும் பணியாளர் குழந்தைகள் மற்றும் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். பணியில் இருக்கும் போது காணாமல் போனவர்கள், மரணம் அடைந்த, காயம்பட்ட படை வீரர்களின் குழந்தைகளுக்கும் இச்சலுகையுண்டு. | சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தி லிருந்து ஜூலை மாதங்களில் கல்லூரி முதல்வர் வழி தகுதியுடையவர் களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படும். |
| 9. | முன்னாள்படை வீரர் குழந்தை களுக்கான படிப்பு உதவித் தொகை | பட்டப்படிப்பு வகுப்பு வ.எண். 8–ல் குறிப்பிட்டு உள்ளவாறே வழங்கப்படும். | முன்னாள்படைவீரர் குழந்தைகளாகவோ முற்றிலும் சார்ந்தவ ராகவோ இருக்க வேண்டும். வருட வருமான வரம்பு உண்டு. | சென்னை–6 கல்லூரிக்கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஜூலை மாதங்களில் கல்லூரி முதல்வர் வழி தகுதியுடைய வர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படும். |
| 10. | சுதந்திரப் போராட்ட தியாகிகளின் குழந்தைகளுக்கான படிப்பு உதவித் தொகை | பட்டப்படிப்பு வகுப்பு வ.எண். 8–ல் குறிப் பிட்டுள்ளவாறே வழங்கப்படும். | பெற்றோர் மூன்று மாதங்களுக்கு குறையாமல் சிறைவாசம் சென்றிருக்க வேண்டும். | சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஜூலை மாதங்களில் கல்லூரி முதல்வர் வழி தகுதி உடையவர்களிட மிருந்து விண்ணப்பம் கோரப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| 11. | இந்திய பாகிஸ்தான் போரில் ஊனமுற்ற மரணமடைந்த வீரர்களின் குழந்தைகளுக்கான படிப்பு உதவித் தொகை | பட்டப்படிப்பு வகுப்பு எண்.8–ல் குறிப்பிட்டுள்ள வாறே வழங்கப்படும் கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் முதல்வரால் ஒப்பளிக்கப்படும் விடுதியில் படித்தால் முழு விடுதிக் கட்டணம் புத்தகம், எழுது பொருள் மற்றும் சீருடை கட்டாயமாக இருப்பின் அதற்கான முழுத்தொகை கல்லூரிக்கல்வி இயக்குநரால் ஒப்பளிப்பு செய்யப்படும். | இந்திய பாகிஸ்தான் எல்லைப் போரில் மரணமடைந்த (அ) காயமடைந்து உடல் ஊனமுற்ற ராணுவ வீரர்களின் குழந்தைகளாக இருத்தல் வேண்டும். | சென்னை–6 கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஜூலை மாதங்களில் கல்லூரி முதல்வர் மூலம் தகுதி யுடையவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படும். |
| 12. | அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி முழுநேர ஆராய்ச்சி பயிலும் மாணவர் களுக்கு உதவித் தொகை பயிற்றுத் திட்டம் | 12 மாதங்களுக்கு வழங்கப்படும். | | ஒவ்வொரு ஆண்டும் பத்திரிக்கை மூலம் விளம்பரம் செய்யப்பட்டு அனுப்பப்படும். தகுதியுள்ள மாணவர்களிடம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யப் படுவார்கள். |
| 13. | பணிக்காலத்தில் மரணமடைந்த அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்கான படிப்பு உதவித் திட்டம் | பணிக்காலத்தில் மரணமடைந்த அரசு ஊழியர்களின் பிள்ளைகளுக்குக் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் திரும்ப அளிக்கப்படுகிறது. | | |

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மாணவர்களுக்கு வழங்பப்படும் கல்வி உதவித் தொகைகள்

| வ. எண். | திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|---|---|
| 1. | 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்புக்கு மத்திய அரசு போஸ்ட் மெட்ரிக் கல்வி | 1. இத்திட்டத்தின் கீழ் 11ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் விடுதியில் அல்லாமல் பெற்றோருடன் தங்கிப் படிக்கும் மாணவ / மாணவி யர்க்கு மாதம் ரூ. 230/–லிருந்து ரூ. 550/– வரை படிப்பை பொறுத்து பராமரிப்புத் தொகை வழங்கப்படும். | ஆதி திராவிடர், மாணவ / மாணவியர் பெற்றோர் பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2,00,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். | பள்ளித் தலைமை ஆசிரியர்/கல்லூரி முதல்வர் |
| | | 2. விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ / மாணவியர்க்கு மாதம் ரூ. 380/–லிருந்து ரூ. 1200/– வரை படிப்பை பொறுத்து பராமரிப்புத் தொகை வழங்கப்படும். | | |
| | | 3. இவை தவிர அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவ / மாணவியர் அக்கல்வி நிலையத்திற்கு செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப் படுகிறார்கள். | | |
| | | 4. சுயநிதி பொறியியல் மருத்துவ கல்வி நிறுவனங்களில் பயிலும் (சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் | ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவ / மாணவியர் பெற்றோர் | கல்லூரி முதல்வர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உட்பட) அனைத்து விதமான படிப்புகளுக்கும் இலவச / கட்டண இருக்கைகளில் பயிலும் ஆதிதிராவிடர்/பழங் குடியினர் மாணவ/ மாணவியர்கள் பயன் பெறும் வகையில் திருப்பி செலுத்தப் படாத அனைத்து கட்டாயக் கட்டணங் களையும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கு அரசு நியமித்த சுயநிதிக் கல்லூரிகளுக்கான கட்டணக்குழு நிர்ண யித்த திருப்பி செலுத்தப்படாத கட்டாய கட்டணம் அனைத்தையும் மைய அரசின் உதவித் தொகை திட்டத்தின் கீழ் வழங்கப்படும். | பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2,00,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். மதம் மாறிய கிறித்தவ ஆதிதிராவிடர் மாணவர்களின் பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். | |
| | மேற்கல்விக்கான ஸ்பெஷல் ஸ்காலர்ஷிப் | பட்டப்படிப்பிற்கு ரூ.7500/– ஆண்டுக்கு. முதுகலை, புரபஷனல் படிப்புகளுக்கு ரூ.8,000/–ஆண்டுக்கு. | பெற்றோர் / பாதுகாவலர் வருமானம் ரூ. 1 லட்சத்திற்கு மிகாமல் | கல்லூரி முதல்வர் |
| 2. | தூய்மையற்ற தொழில்புரிவோர் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை (உலர் கழிப்பிடம் சுத்தம் செய்வோர், தோல் பதனிடுவோர் போன்றவர்களின் பிள்ளைகள்) | 1. பெற்றோர்களுடன் தங்கிப் படிப்பவர் களுக்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ / மாணவி யர்க்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். | ஆண்டு வருமானம் மற்றும் சாதி மத பேதம் ஏதுமில்லை. | பள்ளித் தலைமை ஆசிரியர் |
| | | 2. பெற்றோருடன் தங்கிப் படிப்பவர் களுக்கு 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை மாதம் ரூ, 110/– | உதவித்தொகை 10 மாதங்களுக்கு வழங்கப்படும். | |
| | | 3. விடுதி மாணவர் களுக்கு 3 முதல் 10 ஆம் வகுப்பு வரை | | |

| | | |
|---|---|---|
| | மாதம் 700/– இது தவிர விடுதி சாரா மாணவ/மாணவியர்க்கு ரூ. 1000/–ம் ஒட்டு மொத்த தொகையாக வழங்கப்படும். | |

மேலும் விவரங்களுக்கு ஆணையர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை – 600 005. மற்றும் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறை அதிகாரியை அணுகலாம்.

### 1. தேசிய திறனாய்வுத் தேர்வு மூலம் கல்வி உதவித் தொகை

தேசிய அளவில் கல்வியில் திறமை மிகு பத்தாம் வகுப்பு மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதம் ரூ. 500 கல்வி உதவித்தொகை அளிக்கிறது. நேஷனல் கவுன்சில் ஆஃப் எஜுகேஷனல் ரிசர்ச் அண்ட் டிரெயினிங் அமைப்பு.

1963 ஆம் ஆண்டு முதல் இந்தத் தகுதித் தேர்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் தேர்வு கடந்த ஆண்டு வரை எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்க மட்டுமே நடத்தப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இந்தத் தேர்வு பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வு முழுக்க முழுக்க மாணவர்களின் அறிவியல், சமூக அறிவியல், கணிதம் போன்ற பாடங்களில் மாணவர்கள் பெற்றிருக்கும் திறமையை சோதிக்கும் வகையில் இந்தத் தேர்வு அமைந்திருக்கும்.

இந்தத் தேர்வு இரண்டு கட்டங்களாக நடைபெறும். முதல் கட்டத் தேர்வு மாநில அளவில் நடைபெறும். இந்தத் தேர்வு இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதியில் கேட்கப்பட்டிருக்கும் கேள்வித்தாள் முற்றிலும் மெண்டல் எபிலிட்டி தேர்வாக இருக்கும். முதல் பகுதியில் உள்ள கேள்வித்தாளில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகள் முற்றிலும் பத்தாம் வகுப்பு பாடத்திட்டத்தை ஒட்டியே அமைந்திருக்கும். இரண்டாம் பகதி தேர்வு ஸ்கோலஸ்டிக் ஆப்டிட்யூட் டெஸ்ட் என்று அழைப்பார்கள். இந்தத் தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் வரலாறு, குடிமையியல், புள்ளியில், பொருளாதாரம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாடங்களில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். இந்தத் தேர்வு நவம்பர் மாதம் நடைபெறும்.

இந்த எழுத்துத் தேர்வுக்கான முடிவு அடுத்த ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்படும். இந்த முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெறும் மாணவர்கள் 4000 மாணவர்களை மட்டும் இரண்டாம் கட்டத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இரண்டாம் கட்டத் தேர்வு தேசிய அளவில் நடைபெறும். இந்தத் தேர்வும் இரண்டு பகதிகளாக நடைபெறும். முதல் பகுதித் தேர்வு மெண்டல் எபிலிட்டி தேர்வாக நடைபெறும். இரண்டாம் கட்டத் தேர்வில் கேட்கப்படும் கேள்வித்தாள் முற்றிலும் 10ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு பாடப் புத்தகங்களின் அடிப்படையில் கேட்கப்படும். இரண்டாம் கட்டத் தேர்வில் தேர்ச்சிப் பெறும் மாணவர்களின் விவரம் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்படும். தேர்வு செய்யப்படும் 1000 மாணவர்களில் 750 மாணவர்கள் பொதுப் பிரிவு மாணவர்களாகவும், 150 மாணவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பில் இருந்தும், 80 மாணவர்கள் பழங்குடியின வகுப்பில் இருந்தும், 20 மாணவர்கள் மாற்றுத் திறனாளி மாணவர்களாகவும் இருப்பர்.

தேர்வு செய்யப்படும் அனைத்து மாணவர்களுக்கும் மாதம் 500 ரூபாய் வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்களை நேஷனல் கவுன்சில் ஆஃப் எஜுகேஷனல் ரிசர்ச் அண்ட் டிரெயினிங் இணையதளத்தில் இருந்து டவுண்லோட் செய்து கொள்ளலாம்.

தொடர்பு முகவரி : தேர்வு அலுவர், என்.சி.இ.ஆர்.டி.
ஸ்ரீ அரபிந்தோ மார்க், புதுதில்லி – 16.
மற்றும் அரசு தேர்வுகள் இயக்குனர், கல்லூரி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை–6.
போன் : 044 – 28272088
விவரங்களுக்கு : **www.ncert.nic.in**

### 2. மெரிட் கம் மீன்ஸ் ஸ்காலர்ஷிப் (Merit Cum Means Scholarship)

மத்திய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகம், சிறுபான்மை இனத்தவர்களில் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களிலிருந்து நன்றாகப் படிக்கும் மாணவ மாணவியருக்கு நிதி உதவி வழங்குகின்றது. இதன்படி முஸ்லீம், கிருஸ்துவர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்ஸி இனத்தைச் சேர்ந்தவர்கள் பயன்பெறலாம். புரபஷனல்/டெக்னிகல் கோர்ஸ்களில் இளங்கலை அல்லது முதுகலை கோர்ஸ்களில் படிக்க இவ்வுதவித் தொகை வழங்கப்படும்.

**தகுதி :** 1. முந்தைய ஆண்டு இறுதித் தேர்வில் 50% குறைவில்லாமல் மார்க் வாங்கியிருக்க வேண்டும்.

2. பெற்றோர் / பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 2 லட்சத்திற்கு மேல் இருக்கக் கூடாது.

**மேலும் விவரங்களுக்கு :**

தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் நலத்துறை
எண் : 807, (5வது மாடி) அண்ணா சாலை – 600 002.
போன் : 044–2850033. பேஃக்ஸ் : 28544545.
இமெயில் : **tnminoritieswelfare.yahoo.com**
வெப் : **www.momascholarship.gov.in**

***

### 89. பள்ளிக்கல்வி – தனித்தேர்வுகள்

பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்ட மாணவ–மாணவியர்கள் தமிழ்நாடு அரசு நடத்தும் தனித்தேர்வுகள் எழுதி 8–ஆம் வகுப்பு, 10–ம் வகுப்பு, +2 பொதுத் தேர்வுகளில் தேர்ச்சி பெறலாம்.

**8–ம் வகுப்பு தனித்தேர்வு :** தமிழ்நாடு அரசு தேர்வுகள் இயக்குனரகம் நடத்தும் தனித்தேர்வில் நேரடியாக 8ம் வகுப்பு தேர்வு எழுதலாம். இத்தேர்வு எழுத அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளில் 5வது வகுப்பு தேர்வில் பெற்றிருக்க வேண்டும். வயது 12½ பூர்த்தி ஆகியிருக்க வேண்டும். ஆண்டுக்கொருமுறை டிசம்பர் மாதத்தில் நடத்தப்படும். இத்தேர்வுக்கான அறிவிப்பு பத்திரிக்கைகளில் வெளிவரும் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திய மாணவர்களுக்க தொடர்ந்து படிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் இத்தேர்வு நடத்தப்படுகின்றது.

**10–ஆம் வகப்புத் தனித்தேர்வு :** அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் பயின்று 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும், தனித்தேர்வுகளுக்கான 8–ம் வகுப்பு பொது தேர்வில் ஆங்கிலப் பாடம் உட்பட ஐந்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றவர்கள் 14½ வயது நிறைவடைந்திருக்கும் பட்சத்தில், நேரடித் தனித்தேர்வராக 10–ம் வகுப்பு எழுத விண்ணப்பிக்கலாம்.

***12–ம் வகுப்பு தனித்தேர்வு :*** மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 படிக்காமலேயே பத்தாம் **(SSLC)** வகுப்பு தேறியவர்களும் தனித் தேர்வாளர்களாக மேல்நிலைப் பொதுத் தேர்வு எழுத முடியும். அத்தகைய தேர்வாளர்கள் பகுதி **I**–ல் மொழிப் பாடத்தையும், பகுதி **II**–ல் ஆங்கிலத்தையும், பகுதி **III**–ல் பொதுக் கல்விப் பட்டியலிலுள்ள தொகுதிகளில் ஏதேனும் ஒரு தொகுதியை **(Group)** விருப்பப் பாடமாகவும் கொள்ள வேண்டும்.

***தனித் தேர்வாளருக்கான தகுதி : (12ம் வகப்பு தனித்தேர்வுக்கு)***

வயது : மார்ச்–ஏப்ரல் தேர்வுக்கு ஏப்ரல் முதல் தேதியன்று வயது **16½** ஆண்டுகள் பெற்றிருத்தல் வேண்டும். செப்டம்பர்–அக்டோபர் தேர்வுக்கு அக்டோபர் முதல் தேதியன்று வயது **16½** ஆண்டுகள் முழுமை அடைந்திருக்க வேண்டும்.

***குறைந்தபட்ச கல்வித் தகுதி :***

**SSLC** (பத்தாம் வகுப்பு அல்லது பதினொன்றாம் வகுப்பு) பொதுத் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் குறைந்தது 40% மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். அல்லது மாநில இடைநிலைக் கல்வி முறையில் பத்தாம் வகப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம்.

***இருவருட இடைவெளி :***

**(G.O. M.s. No. 1171, Education Dated 27th Nov. 1992) SSLC** தேறிய வருடத்தில் இருந்து இரு ஆண்டுகள் இடைவெளி விட்ட பின்பே, தனித் தேர்வுகள் மேல்நிலைப் பொதுத் தேர்வு எழுத முடியும்.

**கேட்டல் / ஒப்புவித்தல் தேர்வு (Aural / Oral Test) :**

மொழிப் பாடத்தின் (பிரிவு–**I**) இரண்டாம் தாளிலும், ஆங்கிலப் பாடத்தின் (பிரிவு–**II**) இரண்டாம் தாளிலும் செய்முறைத் தேர்வுக்கென 20 மதிப்பெண்கள் வைக்கப் பட்டுள்ளன. தேர்வாளர்கள், அவர்கள் பொதுத் தேர்வு எழுதக் கூடிய தேர்வு மையங்களிலேயே இந்தச் செய்முறைத் தேர்வுகளை எழுத வேண்டும். அவ்வாறு பெறும் மதிப்பெண்களே இறுதியாகும். பொதுத் தேர்வில் தோல்வியடைந்த மாணவர்கள் மறுபடியும் தேர்வெழுதும்போதும், முன்னர் தேர்வில் எடுத்த மதிப்பெண்களே எடுத்துக் கொள்ளப்படும்.

**மேலும் தகவல்களுக்கு :**

கூடுதல் செயலர் (மேல்நிலைக்கல்வி), தேர்வுக்கல்வி இயக்குநர், கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

***உயர்கல்விக்குச் சில இணைய முகவரிகள்***

| | |
|---|---|
| egurucool.com | schoolnet.ca |
| indiaacecocommerce.com | learnteach.com |
| cyberbee.com | kidsedge.com |
| indiaedu.com | campusmatters.com |
| educationinfoindia.com | mytutor.com |
| online-education.com | onlineteacher.com |
| netcyberlawcollege.com | cyberschools.com |
| education.eth.net | mindedge.com |
| indiastudycentre.com | goals.com |
| educationaddress.com | onlineteacher.cc |
| edufind.com | familyeducation.com |

| | |
|---|---|
| learningalive.uk | zeelearn.com |
| education-world.com | teachlearning.com |
| educationworldwide.itgo.com | sitealive.com |
| geteducated.com | educationplanet.com |
| socialstudiesplanet.com | onlineschoolard.com |
| elearnaid.com | e-learnng.com |

✲✲✲

## 90. அகில இந்திய அளவிலான முக்கிய நுழைவுத் தேர்வுகள்

| வ.எண். | நுழைவுத்தேர்வு | கல்வித் தகுதி | நடத்தும் நிறுவனம் |
|---|---|---|---|
| 1. | அகில இந்திய மருத்துவ மற்றும் பல் மருத்துவ நுழைவுத்தேர்வு National Eligibiligy cum Entrance Test (NEET) | +2 தேர்ச்சி (இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் ஆங்கிலம்) | The Assistant Secretary. Central Board of Secondary Education, National Eligibility cum Entrance Test (NEET) Shiksha Kendra, 2, Community Centre, Preet Vihar, Delhi - 110 092. |
| 2. | அகில இந்திய கால்நடை மருத்துவ அறிவியல் நுழைவுத் தேர்வு AIVSEE | +2 தேர்ச்சி (இயற்பியல், வேதியியல், உயிரியல், ஆங்கிலம் அல்லது இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், ஆங்கிலம்) | Verterinary Council of India, 16/15, W.E.A. Aryasamaj Road, Karol Bagh, New Delhi - 110 005. www.dahd.nic.in. www.vei.india.in |
| 3. | Hotel Managment Joint Entrance Examination | +2 தேர்ச்சி (ஆங்கிலப் பாடம் கட்டாயமாகக் கற்றிருக்க வேண்டும்) | National Council for Hotel Management and Catering Technology. Pusa Complex, New Delhi - 110 012. www.nchmct.org. |
| 4. | National Fashion Technology Entrance Examination | +2 தேர்ச்சி (இயற்பியல், வேதியியல், கணிதம் பாடங்கள் கற்றிருக்க வேண்டும்) | National Institute of Fashion Technology, Near Gulmohar Park, Hauz, Khas, New Delhi - 110 016. Phone : 011-26965080. |

| வ.எண். | நுழைவுத்தேர்வு | கல்வித் தகுதி | நடத்தும் நிறுவனம் |
|---|---|---|---|
| 5. | **All India Agricultural Sciences Entrance Examination** | +2 தேர்ச்சி | Indian Council of Agricultural Research (ICAR) New Delhi. www.icar.org.in |
| 6. | **NIT Joint Entrance Examination JEE (MAIN)** | +2 தேர்ச்சி | Central Board of Secondary Education, 17 B, Indraprastha Estate, New Delhi - 110 002 www/ cbse.nic.in (விவரங்கள் : NITபிரிவில்) |
| 7. | **Indian Institute of Technology. Joint Entrance Examination (JEE) Main & Advanced** | +2 தேர்ச்சி | Indian Institute of Technology (விபரங்கள் : ஐ.ஐ.டி. பிரிவில்) |
| 8. | **Common Law A Admission Test (CLAT)** | +2 தேர்ச்சி | National Law Universities by rotation web : www.clat.ac.in |
| 9. | **Jipmer Entrance Test** | +2 தேர்ச்சி | JIPMER, Puducherry. |
| 10. | **CMAT** | ஏதாவதொரு பட்டப்படிப்பு | All India Council for Technical Education. www.aicte.cmat.in |
| 11. | **JMET** | **B.E., B.Tech.,** இணையான படிப்புகள் | Indian Institute of Technology (விவரங்கள் IIT தலைப்பின்கீழ்) |
| 12. | **GATE** | **B.E., B.Tech.** இணையான படிப்புகள் | **- do -** |
| 13. | **CAT (Common Admission Test)** | ஏதாவதொரு பட்டப் படிப்பு | Indian Institute of Management by rotation |
| 14. | **GPAT Graduate Pharmacy Aptitude Test** | +2 தேர்ச்சி | All India Council for Technical Education. www.aicte.india.org |
| 15. | **NATA (National Aptitude Test in Architecture)** | +2 தேர்ச்சி | The National Institute of Advanced Studies in Architecture (NIASA) |

***

**DISCLAIMER**

**The details furnished in the book are from the information obtained from various institutions, sources and from Public Domain. Although due care has been taken in the collection of information and printing, the publishers, printers, editors and owners are not responsible and cannot be made liable in any manner for mistakes or in-accuracy or ommisssions or errors or outdated information that may have inadvertently crept in.**

**- Publishers.**